# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

GAZETTEER
JAN
MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS
158



சுவாமி விவேகானந்தர் திருவுருவச் சிலை
கன்னியாகுமரி

மாலை 13] சாதாரண - தை - ஜனவரி, 1971 [மணி 4

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு.



வடஆற்காடு, செய்யாறு வட்டம், சுருட்டல் ஸ்ரீசங்கரேசுவரர் கோயில் மகா கும்பாபிஷேக விழாவில் காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ புதுப்பெரியவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல் (18-11-70)

## பொருளடக்கம்


1. திருவரங்கம் கோயில்
2. மணவாள மாமுனிகள்
3. ஆற்றுகிலாவழி
4. பாட்டுக்கொரு புலவன்
5. நம்மாழ்வாரும் மணவாள மாமுனிகளும்
6. சுவாமி விவேகானந்தர் நினைவாலயம்
7. சுழல்கோப்பைப் பரிசு பெறும் கோயில்கள்
8. ஸ்ரீசைலேச தயாபாத்ரம்
9. ஆலமர்வித்தின் அருங்குறள்
10. மகாபாரதம்
11. தவத்திரு வள்ளிமலைச் சுவாமிகள்
12. திருவாய்மொழியின் தெளிபொருள்
13. திருமாமகள்
14. வள்ளி தெய்வயானை
15. ஸ்ரீ வைஷ்ணவத் திவ்விய தேசங்கள்
16. திருமுறைகள் செய்த கலைப்புரட்சி
17. சிவஞான போதப் பொருள்நிலை


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆக சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாக சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமல் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது

—ஆசிரியர்.




GAZETTEER UNIT

மாலை 13 ] சாதாரண — தை — ஜனவரி, 1971 [ மணி 4

# திருவரங்கம் கோயில்

(முற்றொடர்ச்சி)

[ ந. ரா. முருகவேள், M. A., M. O. L. ]

## கோயிலின் அமைப்பு :

திருவரங்கநாதரின் கோயில் 10° 52' வடக்கிலும், 78° 42' கிழக்கிலும் ஆக, இந்திய நாட்டின் தென்பகுதியில் காவிரி கொள்ளிடம் என்னும் இரண்டு ஆறுகளுக்கு இடையில் அமைந்துள்ளது. இவற்றுள் கொள்ளிடம் என்பது, ஆண்டுதோறும் பெருகும் வெள்ளத்தினின்று இக்கோயிலைக் காப்பாற்றுவதற்காகச் செயற்கை முறையில் படைக்கப் பெற்றிருத்தல் கூடும். இலங்கையின் மீது படையெடுத்த சோழ அரசனாகிய முதலாம் இராசேந்திரன், [கி. பி. 1025-ஆம் ஆண்டு], இலங்கையினின்று சிறைப்பிடித்துக் கொணர்ந்த சிங்கள மக்களைக் கொண்டு, இவவேலையைச் செய்து முடித்தான் என்று செவிவழிச் செய்தி கூறுகின்றது. இக் கோயிலானது ஏழு பிராகாரங்களால் சூழப்

---

திருவரங்கம் கோயிலைப் பற்றிய இக்கட்டுரை, யுனெஸ்கோ நிறுவனத்தின் ஆதரவில் Miss Jeannine Auboyer என்னும் பிரான் சு நாட்டு அம்மையார் எழுதியுள்ள ஆங்கில நூலின் தமிழாக்கம் ஆகும்.

—ஆசிரியர்

JL QLm 211, N59TK N71·13·4
148686. 008

பெற்ற கருவறையைக் கொண்டுள்ளது. இப் பிராகாரங்களின் வாயிற் சுவர்களின் நடுவில், கோபுரங்கள் ஆகிய நினைவுச் சின்னம் அமைக்கப் பெற்றிருக்கின்றன. முதன்மையான வாயில் தெற்குநோக்கியுள்ளது. இது கிழக்குப்புறத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்னும் வழக்க மான முறைக்கு ஒரு விதிவிலக்காக அமைந் துள்ளது. இது குறித்து ஒரு புனை கதையும் இப்பகுதி மக்களால் கூறப்படுகின்றது. கோயி லின் பரப்பு 631000 சதுர மீட்டர்(156 ஏக்கர்) பரப்புள்ளது. இதன் சுற்றெல்லைப் பரப்பு 1116 கிலோமீட்டர் அல்லது 10710 சதுர அடி யாகும்.

இந்தியாவிலேயே திருவரங்கம் கோயில் தான் ஏழு பிராகாரங்களைக் கொண்டுள்ளது. இது ஒரு புனிதமான அடையாள எண்ணிக்கை யாகும். இந்நாளைய வைஷ்ணவ அன்பர்களின் கருத்தின்படி, இது யோக நெறியின் ஏழு ஆதாரங்களையும், மனித உடம்பிற்குக் காரண மாக உள்ள ஏழு தாதுக்களையும் குறிக்கின்றன. உடம்பினுள்ளே அதன் நடுவில் ஆத்மா என் னும்உயிர்இருப்பதுபோல,இக்கோயிலினுள்ளே நடுவில் உலகத்தின் உயிராகிய பரமாத்மா எழுந்தருளி விளங்குகின்றார். பிராகாரங்கள் அல்லது வீதிகள், நடுவில் அமைந்துள்ள கரு வறையாகிய விமானத்திலிருந்து தொடங்கி வெளிப்புறமாக எண்ணப்படுகின்றன.விமானம் நான்கு பொற் கலசங்கள் கொண்ட பொன்மய மான வட்டவடிவில் அமைந்திருக்கின்றது.

கோயிலுக்கு வெளியே தெற்கு. மேற்கு, வடக்குப் புறமாக ஒரு சாலை செல்லுகின்றது. அதன் மூலமாகச் சென்றால், தாமரை மலர்கள் நிறைந்த வட்ட வடிவமான குளத்தை அடைய லாம். அது மேற்குப் புறத்துக் கோபுரத்தின் அருகிலுள்ளது. கோயிலுக்காகப் பயிர் செய்யப் படும் தென்னந்தோப்புகளும், வயல் வெளி களும் இதற்கு அருகேயுள்ளன. மூன்று வெளிப் பிராகாரங்களில், கடைகள், சாவடிகள் வீடுகள் முதலியன நிறைந்து காணப்படுகின்றன. இவைகள் கோயிலின் பகுதிக்கு உள்ளே ஒரு நகரமாக அமைந்திருக்கின்றன. கோயிலைச் சுற்றிலும், அப்பாலும் இது சிதறி விரிந்து செல்லுகின்றது. 1961-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கின்படி 42,000 மக்கள் இங்கு வாழ்ந்து வந்தனர். 1871-ஆம் ஆண்டில் இங்கே நகராட்சி அமைப்பு ஏற்பட்டது. இக் கோயிலின் பொது அமைப்புப் பற்றிய பற்பல குறிப்புக்கள், பழைய இலக்கிய நூல்களுள் காணப்படுகின்றன. இதன் தெருக்களிலும் வீடுகளிலும்,கோயில் ஊழியர்களும் பிராம்மண பக்தர்களும் முற்காலத்தில் வாழ்ந்து வந்தனர். பிற்காலத்தில் இவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான தொழில்களைச் செய்யவும் பொருள்களை வழங்கவும் தொழிலாளர்களும், வாணிபர்களும்கூட இங்கு வாழத் தலைப்பட் டனர்.

இந்நாளில் இங்கே பற்பல திரளான கூட்டம் அழகுறக் கூடுவதைக் காணலாம். பூமாலை புனைபவர்கள், தெய்வப் படிவங்களை விற்பவர்கள் முதலிய பற்பலரைக் காணலாம். தூண்கள் அமைந்த முற்றங்களை உடைய அழகிய வீடுகள் இங்கே காணப்படுகின்றன. திருவிழாக்களில் உலா வரும் தேர்களுக்குரிய கூடாரங்கள், கோயில் யானைகளுக்குரிய அங்கி கள் முதலியன பல இங்குள்ளன. வரிசையான பல கோபுரங்கள் இங்கே அமைந்திருக்கின்றன. சிறு சிறு கோயில்களும், சந்நிதிகளும் இங்கு ஆங்காங்கே பலவிடங்களில் அமைந்துள்ளன. 'அடைய வளைந்தான்' என்னும் ஏழாம் திருமதில் பிராகாரத்தில் தெற்குக்கோபுரத்தின் அருகில் 'திருக்குறளப்பன்' என்னும் வாமன விஷ்ணுவின் கோயில், வழக்கொழிந்த பழைய சோழர் காலப் பாணியில், 15—16 ஆம் நூற்றாண்டு களில் கட்டப்பட்டிருக்கின்றது. தென்மேற்கு மூலையில் ஆண்டாள் நாச்சியாரின் வெளிப்புறக் கோயிலும், திருவரங்கநாதர் மீது காதல் கொண்ட டெல்லி சுல்தானின் மகளாகிய துலுக்க நாச்சியார் கோயிலும் அமைந்துள்ளன. நான்காம் பிராகாரத்தின் தென்மேற்கு மூலை யிலும் இந்நாச்சியாருக்கு ஒரு சந்நிதியும், அரங்கநாதருக்கு ஒரு சிறு கோயிலும் அமைந் துள்ளன.

ஏழாம் பிராகாரத்தில் கோபுரங்கள் முடிவு பெறவில்லை. அவைகள் இராயகோபுரம்

என வழங்கப்படுகின்றன. நாயக்க மன்னர்கள் கட்டத் தொடங்க மேற்கொண்ட கடைசிக் கட்டடங்களாக இவை தோன்றுகின்றன. கி. பி. 1751 முதல் 1758 வரை பிரெஞ்சுக் காரர்கள் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றிக் குடியேறியிருந்தமையின் காரணமாக, இக் கட்டிட நிலைகள் தடைப்பட்டிருக்கலாமென்று கருதப்படுகின்றது. இவற்றின் மிகப் பெரிய அடிப்படை அமைப்பைக் காணின், இவைகள் முடிவு பெற்றிருந்தால் குறைந்தது 60 மீட்டர் அளவுக்காவது, உயரமாக எழுப்பப்பெற்றிருக்கும் என்று கருதத் தோன்றுகின்றது. ஏனைய பிராகாரங்களிலுள்ள கோபுரங்கள் எல்லாவற்றையும்விட, மிக மிக உயரமான அளவில் கட்டப்படுவதற்கு, இது திட்டமிடப் பெற்றிருந்தது எனவும் தெரிகின்றது. இடைக் கால இந்து மதத்தின் தத்துவ நுட்ப விதிகளை ஒட்டி, இது அமைக்கப் பெற்றிருத்தல் கூடும்.

ஒரு பிராகாரத்திலிருந்து மற்றொரு பிராகாரத்திற்குக் கருப்பக்கிரகத்தை நோக்கி முன்னேறிச் செல்லும் ஒரு பக்தன்-பகவத் தியானத்தில் அழுந்தித் தன்னை மறந்த நிலையில், இவ்வுலகின் மாயத் தோற்றங்களை நீக்கிக்கொண்டு மெல்லிய சிறிய திருவிளக்கு ஏற்றி வைக்கப் பெற்றிருப்பதும், வரையறுக்கப்பட்டதும், இறைவன் எழுந்தருளி விளங்குவதும் ஆகிய அமைதியும் புனிதமும் மிக்க இடத்திற்கு இறுதியிற் சென்று அடைதல் வேண்டும். இச் சிறிய அழகிய பொன் விமானம், இங்ஙனம் அடையத்தக்க கருவறைச் சந்நிதியின் தனிப் பெரும் சிறப்படையாளமாகத் திகழ்கின்றது.

ஆறுவது பிராகாரம் **சித்திரை** அல்லது **கலியுகராமன் திருவீதி** எனப் பெயர் பெறும். அது நான்கு கோபுரங்களை உடையது. அவைகள் ஒய்சளர்களாலும் (13-ஆம் நூற்றாண்டு), பாண்டியர்களாலும் (14-ஆம் நூற்றாண்டு) கட்டப் பெற்றனவாகக் கூறப்படுகின்றன. கிழக்குக் கோபுரமாகிய கலியுகராமன்கோபுரம் என்பது, ஏனைய எல்லாக் கோபுரங்களையும் விட, அளவில் மிகவும் பெரியதாகத் திகழ்கின்றது. அது தனது ஒவ்வொரு முகத்திலும் 13-ஆம் நூற்றாண்டுக்குரிய எழுத்துக்களால் செதுக்கப்பெற்ற கல்வெட்டுக்களைக் கொண்டதாகத் திகழ்கின்றது. இந்தப் பிராகாரத்திலேயே பெருமாள் எழுந்தருளி நகர்வலம் செய்வதற்குரிய திருத்தேர்கள் வைக்கப் பெற்றிருக்கின்றன.

ஐந்தாம் பிராகாரமாகிய **உத்தர வீதியும்** கூட, பல குடியிருப்புக்களைக் கொண்டிருக்கின்றது அது வழக்கொழிந்த பழைய சோழர் கால பாணியில் அமைந்த **மணவாள மாமுனிகளின்** சந்நிதியை உட்கொண்டிருக்கின்றது. இந்தப் பிராகாரத்திற்கு அப்பால், கோயிலின் முறையான புனிதம் மிக்க பகுதி தொடங்குகின்றது. ஆதலின் இப்பகுதிக்குள் நுழைந்ததும், அனைவரும் தம் காலணிகளை மரியாதையின் அடையாளமாகக் களைந்து விடுதல் வேண்டும். இந்தப் பகுதியே எல்லாச் சமய சடங்குகளுக்கும் மையமாக அமைந்து விளங்குகின்றது.

நான்காம் பிராகாரம் **அகளங்கன் திருவீதி** அல்லது **ரங்கவாசல்** அல்லது **நான்முகன் கோபுரம்** என வழங்கப்படும். தெற்குப் புறத்தில் உள்ள வாயிலின் வழியாக, அதற்குள் செல்லுதல் வேண்டும். இந்துக்கள் அல்லாதவர்க்கு, அதன் ஒருபகுதி மட்டுமே திறக்கப்பெற்றிருக்கின்றது. இந்துக்கள் அல்லாதார் அதன் தென் சிறகிலுள்ள **வேணுகோபால கிருஷ்ணரின்** சந்நிதியைக் கண்டு களிக்கலாம். அதன் வெளிப்புறச் சுவர்கள் மிகவும் அழகிய உயிர்ப்புள்ள புடைப்பியற் சிற்பங்களால் அழகு செய்யப்பெற்றிருக்கின்றன. அதன் காலம், பல வகைகளில் சொல்லப்படுகின்றது. ஆனால் அதனுடைய பாணி, ஒய்சள மன்னர்கள் திருவரங்கம் கோயிலில் அக்கறை எடுத்துக்கொண்டுஈடுபடத் தொடங்கிய காலம் முதல் (அதாவது சிறிது ஏறக்குறையக் கி.பி. 1240 முதல் 1330 வரை) இருக்கலாம் என்னும் கூற்றிற்கு அரண்செய்கின்றது. வெளிப்புறச் சுவர்களில் தீட்டப் பெற்றுள்ள சிற்பங்கள் இலக்கியப் பொருள்கள் பற்றியனவாயும், அதே காலத்தில் இந்தியாவில் ஏனைய பிற பகுதிகள் முழுவதிலும், குறிப்பாக ஒரிஸாவிலும் (எடுத்துக்காட்டாக, கோனாரக்கிலும்) அமைக்கப்பட்டுள்ள (வீணை வாசிக்கும் இளம் பெண்கள் அல்லது அழகிய

கிளி ஏந்தி நிற்கும் மகளிர், கண்ணாடி ஏந்தி நெற்றிச்குத் திலகம் அணிந்துகொள்ளும் நேரிழையார் ஆகியோரின்) சிற்பங்கள் போலவும் உயிருள்ளனவாக இயற்கை நிலையில் எழிலுறச் செதுக்கப்பெற்றுள்ளன. அப்பெண்களின் பல்வேறு இயல்நிலைகளும், மிகநேர்த்தியும் நாகரிகப் பாங்கும் வாய்ந்து, தனித்த பல சிறப்புக் கூறுகளையுடையனவாய், மிகச் சிறந்த கலைநலம் பொருந்தி விளங்குகின்றன. ஏனைய சந்நிதிகள் எல்லாவற்றையும்விட வேணு கோபாலரின் சந்நிதியே திருவரங்கத்தில் மிக்க கவர்ச்சியும் அழகும் வாய்ந்தது என்பதில் ஐயமில்லை.

இக்கோயிலில் அமைந்துள்ள மேல்தளப் படி வரிசையின் மீது ஏறினல், திருவரங்கம் கோயிலின் பரவலான வெள்ளைக் கோபுரத்தின் உச்சியில் ஏறினலும்கூட, இத்தகைய நேர்த்தியான சிறந்த காட்சியைக் காண முடியும். பின்னைய காட்சி, மேனாட்டாரின் கண்களுக்கு மிக்க வியப்பை அளிப்பதாக இருக்கும். மேலேயிருந்து காண்பவர்களுக்கு, இக்கோயில் முழுவதும் தட்டையான வெள்ளைப் பாவுகற்களால் அமைந்து, மிகப் பெரியனவும் சிறியனவுமாக அமைந்த விமானங்களையும், கோபுரங்களையும் உச்சியிற் கொண்டதாய்த் தோற்றமளிக்கும். அரங்கநாதர் எழுந்தருளியுள்ள மூலத்தானத்தின் மீது அமைந்திருக்கும் விமானமானது, கோயிலின் நடுவே பெரிதும் உயரம் இல்லாததாய் இருப்பினும், தம்மீது வேயப் பெற்றுள்ள பொற்றகடுகளால், அனைவர் கண்களையும் கவருகின்றது.

நாலாம் திருவீதியில், ஓர் அரும்பெரும் காட்சியகம் கூட அமைந்திருக்கின்றது. ஆர்வத்தைத் தூண்டும் சிறந்த பல அரிய பொருள்கள் அதன்கண் உள்ளன. செப்புத் தகடுகளில் செதுக்கப் பெற்றுள்ள நன்கொடைப் பட்டயங்களும், அழகிய பல தந்தச் சிற்பத் தொகுப்புகளும், வெண்கலத்தால் செய்யப்பட்ட பற்பல சிலைகளும், பலவகைப் படைக் கருவிகளும், நாணயங்களும் அக்காட்சியகத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பெற்ற, வெள்ளைக் கோபுரத்திற்கு அணித்தாக உள்ள இந்த நான்காம் பிராகாரத்தின் கிழக்குத் திருமுற்றத்தில், இந்துக்கள் அல்லாத பிற பார்வையாளரும்கூட அனுமதிக்கப்படுகின்றனர். புகழ்மிக்க சேஷராயர் மண்டபம் இங்குத் தெற்கில் பரவி நிற்கின்றது. அதன் முகப்பில் உள்ள எட்டுத் தூண்களும் முன்னங்கால்களைத் தூக்கிப் பாய்ந்தெழும் நிலையிலுள்ள குதிரைகளின் மீது கம்பீரமான போர் வீரர்கள் அமர்ந்திருக்கும் நிலையில் அமைந்த, சிறந்த சிற்பங்களால் அழகு செய்யப்பெற்றிருக்கின்றன. அக்குதிரைகளது கால்களின் அடியில், அஞ்சாநெஞ்சம் வாய்ந்த வேடுவர்கள் காட்டு மிருகங்களை எதிர்த்து வீரப்போர் புரிகின்றனர். இந்த அழகிய சிற்பக் காட்சிகள் காஞ்சிபுரம் (15-ஆம் நூற்றாண்டு), வேலூர் (16-ஆம் நூற்றாண்டு) முதலிய, பிற இடங்களிலும் காணப்படுகின்றன. திருவரங்கத்தில், 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில், இந்து மதம் தழைத்து ஓங்கத் தலைப்பட்ட இடைக்கால நூற்றாண்டுகளில், எங்கும் பெருகி எழுந்த போர் நிகழ்ச்சி ஆரவாரங்களை எதிரொலித்துக்கொண்டு, விசயநகரப் பேரரசின் வீரத்தின் பெருமையினை நினைவூட்டும் முறையில், இச்சிற்பங்கள் இயல்பான உண்மைத் தன்மையைத் தெளிவாக விளக்கி நிற்கின்றன.

இம்மண்டபத்திற்கு எதிரில் ஆயிரங்கால் மண்டபம் இருக்கிறது. அதில் இப்பொழுது தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்று (953) கருங்கல் தூண்கள் இருக்கின்றன. அதன் வழியாக அப்பிராகாரத்தின் வடகிழக்கு மூலையிலுள்ள ஒரு சந்நிதியை அடையலாம். இந்த மிகப் பெரிய மண்டபத்தின் நடுவில், தேர் வடிவாய் அமைந்துள்ள ஒரு சிறிய மண்டபம் (ஒய்விடம்) இருக்கிறது. அதன்கண் ஆண்டு தோறும் நிகழும் வைகுண்ட ஏகாதசித் திருவிழாவில், பெருமாள் பிராட்டியார் ஆழ்வார்கள், ஆசாரியர்கள் ஆகியவர்களின் திருவுருவங்கள் கொணர்ந்து வைக்கப் பெறுகின்றன; இந்தத் திருமுற்றத்தில், ஆயிரங்கால் மண்டபத்தின் முகப்பை ஒட்டி, மிகப் பெரிய பந்தல் ஒன்று நாற்பத்தேழு தென்னை (கமுக)

மரங்களின் அடிப்பகுதியைக் கொண்டு அமைக்கப்படுகின்றது. இந்தத் திருவீதியானது மற்றும் பல கட்டிடங்களைக் கொண்டுள்ளது; பொதுவாக இது பார்வையாளர்களுக்குத் திறக்கப்படுவதில்லை. இதன் மேற்குப் பகுதியில் **சக்கரத்தாழ்வார்** சந்நிதி இருக்கின்றது. அது 14—15-ஆம் நூற்றாண்டுகள் முதல் தொடங்கி இருந்து வருகின்றது. அடுத்து **வசந்த மண்டபம்** உள்ளது. தீர்த்தவாரி அல்லது புனல் விளையாட்டுக்காக அகழப்பெற்ற செயற்கை நீர்நிலையைச் சுற்றி, ஓர் அகழி அமைந்துள்ளது. வட மேற்கு மூலையில் ஸ்ரீ ரங்கநாதரின் துணைவியாராகிய **நாச்சியார் சந்நிதியும்**, அதன் பலவகை மண்டபங்களும் இருக்கின்றன. இக் கட்டிடத் தொகுதிகள், முன்பே 12 அல்லது 13-ஆம் நூற்றாண்டுகளில் இருந்திருத்தல் கூடும். அவைகள் பின்னர் 13—14-ஆம் நூற்றாண்டுகளிலும், 15-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலும் பல தடவைகளில் மாற்றி அமைக்கப்பெற்றிருக்கலாம். 16—17-ஆம் நூற்றாண்டுகளாகிய நாயக்க மன்னர்கள் காலத்துச் சிறந்த சிற்பங்களும், அழகிய சுவரோவியங்களும், தெலுங்குக் கல்வெட்டுக்களுடன் இங்குக் காணப்படுகின்றன. **இராமாயணம், விஷ்ணுபுராணம்** என்பவற்றின் கதைகளை, இச்சிற்பங்கள், விளக்குகின்றன. வெளிமண்டபத்துக் கூரையிலுள்ள ஓவியங்கள், 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியைச் சார்ந்த நாயக்க மன்னர்களின் உருவங்களையும் அக்காலத்து மக்களின் வாழ்க்கை நிலைகளையும் சித்திரித்துக் காட்டுகின்றன. இச்சந்நிதிக்கு வடக்கே புனிதம் மிக்க வில்வ விருட்சம் ஒன்று வளர்ந்து வருகின்றது. இம் முற்றத்தின் கிழக்குப் பகுதியானது, ஏனையவற்றைவிடத் தாழ்வாக உள்ளது. 11-12-ஆம் நூற்றாண்டுகளுக்குரிய சோழர் காலத்துப் பாணியிலும், 13—14-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பாண்டியர் காலத்துப் பாணியிலும், அழகு செய்யப் பெற்ற தூண்களைக் கொண்ட பற்பல கட்டிடங்களும், சந்நிதிகளும் மண்டபங்களும் இங்கே மிகவும் நெருக்கமாகவும் கூட்டமாகவும் அமைந்துள்ளன. பாண்டியர்காலத்துத் தூண் தலைப்பு உறுப்புக்களில் அமைந்த தண்டையக் கட்டுக்களை, அவற்றின் நுனியில் தொங்குகின்ற தாமரை மலரின் வடிவில் அமைக்கப்பட்டுள்ள போதிகைகளைக் கொண்டே நன்கினிது தெரிந்து கொள்ளலாம்.

மூன்றும் பிராகாரத்தை, தெற்கு மதிலின் நடுவேயுள்ள **கார்த்திகைக் கோபுரத்தின்** வழியாக அடைகிறோம். இக்கோபுரம் முன்பு மூடப் பெற்றிருந்து, 15-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் திறக்கப்பெற்றது. அதன் கதவுகளுடன் இணைக்கப்பெற்று நீண்டு செல்லும் மிகப் பெரிய **கருடமண்டபம்**, விஷ்ணுவின் வாகனமாகிய கருடாழ்வார் சந்நிதிக்குச்செல்லுகின்றது. வடக்குத் திசையிலிருந்து அதனுள் செல்லலாம். கருடமண்டபம் வரிசைக்குப் பதினறு தூண்களாக, 14 வரிசைகள் கொண்டது. நடுவிலுள்ள இரண்டு வரிசைகளில் மட்டும் 10 தூண்கள் இருக்கின்றன. ஆக மொத்தம் 212 தூண்கள், இக்கருடமண்டபத்தில் உள்ளன. இம்மண்டபம் தான், இக் கோயிலின் மிகவும் அழகு வாய்ந்த மண்டபம் எனலாம். நடுப்பகுதியிலுள்ள தூண்கள், கூப்பியகைகளுடன் தொழுது கொண்டு நிற்கும் நாயக்க வள்ளல்களின் உருவங்கள் செதுக்கப் பெற்று அழகுபடுத்தப் பெற்றுள்ளன. கார்த்திகைக் கோபுரத்தின் எதிரிலுள்ள தாழ்வாரங்களில், மிகவும் கவர்ச்சி வாய்ந்த புடைப்புச் சிற்பங்கள் வலிய எளிய பாணியில் அமைக்கப் பட்டுள்ளன. கருடாழ்வார் சந்நிதியின் வெளிப் புறச்சுவர்கள், 17-ஆம் நூற்றாண்டின் மதுரை நாயக்க மன்னர் காலத்துப் பாணியில் அமைந்த தேவ கோஷ்டங்களும், கும்ப பஞ்சரங்களும் கொண்டனவாய் அழகுடன் திகழ்கின்றன.

மேற்குச் சிறகில், திருமடைப்பள்ளிகளும், பெரிய உருளை வடிவில் அமைந்த ஐந்து கொட்டகாரங்களும், இருக்கின்றன. அவைகள் 15-ஆம் நூற்றாண்டில் பழுது பார்க்கப் பெற்றன. வடக்குச் சிறகின் மேற்குப் பகுதி வாசுதேவ விஷ்ணு, முதலாழ்வார்கள், தேவ மருத்துவர் ஆகிய தன்வந்திரி ஆகியவர்களின் சந்நிதிகளை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. அவை அனைத்தும் விசயநகரப் பாணியில் அமைந்திருக்கின்றன. முஸ்லிம் படையெடுப்பால் அவைகள் அழிக்கப்பெற்றன என்றும், 15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மீளவும் அவைகள் அமைக்கப் பெற்றதைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இச் சிறகின் தென்பகுதி எல்லையாகிய இரண்டாம் பிராகாரத்தின் நடுவில் பரமபதவாசல் கோபுரத்தைக் காணலாம். இக்கோபுரத்தின் வாயில்கள்

ஆண்டு முழுவதும் மூடப்பட்டே இருக்கின்றன. வைகுந்த ஏகாதசிப் பெருவிழாவின் போது மட்டும், இதன் கதவு திறக்கப்படுகின்றது. அப்போது இதன் வழியாகத் தெய்வத் திருவுருவங்கள் ஆயிரங்கால் மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இச்சிறகின் கிழக்குப் பகுதியில் 'சந்திர புஷ்கரிணி' என்னும் திருக்குளம் உள்ளது. அது சந்திரனையும், சூரியனையும்போல வட்டவடிவில் அமைக்கப் பெற்றுள்ளது. கிழக்கிலும் மேற்கிலும் அதற்குப் படிவரிசைகள் இடப் பெற்று உள்ளன. இத்திருக்குளத்தைச் சுற்றிலும் கிருஷ்ணர், தொண்டரடிப் பொடியாழ்வார், அனந்த சயனர் சந்நிதிகள் அமைந்துள்ளன. அவைகள் வழக்கொழிந்த பழைய சோழர் காலத்துப் பாணியில் அமைந்த தூண்களால் அழகு செய்யப்பெற்றுள்ளன. மூன்றாம் பிராகாரத்தின் கிழக்குச் சிறகானது, தனித் தனியே அமைந்த பல சந்நிதிகளையும், மண்டபங்களையும் உட்கொண்டுள்ளது. பொதுவாக இவைகள் விசய நகரப் பாணியில் இருக்கின்றன. தென் கோடியிலுள்ள சந்நிதி மட்டும், சோழர் காலத்துப் பாணியில் அமைந்த கற்றூண்களைக் கொண்டு உள்ளது. தென்கிழக்கு மூலையில் முற்காலத்தில் 'சூரிய புஷ்கரிணி' என்னும் திருக்குளம் இருந்தது. இப்போது அது தூர்க்கப்பட்டு விட்டது. அதன் அருகில் ஊர்வலம் செய்வதற்குரிய, பொன் வெள்ளித்தகடுகளால் அமைந்த வாகனங்களும், பல்லக்குகளும் வைக்கப் பெற்றுள்ள பல கொட்டகைகள் உள்ளன.

இரண்டாம் பிராகாரமாகிய குலசேகரன் திருவீதியை அடைவதற்குத் தெற்கேயுள்ள ஆரியபட்டாள் கோபுர வழியாகச் செல்லுதல் வேண்டும். அது பதினான்காம் நூற்றாண்டில் முஸ்லிம் படையெடுப்பால் எரித்து அழிக்கப் பெற்றது; அது 15.ஆம் நூற்றாண்டின் முதற் பாதியில் சோழர் காலத்துப் பாணியில் மீண்டும் புதிதாகக் கட்டப்பெற்றது. இக்கோபுரத்தின் வரிசை ஒழுங்கிற்கேற்பக் கோயிலின் மிகப் பெரிய துவஜஸ்தம்பத்தின் உச்சியில் கருடாழ்வாரின் திருவுருவம் அமைந்திருக்கின்றது. அக்கம்பம் கூரையை ஊடுருவிக்கொண்டு விமானத்திற்கு எதிரில் ஓங்கி உயர்ந்து நிற்கின்றது. இந்தக் கொடிக் கம்பம் முதன்முதல் சுந்தர பாண்டிய மன்னரால் (கி. பி. 1251—1268) நிறுவப்பெற்றது. அது முஸ்லிம்களால் அழிக்கப்பெற்றது. பின்னர்; கி. பி. 1461ஆம் ஆண்டில், மல்லிகார்ச்சுனராயர் அவர்களால் செம்பினால் செய்து தங்கத் தகடுகள் வேய்ந்த கொடிக்கம்பமாக அமைக்கப் பெற்றது. செல்வ வளம் மிக்க பக்தர்களால், இப்பிராகாரத்தின் பகுதி கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், பொன்முலாம் பூசப்பெற்ற செப்புத் தகட்டு ஓடுகளால் கூரை வேயப்பெற்றது. பண்டைக்காலத்தைப்போல இப்போதும் இங்கிருந்துதான் பக்தர்கள் சந்நிதிக்குச் செல்வதற்கு முன்பு வருகைதந்து, பெருமாளுக்குச் சேவை செய்யத் தொடங்குகின்றார்கள். இந்த இரண்டாம் பிராகாரம் முழுவதும் ஏனையவற்றை நோக்க மிகவும் குறுகலாக உள்ளது. இடையறவுபடாமல் தொடர்ந்து செல்லும் பல மண்டபங்கள் இருப்பதனால், இப்பகுதி அரை வெளிச்சமாகவே இருந்து பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்கின்றது. கருப்பக் கிரகத்தைச் சுற்றியுள்ள முதலாம் பிராகாரத்தில், வெளிப்புறச் சுவர்களில் பக்கவாட்டத்தை ஒட்டிப் பதிக்கப் பெற்றிருக்கும் சில தூண்களில், இக்கோயிலுக்கு நன்கொடைகள் பற்பல வழங்கிய நாயக்க மன்னர்களின் உருவங்கள் புடைப்புச் சிற்பமாக இயற்கையளவில் செதுக்கப் பெற்று அழகுற்றுத் திகழ்கின்றன. துவசஸ்தம்பம் மட்டுமேயன்றி இந்தத் தென்புறச் சிறகில் சரஸ்வதி, அயக்கிரீவர், விஷ்ணுதசமூர்த்தி ஆகியோரின் சந்நிதிகள் பல அமைந்திருக்கின்றன.

இரண்டாம் திருவீதியின் மேற்குப் புறம், நீளவாட்டத்தில் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளது. இரண்டாம் பிராகாரத்தின் உட்புறச்சுவரை ஒட்டியுள்ள பகுதியானது உயர்ந்த மேடையாக அமைந்து, ஒரு பொதுத் தாழ்வாரத்தில் தொடர் வரிசையாக அமைந்துள்ள அறைகள் பலவற்றைக் கொண்டுள்ளது. அம்மேடைக்குக் கீழே, பாண்டியர் காலத்துப் பாணியில் அமைந்த இருவரிசைத் தூண்களுடன், ஒரு குறுகலான இடைவெளி உள்ளது. அவ் இடைவெளிவழி ஒரு பெரிய மண்டபத்தை நோக்கிச் செல்லுகின்றது. அஃது உயரமாகச்

சதுரவடிவில் எழுப்பப் பெற்ற மேடையின் மீது அமைந்திருக்கின்றது. அதன்கண் ஒன்றினுள் ஒன்றாக அமைந்த இரண்டு விதானங்கள் இருக்கின்றன. இந்தக் கட்டிடத்திரள் 'துரை மண்டபம்' என்று வழங்கப்படுகின்றது. இது இத்திருவீதியின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ள உள்கொடை என்னும் மண்டபத்தை அடுத்து அணித்தாகவுள்ளது. வடகிழக்கு மூலையை நோக்கிப் பெருமாளின் திருமடைப் பள்ளிகள் இருக்கின்றன. பழங்காலத்தில் இங்குதான் யாத்திரிகர்களுக்கு வழங்குவதற்காகப் பாலும், உணவு வகைகளும் வைக்கப்பெற்று வந்தன.

இத்திருவீதியின் கிழக்குச் சிறகிலேயே, இத்தகைய பல கட்டிடங்கள் உயரிய மேடைகளின் மீது, வழக்கொழிந்த பழைய சோழர் காலப் பாணியில் நிறுவப்பெற்ற தூண்களுடன் கட்டப் பெற்றுள்ளன. இச்சுவர்கள் மகரவடிவில் அமைந்த வளைவுகளைக் கொண்ட பல சிறு, சிறு மாடங்களால் அழகு செய்யப்பெற்றுள்ளன.

இனி, இறுதியாகப் பார்வையாளர்கள் இராஜமகேந்திரன் திருவீதி எனப்படும் முதற் பிராகாரத்தை அடைகின்றனர். இரண்டாம் பிராகாரத்திற்குப் போலவே, இதற்கும் தெற்குப் பகுதியிலுள்ள வாயிலின் வழியாகச் செல்லும் பாதை ஒன்றே ஒன்று மட்டும்தான் உள்ளது. ''நாழி கேட்டான் கோபுரம்'' கருவறையின் நேர்ச் செங்கோட்டிற்குக் கிழக்கே சிறிது தள்ளி அமைந்திருக்கிறது. வாயிலின் வெளிப்புறமுகப்பின் இருபக்கங்களிலுமுள்ள மாடங்களில் பத்திரர், சுபத்திரர் என்னும் துவார பாலகர்கள் இருவர் உள்ளனர். உட்புறமுகப்பில் சந்நிதியை நோக்கி மகாவிஷ்ணுவிற்கு உரியனவாய் முறையே சங்கு வடிவத்திலும், தாமரை மலரின் வடிவத்திலும் உள்ள சங்கநிதி, பதுமநிதி என்பவற்றின் திருவுருவங்கள் இருபக்கங்களிலும் இருக்கின்றன. முதற்பிராகாரம் முழுவதும் பெரும்பாலும் மேலே மூடப்பெற்றிருக்கின்றது. மேலும் அதன் கூரை மிகவும் தாழ்வாக உள்ளது. முதலில் இங்கு ஏனைய பிராகாரங்களைக் காட்டிலும் மிகவும் இருள் அடர்ந்துள்ளமை பெரிதும் புலனாகின்றது. கோபுரத்தின் மேற்பகுதி அமைப்பினைக் காண்பதற்கு, நாம் கூரையின் மேலேயேஏறிச்செல்லுதல்வேண்டும். இங்ஙனம் இருள் அடர்ந்திருப்பினும் கதவுகளில் பதிக்கப் பெற்றுள்ளனவும், படிக்கட்டுகளின் மீதும் சுவர்களின் மீதும் வாயில்களிலும், பதிக்கப்பட்டுள்ள ஒளி மெருகு பூசிய செப்புத்தகட்டின் மேற்பகுதிகள், பளபளப்புடையனவாய் ஒரு சிறிது ஒளி நல்குகின்றன. இத்தகைய செப்புத் தகடுகள் தரையின் சில பகுதிகளில் மட்டுமேயன்றிச் சிறப்பாகக் கருவறைச் சந்நிதியின் முன்பும் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இத்திருவீதியின் தெற்கிலும் மேற்கிலும் சுவரை ஒட்டி நெடுக மேடைகள் கட்டிச் சரக்கு அறைகள் ஆக்கப்பெற்றுள்ளன. சுவாமி புறப்பாட்டின்போது திருவுருவம் தெரிவதற்கு மிகப்பெரிய நிலைக்கண்ணாடிகள் மூலைகளில் வைக்கப் பெற்றிருக்கின்றன. மேற்குப்பக்கத்து மேடையில் ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் விசயரங்கசொக்கநாத நாயக்கர் (கி.பி.1706-1732), அவருடைய மனைவி, புதல்வன், மருமகள் ஆகியவர்களின் உருவங்கள், தந்தத்தால் இயற்கை அளவில் செய்து, வண்ணந் தீட்டி வைக்கப்பெற்றுள்ளன. மேடைகளின் முன்னேயுள்ள நடை பாதையில் ஒவ்வொன்றிலும் 20 தூண்களாக இரு வரிசைகள் அமைந்துள்ளன. தெற்கில், மூலைத்தூண்கள் ஒவ்வொன்றிலும் கைகூப்பித் தொழுது வழிபடும் முறையில் நாயக்க மன்னர்களின் சிற்பங்கள் செதுக்கப் பெற்றிருக்கின்றன.

தென்மேற்கு மூலையில் சுவாமி புறப்பாட்டின்போது பயன்படுத்தப்பெறும் அணிகலன்களும் கொடிகளும் தொகுத்து வைக்கப்பெற்றுள்ளன. இக்கருவூலத்தில்மிகப்பெரிய அளவில் பொற்பாத்திரங்களும் இடம்பெற்றுள்ளன. இங்கிலாந்தின் ஏழாம் எட்வர்டு அரசர் 1875-ஆம் ஆண்டில் அளித்த பொற்பாத்திரமும் உள்ளது. பொன் அணிகலன்களில் விலை உயர்ந்த அழகிய நவமணிகளால் செய்யப்பெற்றனவும், சுவாமி புறப்பாட்டின்போது அணிவிக்கப் பெறுவனவுமாகிய முடி அங்கி, உடை அங்கி முதலி

யனவும் மற்றும் பற்பல வயையான விலை உயர்ந்த அணிகலன்களும் பாதுகாப்பாக வைக்கப் பெற்றுள்ளன. இவ் அணிகலன்கள் எல்லாம் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதியனவாகச் செப்பனிடப்படுகின்றன. அதனால் அவைகள் தம்முடைய பண்டைய அமைப்பையே பெற்றிருக்கவில்லை. ஆனாலும் அவைகள் நாம் கண்டு களித்தற்குரியவை. நுழைவுக் கட்டணம் செலுத்திக் கோயில் அலுவலர்களின் இசைவு பெற்று நாம் இவற்றைப் பார்வையிடலாம்.

முதற் பிராகாரத்தின் வடமேற்கு மூலையில் யாகசாலையும், தொண்டைமான் மண்டபமும் உள்ளன. அவற்றின் கூரைகள் வண்ண ஓவியங்களால் அழகுபடுத்தப் பெற்றுள்ளன. ஆயினும் இச்சந்நிதியை ஜடாவர்மன் முதலாம் சுந்தர பாண்டியன் (கி.பி.1251-1268) அமைத்ததாக இக்கோயிலின் தலவரலாறு கூறுகிறது. இப்பிராகாரத்தின் கிழக்குப்பகுதி, வடக்கும் தெற்குமாக அமைந்துள்ள இரு மண்டபங்களை உட்கொண்டுள்ளது. வடக்கே இருப்பது அர்ச்சுனன்மண்டபம்; இவ்விரண்டினுள்ளும் இதுவே உயரம் மிக்கது. தெற்குப்பகுதியில் உள்ள மண்டபம் தரையில் செப்புத்தகடுகள் பதிக்கப்பெற்றுள்ளன. யாத்திரிகர்கள் இவ்விடத்தில் நின்றுகொண்டு விமானத்தையும், சுவாமியையும் காணலாம். தெற்கில் சிறிது தாழ்ந்தமட்டத்தில் கிளி மண்டபம் உள்ளது. அங்கேஒரு கூண்டில் உயிருள்ள கிளி வைக்கப்பெற்றுள்ளது. அஃது இக் கோயிற்பகுதியில் வியக்கத்தக்க ஒலிகளை எழுப்பிக் கொண்டிருக்கிறது. இது முன்னொரு காலத்தில் இக் கோயிலானது ஒரு கிளியினாலேயே மீளக்கண்டு பிடிக்கப்பட்டது என்னும் கதையினை நினைவுபடுத்துகின்றது. ஒன்றையொன்று அடுத்துள்ள இவ்விரு மண்டபங்களும் மல்லிகார்ச்சுனராயர் (கி. பி. 1477—1465) காலத்தில் வாழ்ந்திருந்த உத்தமநம்பிஎன்பவர் கட்டியனவாகச் சொல்லப்படுகிறது.

இப்போது நாம் கோயிலின் இருதயப்பகுதியாகிய முதன்மையான இடத்துக்கு வந்துவிட்டோம். வட்ட வடிவமாக உள்ள மூலத்தானம் மேற்கு, வடக்கு, கிழக்கு ஆகிய திசைகளில் சூழப்பெற்றுள்ள சதுரமான திருவுண்ணாழியைக் கொண்டுள்ளது. அதன் கண் நாம் முறைப்படி பிரதட்சணை அல்லது வலம் வரலாம். புனிதத்திற் புனித மிக்க கோயிலின் கருவறைப் பகுதி, மிகவும் தெய்வீக நலம் வாய்ந்த மூலவர் அல்லது அசலமூர்த்தியை உட்கொண்டுள்ளது. ஆதிசேடனாகிய அரவணையின் மீது வலப்பக்கமாகச் சாய்ந்து கொண்டு ஸ்ரீரங்கநாதசுவாமி இங்கு எழுந்தருளி விளங்குகின்றார். இத்திருவுருவம் குழைகாரையில் (Stucco) 6.40 மீட்டர் (21 அடி) நீளமுடையதாய், புனுகு சட்டம் என்னும் ஒரு தனிச் சிறப்பான தைலம் பூசி, ஒளியும் மெருகும் ஊட்டப்பெற்று விளங்குகின்றது. அஃது இத்திரு உருவத்தை நன்கினிது போற்றிப் பாதுகாக்கும் இயல்புடையதென்று கோயில் அலுவலர்கள் கூறுகின்றனர். திருவரங்கநாதரின் திருவடிகள் ஒரு செந்தாமரைமலரின் மீது வைக்கப்பெறறுள்ளன. அவற்றின் அருகே, இக்கோயில் இங்கு ஏற்படுவதற்குக் காரணராக இருந்த விபீஷண ஆழ்வார் இருக்கின்றார். அவருக்கு அருகே முஸ்லிம்களின் காலத்தில் மூலப்படிமம் கிடைக்காதபோது வழிபடப்பெற்ற(யோகபேரர் ஆகிய திருவரங்க மாளிகையார் என்னும் உருவநேர்படிமம் உள்ளது. அரங்கநாதரின் முன்னால் சந்நிதியின் வாயிலுக்கு அருகேஉற்சவமூர்த்திஆகிய அழகிய மணவாளர் (நம்பெருமாள்) பொற்சிலை உள்ளது. சிறப்புத்திருநாட்களில் இப்படிமம் வலம் செய்விக்கப்படுவதற்காக வெளியில் எடுக்கப்பெறும். பெருமாளின் இருபுறத்தும் இத்தகைய ஊர்வலச் சடங்கு நிகழ்ச்சிகளிற் பூதேவியும், ஸ்ரீதேவியும் உடன் எழுந்தருளுவர். இந்தக் கருவறையின் மேலேயும் பொன்மயமான விமானம் உள்ளது. இதனை இந்துக்கள் அல்லாத பார்வையாளர்கள் வேணுகோபால கிருஷ்ணரின் சந்நிதியின் மேலுள்ள தளத்தில் இருந்து கொண்டு காணலாம். இந்த விமானம் வட்ட வடிவமான உள் அறையை மூடி இருக்கின்றது. ஆனால் இது நீள் உருண்டை வடிவில் உள்ளது. அதன் கவிகைமாடம் ஓடுகளால் வேயப்பெற்றுள்ளது. தாமரையின் இதழ்களிலிருந்து வெளிவரும் நிலையிலுள்ள நான்கு பொற்கலசங்கள் சூட்டப்பெற்றுள்ளது. விமா

னத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் மகரவடிவில் உள்ள பலகணியில், தெற்கில் பரவாசுதேவர், மேற்கில் **அச்சுதர்**, வடக்கில் **அனந்தர்**, கிழக்கில் **வேணுகோபாலர்** அல்லது கிருஷ்ணகோவிந்தர் ஆகிய திருமாலின் திருவுருவங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

ஏனையபிற பெரும்பாலான கோயில்களைப் போலவே முஸ்லிம்படையெடுப்பிற்குமுற்பட்ட எல்லாக் கட்டிட அமைப்பும் மறைந்தொழிந்து போயின. அவைகள் மீளவும் பாண்டியர்களால் வழக்கொழிந்த பழைய சோழர்காலப் பாணியிலிருந்து எடுத்துக்கருத்துடன் அமைக்கப்பெறநிருத்தல் வேண்டும். திருவரங்கம் கோயிலானது பற்பல மாறுதல்களை அடைந்துள்ளது: எத்தனையோபல நூற்றுண்டுகள்கழிந்தும் தப்பிநிலைபெற்று விளங்கும் ஒரு சிறந்த கோயிலுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக இது விளங்குகிறது. ஒரு பார்வையாளர் கலையின்பத்திற்காக மட்டுமேயல்லாமல் தொடர்ச்சியாக வளர்ந்து பொலிந்து சிறந்து திகழும் நிலையிலேயே இக்கோயிலை மிகுதியும் ஆராய்ந்து கண்டு மகிழ்தல் வேண்டும். (தொடரும்)

—ஆசிரியர்

---

# மதிப்புரைகள்

## 1. பண்டைத்தமிழர் மரபும் வள்ளுவமும் :-

இந்நூல் இராஜப்பாளையம் வள்ளுவப்பண்ணை நிறுவிய 'வள்ளுவர் தொண்டர்' திரு. இரா. கு. நல்லகுற்றுலம் பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. திருவள்ளுவரின் திருக்குறளை வாழ்க்கைக்கு அடிப்படையாகக்கொண்டு, சர்வசமய சமரச சன்மார்க்க அருள்நெறிப் பயிற்சிக்கு உரிய வழிவகைகளை, இந்நூல் சிறப்புற ஆராய்ந்து விளக்குகின்றது. திருவள்ளுவரின் அற ஒழுக்கமாகிய தவநெறியை இளம் பருவத்திலிருந்தே பயின்றுகட்டுப்பாடாக வாழத்தொடங்குதலே பெரும் பயன் அளிக்கும் என்னும் கருத்துடன், குழந்தைப்பள்ளி, தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்குப் பயன்படும் முறையில் இந்நூலை ஆசிரியர் இயற்றியுள்ளார். சிறந்த பயனுள்ள நல்ல நூல். பிரசார விலை 1.25. கிடைக்குமிடம் வள்ளுவப்பண்ணை, இராஜபாளையம்.

## 2. ஞானத்தமிழ் :-

இதன் கண் சைவத்திருமுறைகள், நாலாயிரத் திவ்விய பிரபந்தங்கள், அருணகிரிநாதர், தாயுமானவர், குமரகுருபரர், இராமலிங்கஅடிகள் முதலிய சான்றோர்களின் பாடல்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பெற்ற ஐம்பது பாடல்களையும் அவற்றிற்குரிய பலவகை விளக்கங்களையும் கொண்டுள்ளது. எளிய இனிய நல்ல நடையில், பயன்மிக்க பல நல்ல செய்திகளை இந்நூலாசிரியர் திரு. ரெ. முத்துகணேசன் அவர்கள் தொகுத்தளித்துள்ளார்கள், பள்ளிச் சிறுவர்களுக்குப் பெரிதும் பயன்படும் நல்ல இனிய நூல். சிறுவர்களின் உள்ளத்தில் தெய்வபக்தியை உண்டாக்கி வளர்க்கவல்லது. கிடைக்குமிடம்: செல்வி பதிப்பகம், காரைக்குடி. விலை ரூ.3-00.

—ஆசிரியர்

# மணவாளமாமுனிகள்

( ந. ரா. முருகவேள், M. A., M. O. L. )

## முன்னுரை :

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தின் தத்துவங்களை உலகிற்கு உபதேசித்து எங்கும் பரவச்செய்து வளர்த்த பெரியவர்களை ஆழ்வார்கள் என்றும், ஆசாரியர்கள் என்றும் இருவகையாக வழங்குவர். திருவாய்மொழி முதலான திவ்வியப் பிரபந்தங்களை அருளிச்செய்து, தீதில் நன்னெறி ஆகிய ஞானச்சுடர் விளக்கினை ஏற்றித் தெய்வ அருள் ஒளி பரப்பியவர்கள் ஆழ்வார்கள் என்று சிறப்பிக்கப் பெறுவர். ஆழ்வார்கள் ஏற்றிய ஞானச்சுடர் விளக்கினை, உலக மக்கள் எல்லோருடைய உள்ளங்களிலும் விளங்கச் செய்தவர்கள் ஆசாரியர்கள் என்று போற்றிப் புகழப் பெறுவர்.

## ஆசாரியர்கள் :

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தின் ஆசாரிய பரம்பரையில் முதல்வராகக் குறிப்பிடத்தக்கவர் நாதமுனிகள் ஆவர். இவர் காட்டுமன்னார்குடி என்னும் வீரநாராயணபுரத்தில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். 9-ஆம் நூற்றாண்டில் விளங்கியவர். இவருக்குப் பின்னர் அடுத்தடுத்து முறையே உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரியநம்பி, இராமானுசர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், திருவாய்மொழிப்பிள்ளை என்னும் திருமலை ஆழ்வார் ஆகியோர் ஆசாரியர்களாக விளங்கி, ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தைப் பரப்பி வளர்த்துச் செழித்து ஓங்கச்செய்து வந்தார்கள்.

## அழகிய மணவாளர் :

இப் பெருமக்களின் வரிசையில், திருவாய்மொழிப்பிள்ளையின் மாணவராக விளங்கியவரே, மணவாளமாமுனிகள் என்னும் பேராசிரியராவர். இவர் திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியில், திருநாவீறுடையபிரான் தாசரண்ணர் என்பவரின் திருமைந்தராக அவதரித்தவர். அந்தணர் மரபினர். ‘அழகிய மணவாளன்’ என்பது இவர் தம் இயற்பெயர். இவர் சொல்லார் தமிழ் ஒரு மூன்றும் தேர்ந்தவர்; சுருதிகள் நான்கும் ஆய்ந்து தோய்ந்தவர்; எல்லை இல்லா அறநெறி யாவும் தெரிந்தவர். இவர் இல்லறமெனும் நல்லறம் கடைப்பிடித்து ஒழுகிவந்தார். அப்போது இவருக்கு இராமானுசப்பிள்ளை என்னும் ஒருதிருக்குமாரர் தோன்றியருளினர். ஜீயர் நயினர் என்பவர் இவருடைய பௌத்திரர்.

## யதீந்திரப் பிரவணர் :

இவர்தம் ஞானசாரியரான திருவாய்மொழிப்பிள்ளை, இவரை ‘ஆம் முதல்வன்’ என்று குளிரக் கடைக்கணித்துத் தம் திருவடி வாரத்திலேயே, நிழலும் அடிதாறும்போன்று வைத்திருந்து, தம்முடைய சேமவைப்பான

பொருள்நலங்கள் கலைத்திறங்கள் எல்லா வற்றையும், முறையே உபதேசித்து அருளினர். திருக்குருகூரில் இராமானுசருக்குத் தாம் எடுப்பித்த கோயிலையும், 'இராமானுச சதுர்வேதிமங்கலம்' என்னும் திருவீதியையும், அவற்றிற்குரிய நற்செல்வம் அனைத்தையும் இவர்பால் ஒப்படைத்து, அவற்றை நன்கினிது ஆண்டு புரந்து வருமாறு பணித்தருளினர். அதன்படியே, இவரும் உடையவர் திருவடிகளிலே மிகவும் ஈடுபாடு கொண்டவராய்த் தமது கைங்கரியங்களைக் குறையற நடத்திக் கொண்டு போந்தார். அதுகண்டு மகிழ்ந்த திருவாய்மொழிப்பிள்ளை இவருக்கு ''யதீந்திரப் பிரவணர்'' என்னும் சிறப்புப்பெயர் அளித்து வழங்குமாறு செய்வித்தார். இவர் தமது ஆசாரியரின் கட்டளைப்படி, திருக்குருகூரில் கோயில் கொண்டுள்ள இராமானுசரைப் பற்றி, இருபது சுலோகங்களால் ''எதிராஜ விம்சதி'' என்று ஒரு துதி நூலை அருளிச் செய்தார்.

''வல்லவர்கள் வாழ்த்தும் குருகேசர்
தம்மை மனத்துவைத்துச்
சொல்லார வாழ்த்தும் மணவாள
நாயனர் தொண்டர்குழாம்
எல்லாம் தழைக்க எதிராஜ
விம்சதி இன்றளித்தோன்
புல்லார விந்தத் திருத்தாள்
இரண்டையும் போற்றுநெஞ்சே''

என இந்நூலின் சிறப்பினைப் பெரியோர்கள் வியந்து போற்றியுள்ளனர்.

## ஸ்ரீசைலேச தயாபாத்திரம் :

இவர் திவ்விய தேச யாத்திரை செய்ய விரும்பிப் புறப்பட்டுக் காஞ்சிபுரம் வந்தடைந்து, அங்கு எழுந்தருளி விளங்கும் பெருமாளைச் சேவித்துத் ''தேவராஜ மங்களம்'' என்ற துதி நூலை வடமொழியில் அருளிச்செய்தார். காஞ்சியில் ஒரு வருடம் தங்கியிருந்த பொழுது, திருவெஃகா என்னும் யதோக்தகாரி சந்நிதியில், இராமாநுசர் இயற்றிய ஸ்ரீபாஷ்யப்பிரவசநம் செய்தருளினர். இங்ஙனமே இவர் திருவரங்கம் பெரிய கோயிலுக்குச் சென்று தங்கியிருந்து, அங்கே அரங்கநாதர் பணித்தருளியபடி, நாலாயிரத்திவ்வியப் பிரபந்த வியாக்கியானங்களைக் குறித்து, ஸ்ரீரங்கம் பெரிய கோயிலில் கருட மண்டபத்தில் ஓராண்டு காலம் விளக்கம் செய்துவந்தார். ஸ்ரீரங்கநாதர் அதனைக்கேட்டு மிகவும்மகிழ்ந்து,

ஸ்ரீசைலேச தயாபாத்ரம்
தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ர ப்ரவணம் வந்தே
ரம்யஜா மாதரம் முநிம்

என்னும் சுலோகத்தினைக் குருகாணிக்கையாக அருளிச்செய்து, இவரைச் சிறப்பித்தார் என்பது வரலாறு. வேதத்திற்குப் பிரணவம்போல, திவ்வியப் பிரபந்தமாகிய திராவிட வேத அநுசந்தானத்திற்கு, இச் சிறந்த தனியனே முதலும் முடிவுமாக வழங்கி வருகின்றது.

## மணவாள மாமுனிகள் :

பெருமாள் சேவைக்கும், திவ்வியப்பிரபந்த வியாக்கியானப் பிரவசனங்களுக்கும், உடல் தொடர்புடைய உறவினர்களின் மறைவால் நேரும்வாலாமை முதலியன, இடையிடையே தடையாக நேர்தல் குறித்து வருந்தி, இடையறாத தொண்டுசெய்தற் பொருட்டு இவர் ஸ்ரீசடகோப ஜீயர் என்னும் பெரியவர்பால் துறவறத்தை மேற்கொண்டார். அதுமுதல் இவருக்கு மணவாளமாமுனிகள் என்பது பெயராயிற்று.

இராமானுசரைப் போலவே, இவரும் திருவரங்கம் பெரிய கோயிலில் திக்குற்ற கீர்த்தி மிக்கவராய்ச், சிறப்புடன் வாழ்ந்து வந்தார். அப்போது இவரை ஆசாரியராக வரித்து உய்ந்தவர்கள் பற்பலராவர். அவர்களுள் முதன்மையாக வைத்து எண்ணத்தக்கவர்கள் எண்மர். அவர்கள் ''அஷ்டதிக் கஜங்கள்'' என்று சிறப்பித்துப் பேசப்படுவர். அவர்களாவார் :—

1. வானமாமலை ஜீயர்.
2. பட்டர்பிரான் ஜீயர்.
3. திருவேங்கடராமாநுஜ ஜீயர்.
4. கோயில் அண்ணன்.
5. பிரதிவாதி பயங்கரம் அண்ணன்.
6. எறும்பியப்பா.
7. அப்பிள்ளை.
8. அப்பிள்ளார்.

## மாமுனிகளின் நூல்கள் :

மணவாள மாமுனிகள் உலக மக்கள் ஈடேறுதற் பொருட்டுத் திருவுள்ளம் இரங்கி அருளிச்செய்த நூல்கள் பல. பிள்ளை லோகாசாரியர் அருளிச்செய்த பதினெட்டு ரகசிய நூல்களுள் ஸ்ரீவசனபூஷணம், தத்துவத்திரயம், முமுட்சுப்படி என்னும் மூன்றற்கு விளக்கவுரைகள்; பெரியாழ்வார் திருமொழியின் முதல் 420 திருப்பாசுரங்களுக்கு வியாக்கியானம்; இராமானுச நூற்றந்தாதி வியாக்கியானம்; அருளாளப் பெருமாள் எம்பெருமானுர் அருளிச்செய்த ஞானசாரம், பிரமேய சாரம் என்னும் இரு நூல்களுக்கும் பொருத்தமான சுலோகங்கள்; ஆசார்ய ஹ்ருதயம் என்னும் நூலின் வியாக்கியானம், உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்திப் பிரபந்தம் என்பன மணவாளமாமுனிகள் இயற்றிய நூல்களாகும். இந்நூல்களினுல் வேத வேதாங்கங்களிலும், இதிகாச புராணங்களிலும், அருளிச் செயல்களிலும், இவருக்கு இருந்த பரந்த பெரும்புலமை இனிது புலனுகின்றது.

## மாமுனிகளின் மாட்சி :

வைணவ சமய ஐதிகங்களையும், உருவகங்களுக்கு அமைந்த உள்ளுறை பொருள்களையும் எடுத்து விளக்கும் திறனில், மணவாளமாமுனிகளுக்கு இணையாவார் எவருமிலர்.

செந்தமிழ் வேதியர் சிந்தை
தெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்;
சீருல காரியர் செய்தருள்
நற்கலை தேசு பொலிந்திடுநாள்;
மந்த மதிப்புவி மானிடர்
தங்களை வானில் உயர்த்திடுநாள்;
மாசறு ஞானியர் சேர்எதி
ராசர்தம் வாழ்வு முளைத்திடுநாள்;
கந்த மலர்ப்பொழில் சூழ்குரு
காதிபன் கலைகள் விளங்கிடுநாள்;
காரமர் மேனி அரங்க
நகர்க்குஇறை கண்கள் களித்திடுநாள்;
அந்தமில் சீர்மணவாள
முனிப்பரன் அவதாரம் செயும்நாள்;
அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில்
திருமூலம் அது எனும் நாளே!

எனவரும் செய்யுளால், இவருடைய அவதாரத்தின் சிறப்பினை யாவரும் அறியலாம்.

## நாராயணபுரத்து ஆய் :

இவர்தம் சமகாலத்தவராக விளங்கியிருந்த திருநாராயணபுரத்து ஆய் என்னும் பெரியார்,

பூதூ ரில் வந்துதித்த புண்ணியனே?
பூங்கமழும்
தாதார் மகிழ்மார்பன் தானிவனே?
—தூதார
வந்தநெடு மாலோ? மணவாளமாமுனிவன்
எந்தையிவர் மூவரிலும் யார்?

என வினவி வியந்து, இவர் தம் பெருமையைச் சிறப்பித்துப் பெரிதும் போற்றியுள்ளார்.

## பெரும்பூதூர் :

இராமானுசர்பால் இவருக்கு இருந்த ஈடுபாடு எல்லையற்றது. இராமானுசரைச் சேவிப்பதற்கு, அவர் திருவவதரித்த ஸ்ரீ பெரும்பூதூர்க்கு எழுந்தருளும் பொழுது, அவ்வூர் அணித்தானவாறே, அதனைக்கண்டு இவர் பின்வரும் வெண்பாக்களை அருளிச் செய்து வியந்தனர்.

இதுவோ பெரும்பூதூர்? இங்கே பிறந்தோ
எதிராசர் எம்மிடரைத் தீர்த்தார்?
—இதுவோதான்
தேங்கு பொருநல் திருநகரிக்கு ஒப்பான
ஓங்கு புகழுடைய ஊர்?
எந்தை எதிராசர் எம்மை எடுத்தளிக்க
வந்தபெரும் பூதூரில் வந்தேமோ!
—சிந்தை
மருளோ! தெருளோ! மகிழ்மாலை மார்பன்
அருளோஇப் பேற்றுக் கடி!

## குண மாட்சிமைகள் :

மணவாளமாமுனிகளின் மாட்சிமை மிக்க அரும்பெருங்குண நலங்களின் சிறப்பினையும், தெய்விகப் பணித்திறனையும், அதனால் அவர் பெற்றிருந்த மனநிறைவின்மிக்க பெருமிதப் பெற்றியினையும், பின்வரும் செய்யுளால் உணரலாம்.

தென்னரங்கர் சீரருளுக்கு
இலக்காகப் பெற்றோம்!
திருவரங்கம் திருப்பதியே
இருப்பாகப் பெற்றோம்!
மன்னியசீர் மாறன்கலை
உணவாகப் பெற்றோம்!
மதுரகவி சொற்படியே
நிலையாகப் பெற்றோம்!
முன்னவராம் நம்குரவர்
மொழிகள்உள்ளப் பெற்றோம்!
முழுதுநமக் கவைபொழுது
போக்காகப் பெற்றோம்!
பின்னையொன்று தனில்நெஞ்சு
பேராமை பெற்றோம்!
பிறர்மினுக்கம் பொறாமையிலாப்
பெருமையும் பெற்றோமே!
—ஆர்த்திப் பிரபந்தம்.

## முடிவுரை :

இத்தகைய பெருஞ்சிறப்பு வாய்ந்த ஸ்ரீவைஷ்ணவப் பெருஞ்சான்றோராகிய மணவாளமாமுனிகள் 'விசதவாக் சிகாமணிகள்' என்னும் விழுப்புகழ் பெற்று விளங்குபவர். அவர் தம் மாட்சிமை கடலினும் பரந்தது. அவர் அருளிச் செய்துள்ள திவ்ய சூக்திகளின் இனிமையும், தெளிவும், மிடுக்கும், சொற்சுவை பொருட்சுவை நலங்களும், நுட்ப திட்பங்களும், எதனையும் சிக்கல் அறுத்துச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் திறமும், பிறவும் நம்மனோர் அளவிட்டுரைப் பரியன. நவில்தொறும் நயம்பயக்கும் அவர்தம் ஞான நன்னூல்களை ஓதியுணர்ந்து மகிழ்தலினும் மிக்க பெரும்பேறு வேறொன்றில்லை. ஆதலின், அவைதம்மை நாம் அனைவரும் ஆராய்ந்து கற்றுப் பயன் அடைய முற்படுவோமாக.

—ஆசிரியர்.

அடியார்கள் வாழ அரங்கநகர் வாழச்
சடகோபன் தண்டமிழ்நூல் வாழக்
—கடல்சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே
இன்னமொரு நூற்றாண் டிரும்!

# 'ஆற்றுகிலாவழி'

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள், தேவக்கோட்டை

சித்தாந்த சைவ நூல்கள், சிவோகம் பாவனையை வீடுபேறு பெறதற்குரிய சிறந்த சாதனமாகக் கூறுகின்றன. பரம்பொருளாகிய சிவபெருமான் தன்வயம், இயற்கையறிவு, முற்றுணர்வு, இயல்பாகவே பாச நீக்கம், பேராற்றல், தூயவுடம்பு, வரம்பிலின்பம், பேரருள் ஆகிய எட்டுக் குணங்களையும் உடையவர். அவரை அடையும் உரிமையை உடையனவாகிய உயிர்கள், இவ்வெண் குணங்களின் மறுதலைகளாகிய செயற்கையறிவு, சிற்றுணர்வு, இயல்பாகவே தொடர்பு, சிறிய ஆற்றல், தூய்மையற்ற உடம்பு, துன்பங் கலந்த சிற்றின்பம், சார்பு பற்றி மட்டும் வருகிற சிற்றிரக்கம் ஆகியவற்றைக் கொண்டவை.

சிவமும் உயிர்களும் அல்லாத பாசம் சிவத்தைச் சாராது உயிர்களை மட்டும் அநாதியே சார்ந்து கட்டுப்படுத்திக் கொண்டிருப்பதனாலேயே, அவ்வுயிர்கள் சிவத்தைச் சேர்ந்து, பேரின்ப வீட்டைப் பெறுவதற்குத் தடை நேருகின்றன. செயற்கையறிவும், சிற்றுணர்வும் உடையனவாகிய உயிர்கள் சிவமாகிய பதிப்பொருளை அடைவதே பேறு. அந்த நற்பேற்றிற்குரிய சிறந்த சாதனம் ஞானம். அந்த ஞானம் ஞானாசிரியனது அருளுபதேசத்தினாலன்றி, உண்டாக மாட்டாது. அனுபவமுடைய ஞான தேசிகரிடத்தில் அருளுபதேசம்பெற்ற சாதகன், ஞானத்தை அனுட்டிப்பதாகிய சிந்தனை முறையைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

சிவபெருமானது திருவடிகளில் நீங்காத அன்போடு அவரைப் பொருந்தியிருந்து, அவ்வாறு இருக்கின்றேமென்னும் நிலையினையும் கடந்த மேல்நிலையை அடைய விரும்புவோர், அந்தச் சிவபரம் பொருளாகவே நிலைபெற்றிருப்பர். பாசி படர்ந்த பொய்கையில் கல்லை எறியும்போது அந்தப் பாசி நீங்கியும், எறிந்த கல், நீர் மட்டத்தினுள்ளே சென்றபோது மீண்டும் அப்பாசி படர்ந்தும் காணப் பெறுவதுபோலச், சிவபெருமானது திருவடிகளை உணரும்போது குற்றம்மிக்கனவாகிய ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்கள் நீங்கியும், அத்திருவடியுணர்வு தளர்ந்தபொழுது அவைகள் வந்து தலைப்பட்டுப் பொருந்தியும் நிற்கும். பழைய வாசனை பற்றி நிகழும் மல மாயா கன்மத் தலைப்பாட்டை, ஞான அநுட்டானம் ஒன்றினாலன்றி வேறெதனாலும் நீக்கிக்கொள்ள முடியாது.

ஞானம், மூவகைப்படும். அவை கருவிகளோடுகூடி அறிவதாகிய பாச ஞானமும், நான் பிரமம் என்னும் பசு ஞானமும், சிவபெருமானது திருவடி ஞானமாகிய பதி ஞானமுமாகும். இம்மூன்றினுள் பாச ஞானத்தாலும், சிவபெருமானைக் கூட முடியாது. பதி ஞானமாகிய திருவருளொன்றே உயிர்களின் சிற்றறிவை ஒழித்து, அவ்வுயிர்களைச் சிவத்துடனே நிலை நிறுத்துகின்ற ஞான நிட்டையைக் கூட்ட வல்லது, இதனை

''பாசமா ஞானத் தாலும்
படர்பசு ஞானத் தாலும்
ஈசனை உணர ஒண்ணு து;
இறையருள் ஞானம் நண்ணித்
தேசுறும் அதனுல் முன்னைச்
சிற்றறி வொழிந்து சேர்ந்து
நேசமோ டுயர்ப ரத்து
நிற்பது ஞான நிட்டை''

என்று சிவப்பிரகாசம் உணர்த்துகின்றது. ஏகதேசமாய் அறிதல் பாச ஞானத்தின் இயல்பும், செருக்குற்றறிதல் பசு ஞானத்தின் இயல்பும், ஒரு சேர அறிதல் பதி ஞானத்தின் இயல்புமாம்.

பசு ஞான, பாச ஞானங்களுக்குத் தாமே பிரகாசித்தலும், பிறிதொன்றைப் பிரகாசப் படுத்துதலும் இல்லை. ஒரு பொருளை, அந்தக் கரணங்களின் துணைகொண்டு அறிவிக்கிற கண், அதன் இயல்பையோ; அதற்கு முதலாகிய அந்தக் கரணங்களையோ அறிவதில்லை. அது போலவே அந்தக் கரணங்களும், ஏனைய தத்துவங்களும் தம்மியல்பையும், தமது முதலாகிய உயிரையும் அறியமாட்டாதனவேயாம், இன்ப துன்பங்களை இறைவன் உணர்த்த உணருகின்ற உயிரும், அதன் இயல்பையும், அவ்வுயிர்க்குயிராய் அறிவித்து நிற்கின்ற இறைவனையும் அறிவதில்லை. சிவஞானமாகிய பதி ஞானம் ஒன்றே, தன்னிலையை விளக்குவதுடன் உயிர்நிலையையும் விளங்கவைத்து இவற்றிற்கெனத் தனக்கு எந்தத் துணையும் இன்றி, எல்லாவற்றையும் ஒரு சேர அறிந்து, தானே பிரகாசித்தும், பிறவற்றைப் பிரகாசிக்கச் செய்தும் நிற்பதாகும். ஆதலால் அச் சிவஞானத்தைத் துணையாகக்கொண்டு இறைவனை, அந்தச் சிவஞானமாகிய அறிவிற் காணப்பெற்று, அவன் திருவடியைக் கூடும் பேறு பெற்ருல், மலச் சேர்க்கை நீங்கும். நீங்கிய மலம், வாதனை பற்றி மீண்டும் கூட வருமாஞல், சிவபாவனையை விடாது செய்து, திருவடி ஞானத்தால் சிவத்தைச் சேருதல் வேண்டும்.

உலகங்களும், அதிலுள்ள நுகர்ச்சிப் பொருள்களும் நிலையில்லாதன எனக்கண்டு, அந்தக் காட்சி சலியாதிருக்கப் பெறுதலாகிய ''பிரபஞ்ச **வைராக்கியம்**'' பெற்றவர்க்கே, திருவடி ஞானம் வந்துகூடும். அந்தப் பிரபஞ்ச வைராக்கியம் நிலை பெறுவதற்குச், ''**சிவோகம் பாவனை**'' ஒன்றேசாதனமாயிருப்பது. அதனுலேயே வேத சிவாகமம் ஆதிய அருள் நூல்கள், சிவோகம் பாவனையைக் கைக் கொள்ள வேண்டுவதன் இன்றியமையாமையை வலியுறுத்துவனவாயின. இவ்வுண்மையைத் திருமூலதேவநாயஞர் தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்து முப்பத்தைந் தாவது செய்யுளில் தெளிவுபடுத்தியுள்ளார். அத்திருப்பாட்டு,

''ஆற்றுகி லாவழி யாகும் இறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின்
புகழ்ந்திடில்
மேற்றிசைக் கும்கிழக் குத்திசை எட்டொடு
மாற்றுவன் அப்படி ஆட்டவும் ஆமே''

என்பதாகும். உயிர், முதலில் தனது உடம்பையே தானென்று கருதிக்கொண்டிருக்கும். பின்னர்ப் படிப்படியாக உடம்பு முதலிய தன்னுடன் தொடர்பு கொண்டிருக்கும் பொருள்கள் அனைத்தையும், தானல்ல என அறிந்து நீங்குகிறபொழுது, தன்னையே பிரமமென்று விபரீதமாக உணரும். சுட்டி அறியப் பட்ட உடம்பு முதலியவற்றிற்கும், சுட்டி அறியப்படாத பிரமத்திற்கும் தான் வேறென்று கண்டு சிவஞானத்தால் பாசத்தை நீக்கித், தன்னிடத்தில் பதிப்பொருள் கலந்திருத்தலை நாடியுணர்ந்து, முனைப்பின்றி அருள் வழியில் நின்று, சிவோகம் பாவனை செய்யவேண்டும். இந்த மேலான பேறு, பல கோடி பிறவிகளிற் செய்த. சிவபுண்ணிய முதிர்ச்சியினுலேயே வந்து பொருந்துவதாகும். யாருக்கும் எளிதில் அமையாதது இந்தச் சிவோகம் பாவனையாதலால், இதனை ''**ஆற்றுகிலா வழி**'' என்று ஆசிரியர் திருமூலதேவர் குறித்தருளுகின்ருர்.

சிவோகம் பாவனையினுலேயே சிவம் வந்து கூடும் பேறு பெறத்தக்கதாதலின் ''ஆற்றுகிலா வழியாகும் இறைவன்'' எனக்கூறி,

''வந்து சேரும்'' என்னும் பொருளில் "ஆகும்" என்ற சொல்லை, இத்திருப்பாடலில் ஆசிரியர் வைத்துள்ளார். '' தாங்குபவன் '' என்னும் பொருளையுடைய ''இறைவன்'' என்ற சொல்லால் சிவத்தைக் குறித்திருப்பதும், இக் கருத்துப் பற்றியேயாகும். சிவத்தைச் சிவோகம் பாவனையாகிய நெறியால் போற்றுவதும், அதனால் விளைந்த இன்ப அநுபவ எல்லையில் நின்று புகழ்வதும், சாதகர்களது கடமைகளாகும். அங்ஙனம் போற்றிப் புகழுகின்ற அவர்கள் பெறும் பயன், சிவமாந் தன்மைப் பெருவாழ்வு பெறுவது. ''கசிந்த, தொண்டினொடும் உளத்தவன்றான் நின்ற கலப்பாலே, சோகமெனப் பாவிக்கத்தோன்றுவன்வேறின்றி, விண்டகலும் மலங்களெல்லாம் கருடதியானத்தால், விடமொழியும் அதுபோல விமலதையும் அடையும், பண்டை மறைகளும் அது நான் ஆனேன் என்று பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே'' என்ற சிவஞான சித்தியார் இங்கே நினைவு கூர்தற்குரியதாகும். ''சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்'' என்பது திருவாசகம். ஞான சாதனக்கிரியையாகிய நிருவாண தீட்சையில், சீடனுக்கு அத்துவ சோதனை செய்து பாசநீக்கம் நிகழ்வித்துச், சிவபெருமானது எண்குணங்களும் அவனுக்கு வந்து பொருந்தியிருக்க, ஆசிரியன் '' சம்பாத ஹோமம்'' செய்வது விதிமுறையில் கண்டதாகும். இந்தச் செயலும், உயிர் சிவமாந் தன்மைப் பெருவாழ்வு பெறும் உண்மையை விளக்குவதே.

இதனை ஆசிரியர் ''மேற்றிசைக்கும் கிழக்குத்திசை எட்டொடு, மாற்றுவன் அப்படி ஆட்டவும் ஆமே'' என்று குறித்தருளுகின்றார். மண்முதல் நாதமீறான தத்துவங்களைப் படைத்து, அவற்றிற்கான இயல்பு தொழில்களை வகுத்து, அவற்றை இயக்கும் அதிபதிகளை நியமனம் செய்து முறைபிறழாது அவற்றின் இயக்கம் நிகழும்படி வைத்திருப்பவர் பரம்பொருளாகிய சிவபெருமான். எல்லா நியமனங்களுக்கும் வினைமுதல் தலைவராயிருக்கும் அவர், எந்த ஒன்றையும் அதன் இயல்பு தொழில்களிலிருந்து மாறுபடும்படி செய்யவும் வல்லவரேயாவார்.

குழந்தைப் பருவத்தில் முருகப்பெருமான் செய்தருளிய திருவிளையாடல்கள் பலவற்றுள் எட்டுத் திசைகளையும் நியதியிலிருந்து மாறும்படி வைத்தது, திசைக் காவலர்களை வென்றி கொண்டது முதலியவைகளும் கூறப்பெறும். சிவோகம்பாவனை செய்து சிவமேயாகிப் பேரறிவுபெற்ற சாதகன், சிவபெருமானைப் போலவே தத்துவ தாத்துவிகங்களாகிய எல்லாப் பொருள்களின் இயல்புகளையும் மாற்றுகின்ற பெருவன்மையை யுடையவனாவான் என்பதை ''மேற்றிசைக்கும் கிழக்குத் திசை எட்டொடு, மாற்றுவன்'' என்று ஆசிரியர் கூறுகின்றார்.

மேற்றிசை என்பது உச்சி, உச்சியையும் மற்ற எட்டுத் திசைகளையும் கீழ்ப் பகுதியையும் மாற்றி அமைக்கும் ஆற்றல் மட்டுமின்றி, அவற்றை மீண்டும் அவ்வவற்றின் நிலைகளில் நிற்குமாறு அமைக்கும் ஆற்றலும் சிவோகம்பாவனை செய்பவனுக்கு உண்டு, இது ''அப்படி ஆட்டவும் ஆமே'' என்று குறிக்கப்பெற்றது இந்தத் திருமந்திரத்தால் சிவோகம் பாவனையின் இன்றியமையாமை தெற்றெனப் புலப்படுத்தப்படுகிறதல்லவா?

நலமே தழைக !



மணவாளமாமுனிகள்

திருவரங்கம்



ஆண்டாள்—இராசமன்னார்—கருடாழ்வார்

ஸ்ரீவில்லிபுத்தூர்

# "பாட்டுக்கொரு புலவன்"

தமிழக முதல்வர் மாண்புமிகு
கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள்

தேர்ச் சாரதிபோல் தலைப்பாகை—
திசை நோக்கும் பெரும் விழிகள்—
திருகிவிட்ட கூர் மீசை—
தேன் தமிழ்பால் தணியாத பேராசை!

ஏட்டுக்குள்
வீட்டுக்குள்—தமிழ்
நாட்டுக்குள்
இதயக் கூட்டுக்குள்
இடம் பெற்ற பாட்டுக்கொரு புலவன் !

பாவாணன் ; பாரதிரக்
கவிதைச் சாட்டை கொண்டு!
பரங்கியரைப் பழமைகளைத்
தாக்கித் தகர்த்திட்ட
பத்தொன்பதாம்
சித்தன்—பாரதியார்!
அவர் நினைவுநாள் இன்று!
ஆம்; மகாகவி மறைந்தநாள்!
இன்றைக்கு எண்பத்தைந்து ஆண்டுகட்கு
முன்பு பிறந்து, நாற்பதுக்கும்
ஓராண்டு குறைவாக வாழ்ந்து,
நாட்டு மக்களின் நாடிநரம் பெல்லாம்
உயிரேற்றித் துடிப்பேற்றிச்
சென்றுவிட்டவர் பாரதியார்.

ஆண்டுக்கொரு முறை என்றல்ல; ஆடுகின்ற மயிலைக் காணும்போதும்—கூவுகின்ற குயிலை ரசிக்கும்போதும்—ஓடுகின்ற மழலையைப் பார்க்கும்போதும்—பாரதியார் நினைவு வந்தே தீரும். குயில் பாட்டும், குழந்தைப் பாட்டும் மறக்கக் கூடியவைகளா !

"பாதகம் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!—அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா!

ஆகா-விளையும் பயிருக்கு அவர் இடுகின்ற வீர உரம் எப்படிப்பட்டது பார்த்தீர்களா? நீல வானமும், நெடிய கடலும் அவர் நினைவை ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன.

"நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்படி வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறி படைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்."

சின்னஞ்சிறு மனப்பறவை எவ்வளவு ஆர்ப்பாட்டமாகப் பறக்கிறது? எவ்வளவு தெம்பான வார்த்தைகள் எழில் கூட்டிக்கொண்டு மனப் பறவையின் உற்சாகப் பயணத்திற்கு ஊக்க மளிக்கின்றன !

தாயின் மணிக்கொடி பறக்கும் போதெல்லாம் அந்தத் தமிழ்க் கவிவேந்தனின் எழுச்சி கீதம் கேட்டுக் கொண்டேயிருக்கும்.

''தாயின் மணிக்கொடி பாரீர்—இதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்.''

காக்கைச் சிறகும்—வெள்ளைப் பூனையும் அவர் தம் கவிதை வரிகளைச் சுருக்கென்று நம் நெஞ்சில் பாய்ச்சும்!

காணி நிலமும்—கரும்புத் தோட்டமும் அவர் பாடலை எதிர் நிறுத்தி நம்மைப் பாடாய்ப் படுத்தும்!

'விடுதலை' என்ற நான்கு எழுத்துக்களுக்கு எழுத்துக்கு எழுத்து எரிமலைக் கனலை உருவாக்கி வடித்தவர் பாரதியார்.

எங்கோ நடந்த புரட்சியின் முடிவை இங்கே எழுதிக் காட்டி, தோள் தட்டி நிற்கும் விடுதலை மறவர்க்கு அவர் தந்துள்ள போர்க் கருவி எத்துணை வீறுகொண்ட பாடலாக எழுகின்றது.

''இம் என்றால் சிறை வாசம், ஏனென்றால்
வனவாசம், இவ்வா றங்கே
செம்மை யெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்
அம்மை மனங் கனிந்திட்டாள்; அடி பரவி
உண்மை சொல்லும் அடியார் தம்மை
மும்மையிலும் காத்திடுநல் விழியாலே
நோக்கினள், முடித்தான் காலன்''.

கொடியவர்களின் முடிவுக்கு மகிழ்ந்து, பாரதி காட்டிய மங்கல முரசமென்போம் இந்தப் பாடலை!

''ஆயிரந்தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்! பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுன்ன
டாமெனல் கேளீரோ?''

எனச் சங்கநாதம் செய்து, செத்த பிறகு, சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாமென்றே எண்ணியிருக்கும் பித்த மனிதரைச் சாடியவர் பாரதி!

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமும் இன்றி வஞ்சனை சொல்வாரைக் கடிந்துரைக்கும் கர்மவீரர்.

சிந்தையிற் கள் விரும்பிச் 'சிவ சிவ' என்பவரைச் சீறிச்சாடும் செந்தீ அவர்,

''இரும்பைக்காய்ச்சி உருக்கிடுவோர்—
இயந்திரங்கள் வகுத்திடுவோர்—
கரும்பைச் சாறு பிழிந்திடுவோர்—
கடலில் மூழ்கி முத்தெடுப்போர்—
மண் எடுத்துக் குடங்கள் செய்திடுவோர்—
உண்ணக் காய் கனி தந்திடுவோர்—
உழுது நன்செய் பயிரிடுவோர்—
எண்ணெய் பால் நெய் கொணர்ந்திடுவோர்—
இழையை நூற்று நல்லாடை செய்திடுவோர்—
பாட்டும் செய்யுளும் கோத்திடுவோர்—
நாட்டிலே அறம் கூட்டிடுவோர்''—

—இவர்கள் அனைவரையும் தெய்வங்கள் என்றே தொழுதவர் பாரதியார்.

பழம்புலவர்கள் எல்லாம் சொர்க்கம் செல்ல வரம் கேட்பர்; பாரதியோ சொர்க்கத்தையே இந்தப் புவிமீது கொண்டு வந்து வைக்கும் வரம் பெற்றார்.

ஏழைகள் வாழ்வே அவருக்குச் சொர்க்கம்; இந்தச் சூழ்நிலையில் எழுகின்ற கவிஞர்கள்தான் மக்கள் கவிஞர்களாகிறார்கள். அவர்கள் கடல் முத்தைக் கண்டவுடன் அதனை உழைக்கின்ற

ஏழைகளின் வியர்வை முத்துடன் ஒப்பிடவே முந்தி நிற்பர்; அவர்கள், கோவைக் கனியைப் பாவையின் இதழுக்கு ஒப்பிடுவதைவிடக் கொள்கைக்கெனக் குமுறி நிற்கும் வீரனின் சிவந்த விழிகளுக்கு ஒப்பிடுவதையே சிறந்த தெனக் கருதுவர்; ஆண்டவனைப் பற்றி ஆயிரம் பாடல் எழுதுவதும், ஒரு நாட்டின் அடிமைத் தளை முறிவதற்காக ஒரு பாட்டு எழுதுவதும் ஒன்றேதான் என எண்ணிச் செயல்படுவர் மக்கள் கவிஞர்!

அவர்களில் முதல்வரே, பாரதியார்!

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்''

எனும் குறள் படித்தார்.

''தனியொருவனுக் குணவில்லை யெனில்—இந்த
ஜெகத்தினை அழித்திடுவோம்''

எனும் குரல் கொடுத்தார்.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்''

என்கின்ற குறளுக்கு;

''தின்னவரும் புலி தன்னையும் அன்போடு
சிந்தையிற் போற்றிடுவாய்''

என்று எளிய நடையில் விளக்கம் தந்தார்.

''நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்''

எனக் கூறி, அவ்வண்ணம் வாழ்ந்து காட்டியவர் அவர்.

உரைகூற ஒரு புலவர் அருகில் இல்லாவிடில் பழந்தமிழ்நூல் படித்திட முடியாதென்ற நிலையிருந்த போது, பசுமரத்தாணிபோல் நெஞ்சத்தில் பாய்ந்து பதியும் கருத்துக்களை எளிய தமிழ்ச் சொற்களால் பாடிக்காட்டி, அவ்விதமே தமிழகத்தைப் பழக்கிய பெருமை பாரதிக்கு உண்டு. கத்தியை உச்சி மட்டும் தூக்கிக் கர்ச்சனை புரியும் படைத்தளபதியின் கட்டளைக்குப் பணிந்து களம் செல்லும் வீரர்களைப் போல்—பாரதியின் இனிய கவிதை மொழி கேட்டுப் பட்டாளத்து வீரரெல்லாம் தோற்றுப்போகும் பான்மையிலே, பரங்கியரை எதிர்ப்பதற்கு அணி திரண்ட தமிழகத்துக் காட்சிதனை மறப்பதற்கு யாரால் முடியும்? எவரால் முடியும்?

''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே''

நாட்டுப்பற்றும்—சுதந்திரக் கனலும் ஒவ்வொரு வரியிலும் ஒளி விடுகிறதன்றோ, இந்நாடு விடுபட்டே தீரும் என்ற கவிஞரின் தீர்க்க தரிசனம்,

''ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோ
மென்று ஆடுவோமே!''

என்ற நம்பிக்கை மிகுந்த சுதந்திரப் பள்ளாக அன்றே ஒலித்தது.

கனல் கொட்டி எழுதினர்—அனல்தெறிக் கப்பேசினர். துள்ளிவரும் வேல்போல—ஆவேசத்தை அள்ளிவரும் வாள்போலச்—சொல்லடுக்கிச் சூடேற்றிக் கவிதைகளைச் சுழல வைத்தார். அந்நியரின் தலை சுழல ஆட்டி வைத்தார்.

நெருப்புமிழும் நெஞ்சத்துடன் பகைவர்களை எதிர்த்தபோதும், நெறியற்ற சொல் ஒன்றும் அவர் எழுத்தில் இருந்ததில்லை, பூண்டு விட்ட விடுதலைப் போர்க் கோலத்திலும், பூவிதழாம் நல்ல தமிழ் எடுத்துப் போர் முரசில் சூட்டிவிடப் பாரதி தவறியதில்லை.

எடுத்தேன் கவிழ்த்தேன் எனும் ஆணவ உரைகள் அண்டியதில்லை. இழி மொழிகள், அவர் எழுத்தேடுகளின் பக்கம் எட்டிப் பார்த்ததுமில்லை. கவிதைக் கணைகள் கிளம்பும்—அவை கண்ணியத்தோடு கிளம்பும்.

எதிரிகளைப் பண்படுத்தும் எழுத்து, புண் படுத்தும் எழுத்தல்ல பாரதியின் எழுத்து; தளையும் தொடையும் தெரிந்து விட்டால், தலை கீழ் நிற்கும் கவியுலகம் பாரதியின் காலத்தில் இல்லை.

பாரதியின் நோக்கு நிமிர்ந்த நோக்கு—உள்ளமோ அடக்கத்தின் கருவூலம், அவர் விழிகள் அம்பெனக் கூர் காட்டும்—ஆனல் அன்பினை மழைபோல் பொழியும். யார்க்கும் தலைதாழ்த்தா வணங்காமுடி, ஆயின் தமிழுக்கு —நல்ல தமிழர்க்குத் தெண்டனிடும் தேன் தமிழன்.

பூமிக்கு எழுதுவது
புகழுக்கு எழுதுவது

என்ற நிலை மாற்றி நாட்டுப் போருக்கு எழுதிய கவிவீரன்.

''ஏட்டையும் பெண்கள்
தொடுவது தீமையென்
றெண்ணி இருந்தவர்
மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப்
பூட்டி வைப்போமென்ற
விந்தைமனிதர்
தலை கவிழ்ந்தார்''.

இப்படிப் பெண்ணுரிமைக்காகப் புயல் கொள்கின்ற புலவன், இதோ தென்றல் தாங்கி வருகின்ற காட்சி கண்போம்,—

''சின்னஞ் சிறு கிளியே—கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே''—

தென்றலென வந்த பாரதி, இதோ,சிந்துபாடும் அருவியாக;

''பாயும் ஒளி நீ எனக்கு
பார்க்கும் விழி நான் உனக்கு
தோயும் மது நீ எனக்கு
தும்பியடி நான் உனக்கு—
வீணையடி நீ எனக்கு
மேவும் விரல் நான் உனக்கு''

மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்ருய், கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவாய், பாரதியின் இன்பக் கனவாய், இதோ ஒரு பாடல்..........

''சிங்களத் தீவினுக்கோர்பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்.
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்.
சிந்துநதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்,''

பாரதியின் வாரிசாம் புரட்சிக் கவிஞர் பாரதி தாசன்;

''பாரதியார் உலக கவி; அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்;
ஒருருக்கு ஒரு நாட்டுக்கு உரியதான
ஒட்டைச் சாண் நினைப்புடையார் அல்லர்''

என்று பாடி மகிழ்ந்தார்—தமிழரையும் மகிழ வைத்தார்.

''சீனம்மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு''—

பாரதி இனிக்க இனிக்கப் பாடிய தமிழ்நாடு...

இன்று இந்த மண்ணுக்குரிய பெயராய்......

மாநிலத்தின் புகழ் செதுக்கித் திகழ்கின்ற காட்சி

கண்டு களிக்கின்றோம்......பாரதியை வாழ்த்து கின்றோம்.

யார் பாடினாலும்—அவர் எதைப் பாடினாலும்—பாரதி, விட்டதை அல்ல; தொட்டதைத் தானே பாடுகின்றார் என்ற நினைப்பு நமக்கு வராமல் இல்லை.

மறைந்த மகாகவிக்கு நாம் செலுத்தும் மரியாதை அவர்தந்த கருத்துக்களை மறக்காமல் .........மறைக்காமல் இருப்பதுதான்.

அவர், சாதிகளைச் சாடினால் ; நாம் அதனை முழுமையாக ஒழித்தோமா ?

அவர், வீர சுதந்திரம் வேண்டி நின்றார். பெற்றதைப் பேணிக் காத்திட, நாம் நம்மைச் சரியாகத் தயார்படுத்திக் கொண்டோமா?

பெண்ணடிமை தீர்க என்று கூவினர். முற்றிலும் தீர்த்தோமா?

''வெட்டுக்கனிகள் செய்து தங்கம் முதலாம்
வேறு பல பொருளும் குடைந்தெடுப்போம்''

என்றார்; இன்னும் அதில் குறைவைத்துள்ளோம்.

அவர் எண்ணியவைகளையெல்லாம் நாம் செய்துவிடப் போகிறோமா? அல்லது அவரே மீண்டும் எழுந்து வந்து நமக்கு உணர்த்தினால் தான் நாம் விழிப்போம் என்ற கருத்தில்;

பாரதி சென்ற திக்கு நோக்கி.........

''ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமைகண்டு பொங்குவாய் வா வா வா''

என்று அவரை அழைக்கப் போகிறோமா : அழைப்பதற்கு முன்பு அவர் இதோ வந்து விட்டார்—அவர் கவிதைகளில் சிரிக்கிறார்—பாடல்களில் நடக்கிறார்—எழுத்துக்களில் நிற்கிறார்—எண்ணங்களில் நிறைகிறார்.

அந்த மாவீரர் முன்னிலையில்
மனிதனை மனிதன் மதித்திடக்
கற்றுக்கொள்வோம்—
அரசியல் பண்பு போற்றுவோம்—
ஜனநாயக மரபு காத்திடுவோம்—
அவர் தொட்டபணி தொடர்வோம்

நலிவற்ற நாடு-வலிவுற்ற மக்கள்-தாழ்வற்ற இனம்-வாழ்வுற்ற மொழி-இந்தக் குறிக்கோள் வென்றிடப் பாரதி நாளில் உறுதி மேற்கொள்வோம்.

வாழ்க பாரதியின் புகழ்! வாழ்க!!

# நம்மாழ்வாரும் மணவாளமாமுனிகளும்

திருமலைநல்லான் இராமகிருஷ்ணய்யங்கார்

### தந்தையும் ஆசாரியனும் :

உடலுக்குப் பிறப்பை அளிப்பவன் தந்தை. உயிருக்கு அறிவுப்பிறப்பை அளிப்பவன் ஆசாரியன். முதலில் சொன்னது அழிவுறும் பிறப்பு. பின்னர்ச்சொன்னது அழிவுறாதது. அத்தகைய சிறந்த பிறப்பைத் தருமவனுன ஆசாரியன் தந்தையினும் சீரியனுவான். தந்தை உடலுக்கான பொருளை மகனுக்குச் சேமித் தளிப்பதுபோல, ஆசாரியன் உயிருக்கான நற் பொருள்களைச் சேமித்தளிக்கின்றுன். அந்திம சமயத்தில் மைந்தருக்குத் தனது அருமந்த பொருளை ஒப்படையாது தந்தையினுல் இருக்க முடியுமா? ஆசாரியனும் தனது அரும்பெரும் பொருளை அந்திம சமயத்தில் அந்தரங்கச் சீடருக்கு ஒப்படைத்தே செல்கின்றனர். 'தகுந்த சீடனிடம் ஆத்மவித்தையை ஒப் படைத்து உடலைவிடல் வேண்டும்' என்கிறுன் எம்பெருமானும். 'பீஷ்மன் என்னும் சூரியன் அஸ்தமித்துவிட்டால் அறிவென்னும் வெளிச் சம் அற்பமாகிவிடும்' என்று, பீஷ்மனிடம் விரைவில் உபதேசத்தைப் பெறும்படி கண் ணன் தர்மபுத்திரனைத் தூண்டியதும் இங்கு அறியத்தக்கது.

### ஆசாரியன் அளித்த நற்பொருள் :

வைணவ மரபில் முதல் ஆசாரியர் நம்மாழ் வார். இறுதி ஆசாரியர் மணவாளமாமுனிகள். அவ்விருவருமே நமக்கு நற்பொருளை அந்திம காலத்தில் கொடுத்து உய்யும் வழிகாட்டியுள் ளனர். நன்றி மறவாது அவர்களைப் போற் றுவது நமது கடமை. நம்மாழ்வார் ''நாள் களும் நணியவான'' என்று இறுதி வேளை நெருங்கியதும் ''அடிமைசெய்ய, வினைகள் தாமே மாய்ந்தறும்'' என்பதாக உபதேசித் தருள்கிறுர். மணவாளமாமுனிகள் இறுதி வேளை அணுகியவாறே ஆசார்ய ஹ்ருதய வியாக்கியாநம் என்னும் அரும்பெரும் பொருளை நமக்குத் திரட்டிக் கொடுத்திருக் கிறுர். முதுமைப் பருவத்தில் திருமேனி வலு விழந்து திருவணையில் சாய்ந்தருளின நிலையில், திருக்கழுத்து நோவத் திருவெழுத்துச் சாத்தி யருளும்படியைக் கண்டு கந்தாடையண்ணன் ''தேவரீர் ஏதுக்காக இப்படி பிரயாசைப்படு கின்றீர்'' என்று கேட்க, மணவாளமாமுனிகள் ''உம்முடைய புத்திர பௌத்திராதிகளுக்காக'' என்று அருளிச் செய்தாராம். ஆசார்ய ஹ்ருதய வியாக்கியாநம் அவ்வளவு அரும்பாடுபட்டு முதுமைப் பருவத்திலே மணவாளமாமுனிகள் நமக்கு அள்ளிக்கொடுத்த அரும்பொருள்! அஃது இன்றேல் ஆசார்ய (நம்மாழ்வா)ருடைய திருவுள்ளத்தை நாம் அறிவது எங்ஙனம்?

நம்மாழ்வார் மணவாளமாமுனிகள் இரு வரும் நமக்கு வழங்கி இருந்தாலும், முன்னவர் கொடுத்த பொருளை முடிப்பவிழ்த்து நமக்கு அனுபவிக்க முடியவில்லை. பின்னவர் தந்ததோ எளிதில் தானும் அனுபவிக்கத்தக்கதாய், முன் னவர் கொடுத்ததை முடிப்பவிழ்த்து அனுபவிப் பிக்கவும், வல்லதாய் அமைந்துள்ளது. இத ஞல் நமது நன்றிக்கு நம்மாழ்வாரிலும் மண

வாளமாமுனிகளே மிகவும் உரியவராதலை அறியலாம்.

## ஆசார்யத்வ பூர்த்தி:

வைணவ மரபில் நம்மாழ்வாருக்கும், எம் பெருமானுருர்கும், மணவாள மாமுனி களுக்குமே, ஆசார்யத்வ பூர்த்தி உண்டு. மண வாளமாமுனிகள் எம்பெருமானுரில் வேறு படாதவராதலானும், எம்பெருமானுர் நம் மாழ்வாருடைய திருவடியிலடங்கி நிற்பவராத லானும், நம் வழிபாட்டிற்கு மிகவும் உரிய நம் மாழ்வார் திருவடி நிலையான இராமாநுஜரே குரு, மற்றவரல்லர் என்பதும் பொருந்தும்.

சரணுகதி மந்திரத்தைத் திருவாய்மொழி யால் விவரணம் செய்து ''அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே'' என்று, தானும் சரணுகதி பண்ணி, மற்றவர்களையும் சரணுகதி செய்யும் படி உபதேசித்தலின், மந்திரத்திற்கு வியாக்கி யாநம் (இயற்றல்), ஒழுக்கத்தில் நிலைநிற்றல் (அதனின் நிலை நிறுத்தல்), இம்மூன்றும் அமைந்து ஆசார்யராய் விளங்குகிறுர் நம்மாழ் வார். மணவாளமாமுனிகள் தாமும், இம் மூன்று நிலையும் வாய்க்கப்பெற்று ஆசார்யராய் விளங்குவதோடு, மந்திரவியாக்கியாநம் இயற்று வதில் நம்மாழ்வாரினும்சிறந்துவிளங்குகின்றுர்.

நம்மாழ்வாருடைய திருவாய்மொழி, மந் திர வியாக்கியாநம் என்பது நமக்கு நேரே தெரிவதில்லை. இங்ஙனம் வியாக்கியான மாகிறது என்று விளக்கிக் காட்டவேண்டி யிருக்கிறது. மணவாளமாமுனிகளின் நூல் களோ, அங்ஙனம் விளக்கிக்காட்ட வேண்டாத வாறு மந்திரங்களுக்கு நேரிடை வியாக்கியாந மாகவே அமைந்துள்ளன. ஏனையோருடைய நூல்களும் இங்ஙனம் மந்திரங்களுக்கு வியாக்கி யாநமேயாக யமைந்திருந்தாலும், அவை மண வாளமாமுனிகளின் வியாக்கியாநம் போலச் சிறந்து விளங்கவில்லை. மிக்க விரிவோ அன்றி, மிக்க சுருக்கமோ இன்றி, வேண்டிய அளவில் அமைந்து தெளிவுள்ளனவாய், மணவாள மாமுனிகளின் நூல்களே அமைந்து சிறந்து விளங்குகின்றன என்பது, அனுபவத்திற் காண் கின்ற உண்மையாகும். இருவருக்கும் மோட்சம் அளிக்கும் உத்தாரகாசார்யத்வம் முன்பே ''பொன்னுலகாளீரோ'' என்று தூதுவர்க்குப் பொன்னுலகை ஆளக்கொடுத்தலாலும், புளிய மரத்துக்கு வீடளித்தலாலும் வெளிப்படை.

## சரமபர்வோபதேசம் :

பிரதம பர்வ நிஷ்டை வெளிப்பொருளாக வும், சரமபர்வ நிஷ்டை உட்பொருளாகவும் காணப்படும் நம்மாழ்வார் உபதேசத்திலே இறைவனுக்கு ஆட்பட்டு நிற்றல் பிரதமபர்வ நிஷ்டை என்றும், அதில் முதிர்ந்து அவன் அடி யார்க்கு ஆட்பட்டு அதில் நிலை நிற்றல் சரம பர்வ நிஷ்டை என்றும் வழங்கப்பெறும். மண வாளமாமுனிகளோ அநுமைப்படுத்தாது பேச்சு வாக்கிலேயே ஐந்தாவது உபாயமாகக் கூறப் பெறும் சரமபர்வ நிஷ்டையை எளிதில் நம் போல்வார்க்கும் புலனும்படி செய்துவிடுவதாக, அவர் காலத்திலேயே நேரே இருந்து அனு பவித்த எறும்பியப்பா அருளிச் செய்கின்றுர்.

## தாய்மையருள் :

தாய்மைக்குள்ள மிக்க கிருபை நம்மாழ் வார்க்கும், இவரடி பணிந்தவர்க்கும் (எம்பெரு மானுருக்கும்) உள்ளதுபோல, நம் மணவாள மாமுனிகளுக்குமுண்டு. பகைவனுக்கு இதம் தேடின சீதை போலத்தான் குடியிருக்கும் மடத் துக்குத் தீயிட்டாரைப் பொறுத்து, அவர் தம் தமரையும் மணவாள மாமுனிகள் ஆட் கொண்ட ஐதிகம் காண்க. ''தேவீ லக்ஷ்மீர் பவஸி தயயா வத்ஸலத் வேநசத்வம்'' என்று எறும்பியப்பா மணவாளமாமுனிகளைப்பிராட்டி யின் கருணை வாய்ந்தவராக அருளிச் செய்திருப் பதும் அறியத்தக்கது.

## தெளிவு :

நம்மாழ்வாரின் திருவாக்குகள் தெளிவு வாய்ந்தவை. வடமொழி வேதாந்தத்திலுள்ள கலக்கங்கள் இவற்ருல் தீர்கின்றன. தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றன. ''பாஷ்யகாரர்

நம்மாழ்வார் திருவாக்குக்கொண்டு சூத்திரவாக்யங்கள் ஒருங்கவிடுவர்''. பாஷ்யகாரர் ஸ்ரீபாஷ்யம் பண்ணியருளும்போது சூத்திர வாக்கியங்களில் ஏற்படும் ஐயப்பாடுகளை நம்மாழ்வார் திருவாக்குகளால் தீர்த்துக் கொண்டாராம். அவ்வளவு தெளிவு நம்மாழ்வார் திருவாக்குக்களில்.

வடமொழி வேதாந்தத்தில் நம்மாழ்வார் திருவாக்குகள் தெளிவு பிறப்பித்தது போலவே, தென்மொழி மறையிலும் ரஹஸ்யத்ரயப் பிரஸ்தானத்திலும் மணவாளமாமுனிகளின் திருவாக்குக்களே தெளிவு பிறப்பிக்க வல்லனவாயுள்ளன. ''விசதவாக்சிகாமணி'' என்று அநுபவித்தறிந்தவர்கள் கொண்டாடுவது முற்றிலும் பொருந்துகின்றதன்றோ? 'இரகசியத்திரயம்' ஆசார்ய பரம்பரைக்கிரமமாக வந்து விவரிக்கப்பட வேண்டியிருந்தாலும், உபதேசிக்கும் ஒப்பற்ற தனது வைபவம் வெளிப்பட அதன் பொருளைப் பிரகாசப்படுத்துகிறவர் மணவாளமாமுனிகளே என்று எறும்பியப்பா அருளிச் செய்கிறார். வரவர முனிசதகம் 65ஆம் சுலோகம் காண்க. நமக்குத் தற்காலம் ஆசார்யர் மந்த்ரோபதேசம் செய்தாலும் ''கரியான் அர்த்தோ குரு:'' என்றபடி வியாச்கியாந கிரந்தங்கள் மூலமாக அர்த்தத்தில் தெளிவு பிறப்பிக்கும் மணவாளமாமுனிகளையே சீரிய ஆசாரியராகக் கருதுவதே முறை.

## நாவீறு :

''மலக்கு நாவுடையேற்கு மாறுளதோ இம்மண்ணின்மிசையே'' என்றபடி சர்வேச்வரனையும் மலங்க அடிக்கும் நாவீறு படைத்தவர் நம்மாழ்வார். இவருடைய திருவாயாலே திருவாய்மொழி கேட்க விரும்பினான் எம்பெருமான். நம்மாழ்வாரோடே கலந்து, அவர் வாயாலே ன்னைத்தானே அவன் பாடிக் கொண்டான். அப்பாடல்கள் பண்ணார் பாடலாய் அமைந்தன. இன்கவிகளாய் இனித்தன. தானே பாடிய பகவத் கீதைபோல வறண்டிருக்கவில்லை. பிரீதி உள்ளடங்காது அவ்வெம்பெருமானுக்கும் பெருகிற்று. ஆநந்தித்து அவன் நின்றான். வடமொழியில் வான்மீகி, வியாசர் போல்வாரும், தென்மொழியில் இன்கவிபாடும் பரம கவிகளான முதலாழ்வார்கள் போல்வாரும் இருக்க, அவர்களைவிட்டு நம்மாழ்வாரின் திருவாய்மொழியையே கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியுடன் ஆலாபநம்பண்ணுகிறான், திருமாலிருஞ்சோலைமலை அழகராம் அவ்வெம்பெருமான்.

மணவாளமாமுனிகளும் சிறிதும் தங்கு தடங்கலின்றிக் கங்காப்பிரவாகம் போலப் பேசும் ஆற்றல் பெற்றவரே. இறைவனும் கண்டு வியப்புறும் வித்தகம் வாய்ந்தது இவருடைய நாவீறுடைமை. நம்மாழ்வாரிடமிருந்து கேட்ட இன் கவிகளின் பொருளை இவருடைய திருவாயாலே கேட்க விரும்பினான் எம்பெருமான். மணவாளமாமுனிகளுக்கு அருளிப்பாடிட்டு, ஓலக்கமாக இருந்து ஓராண்டு திருவாய்மொழிக்கு வியாக்கியாநம் மணவாளமாமுனிகளிடம் கேட்டருளினான் அரங்கநாதன். ஆராவமுதக் கவியாயிரத்தின் வியாக்கியானமான ஈடு முப்பத்தாறாயிரத்தையும், இன்பஆறான அரங்கனது ஆனந்தத்தையும் பெருக்கிற்று, மணவாளமாமுனிகளின் திருவாக்கு. நஞ்ஜீயர் நம்பிள்ளை போன்ற எத்தனையோ ஆசார்யர்களிருக்க, அவர்களைவிட்டு மணவாளமாமுனிகளின் விரிவுரையையே பரிவுடன் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றான் மதிளரங்கன்.

## மகிழ்வூட்டல் :

மட்டற்ற மகிழ்ச்சி பொங்கி ''தென்னா தெனா'' எனப் பொருளற்ற ஆலாபநம் செய்தார், இன் கவிகளை நம்மாழ்வாரிடம் கேட்ட மலையழகர். அவ்வின் கவிகளின் பொருளை மணவாளமாமுனிகளிடம் கேட்ட அரங்கமாநகருளானோ பொங்கியெழும் உவகையுணர்ச்சி சொல் வடிவமாய் வழிய ''ஸ்ரீசைலேச தயா பாத்ரம்'' எனத் துவங்கும் சுலோகத்தை நன்றி அறிவுடன் சமர்ப்பித்தான்.

## புது மந்திரம் :

முதல் ஆசார்யரிடம் மூலத்தையும், இறுதி ஆசார்யரிடம் வியாக்கியாநத்தையும் கேட்ட

ஆரம்பாசார்யனுனலக்ஷ்மீநாதன் ''ஸ்ரீசைலேச'' என்னும் புது மந்திரத்தை வழங்கித் தான் இறுதி ஆசார்யனுகவும் ஆகிவிடுகின்ருன். ஆரம்ப ஆசார்யத்வம் தான்தோன்றியானது. இறுதியான ஆசார்யத்வமோ சிறப்பு வாய்ந்த மணவாளமாமுனிகளுக்குச் சீடனுனமை பற்றி அடியுடையது; தான்தோன்றியன்று. ஈசுவர னுக்கும் மணவாளமாமுனிகளின் சம்பந்தம் பெற்று, சீரிய ஆசார்யனுக விளங்குவதற்கு விருப்பம் ஏற்படுகின்றதென்ருல், மாமுனி களின் பெருமையை என்னென்பது,

## பிறந்தகம் :

இறைவனுக்கும் உபதேசிக்கும் ஏற்றம், நம்மாழ்வாருக்கும் மணவாளமாமுனிகளுக்கும் அவதாரம் செய்தருளிய ஊரின் மண்வாசி யாலே வந்தது. இருவரும் அவதரித்தது ஆழ் வார் திருநகரியிலே. இருவருக்கும் பிறந்தகம் ஆழ்வார் திருநகரி: புக்ககம் திருவரங்கம். எம் பெருமானுர் ஆசார்யனுய் இறைவனுன திருக் குறுங்குடி நம்பிக்கு உபதேசித்திருப்பது நகரி யின் மண்வாசியினுலேயே என்பதும், இங்கு அறியத்தக்கது. விபவத்திருமேனி ஸ்ரீபெரும் பூதூரில் அவதரித்தாலும் அர்ச்சைத் திருமேனி பவிஷ்யதாசார்ய விக்கிரகம் விபவாவதாரத் துக்கு முன்பே தோன்றியது திருநகரியிலேயே என்பதை, மறந்துவிடலாகாது. ஆக நம்மாழ் வாரும் அர்ச்சையுருவில் எம்பெருமானுரும் மண வாளமாமுனிகளும் தோன்றியருளிய புனிதத் தலம் திருநகரி என்க. முதல், இடை, கடையி லுள்ள சம்பிரதாயப் பிரவர்த்தகர் மூவரும் அவ தரித்த தென்குருகைக்கு ஒப்புண்டோ?

## உணவு :

திருநகரியிலுள்ளார் ஏனையோர் போலச் சோறு முதலியவைகளை உணவாகக் கொள்வர் அல்லர். அவர்களுக்கு ஜீவனம் திருவாய் மொழியே. இது நம்மாழ்வார் கருத்து.''குழாங் கொள் தென்குருகூர்ச் சடகோபன் தெரிந் துரைத்த குழாங்கொள் ஆயிரத்துள் இவை பத்துமுடன் பாடிக்குழாங்களாய் அடியருடன் கூடி நின்ருடுமினே'' என்னுமிடத்து, ''வாயுந் திரையுகளும்'' என்னும் திருவாய் மொழியிற் கூறப்பட்டதைக் காணவேணும் என்று திரண்ட ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு, ஆயிரக் கணக்கான திருவாய்மொழியைக் குழாமா யிருந்து பாடுவதையே ஜீவநமாக நம்மாழ்வார் கருதுகிருர். ''தொண்டர்க்கு அமுதுண்ண'' என்று, தொண்டர் உண்ணும் அமுதாகத் திரு வாய்மொழியை நம்மாழ்வாரே அருளிச் செய் திருப்பதையும் காண்க. ஆக சாத்விகர்ளான அடியார்களுக்கு சாத்விக ஆகாரமான திருவாய் மொழியைக்கொண்டு ததீயாராதனம் (அடி யவர்கட்கு உணவிட்டு உபசரித்தல்) நடத்துவது தக்கதே என்க. திருநகரியில் அவ தரித்த மணவாளமாமுனிகள், நம்மாழ்வார் கருத்துப்படி திருவாய்மொழியையே தமக்கு உணவாகக்கொண்டு பிறருக்கும் அதனையே வழங்கித் ததீயாராதனம் செய்வது மிகவும் பொருந்தியுள்ளது. ''மன்னியசீர் மாறன் கலை உணவாகப் பெற்ருேம்'' என்று தம் வாயா லேயே மணவாளமாமுனிகள் பெருமையாக அருளிச் செய்வதைக் காண்க.

## மதுரகவி நிலை :

உணவுக்குத் தக்கபடி உணர்வு அமையும் என்பர். பரம சாத்விதமான திருவாய் மொழியை உணவாகக் கொண்டவர்களுக்கு அகங்காராதிகள் ஏற்பட வழியில்லை. எனவே விடத்தக்க பொருளின்பங்களைப்பற்றி வேறு பட்டுப் பிணங்காது சாதுகோட்டியுட் கொள் ளப்பெற்றுச் சரமபர்வமான பாகவத சேஷத் வத்தில் நிரந்தரமாய் நிற்றல் இயலும். உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தவர் ஆதலின், நமக்கு ஊனிட்டு உயிரளித்த நம்மாழ்வாரே சேஷி; அவரே நம் தெய்வம் என்னும் சீரிய உணர்வு நமக்கு ஏற்படவேண்டும். இதுவே திருவாய்மொழி அநுபவத்தின் பயன். இப் பயனை எய்தியவர் மதுரகவிகள். ''தேவுமற்றறி யேன்'' என்னும் அவரது நிலையை எய்துவதே நமது குறிக்கோள். அந்த மதுரகவி நிலையை எய்தி நிற்பவர், நம்மணவாளமாமுனிகள். ''மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற் ருேம்'' என்று அவரே கூறிக்கொள்வது காண்க. மதுரகவி நிலையைப் பெற்றதன் பயனுக எழுந் ததே திருவாய்மொழி நூற்றந்தாதியாகும்.

### திருவாய்மொழியும் இராமாயணமும் :

திருவாய்மொழிக்கு முடிவான பொருள் நம்மாழ்வாரே என்பதைத் திருவாய்மொழி நூற்றந்தாதியாற் காட்டினர், மணவாள மாமுனிகள். இராமாயணத்துக்கு முடிவான பொருள் இலக்குவன்வடிவினரான மணவாள மாமுனிகளே என்பதை, வரவர சதகத்தால் காட்டினர் எறும்பியப்பா. இதனை விரிப்பிற் பெருகும்.

ஆக வைணவ மரபிற்கு அரணாய் அமைந்த திருவாய்மொழியாலும், இராமாயணத்தாலும், நாம் வழிபடவேண்டிய தெய்வம் நம்மாழ்வாரும், மணவாளமாமுனிகளுமே என்று உணர்ந்து, நாம் உய்வு பெறுவோமாக!

## செய்திச் சுருக்கம்

திருப்பெண்ணாகடம் மெய்கண்ட தேவர் கோயிற் குடமுழுக்கு விழாவின் சார்பில் முப்பொருள் மாநாடு நடைபெற்றது. சென்னை உயர்நீதிமன்றம் நீதிபதி கனம் திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமை தாங்கினர். திரு. சிவபழமலை அவர்கள் வரவேற்புரையும் வித்துவான் தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வாழ்த்துரையும், வழங்கினர்கள். வித்துவான் திரு. இரா. செல்வகணபதி, திரு. ஜி. கல்யாணம் பிள்ளை M.A. காஞ்சிபுரம் திரு. வீ. ஞானசம்பந்த முதலியார் ஆகியோர் முதல்நாள் சொற்பொழிவாற்றினர். இரண்டாம் நாள் நீதிபதி திரு. ஆர். சதாசிவம், B.A., M.L. அவர்கள் தலைமையில், நடுவர் திரு. எஸ். சோமசுந்தரம் B.Sc., B.L., திரு. ஜி. எம். முத்துச்சுவாமி பிள்ளை I. A. S. திரு. ஜி. வரதராச பிள்ளை B.A., திரு. பு. ரா. சுவாமிநாதன் M. A. L. T., வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனர், வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திரு. கொ. மு. தங்கவேலுப்பிள்ளை அவர்கள் நன்றியுரை கூறினர்கள்.

மூன்றும் நாள் சிதம்பரம் டாக்டர் திரு. கே. அரங்கசாமி பிள்ளை M.B.B.S அவர்கள் தலைமை தாங்கினர். திருப்பணிக்குழுத் துணைத் தலைவர் திரு. க. முத்துக்குமாரசுவாமிபிள்ளை வரவேற்புரை கூறினர். வித்துவான் திரு. கு. சுந்தரமூர்த்தி, B.A., அவர்கள் சொற்பொழிவாற்றினர். தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துரையும், வழக்கறிஞர் திரு. இரத்தினசபாபதிபிள்ளை B.A.,B.L., நன்றியுரையும் கூறினர். விழா இனிது நிறைவேறியது.

—ஆசிரியர்.

# சுவாமி விவேகானந்தர் நினைவாலயம்

திரு. எஸ். பத்மநாபன், B.A., நாகர்கோவில்

கன்னியாகுமரி புனித நீராடும் புண்ணியத் தலங்களுள் சிறந்து விளங்குகின்றது. நீலக்கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரி அன்னையின் பெயரால் இவ்விடம் அமைந்துள்ளது ஒரு சிறப்பாகும். இங்கே காணப்படும் தேவியின் ஆலயம் பழமையும் பெருமையும் வாய்ந்தது. அலைகடலும், ஒடுங்கிவரும் நிலப்பரப்பும் தழுவி நிற்கும் தென்கோடி முனை மட்டுமல்ல! வங்காள விரிகுடாவும், அரபிக் கடலும், இந்துமகா சமுத்திரமும் இணைந்து கலக்கும் இடமாகவும் இருந்து இது பெருமைப்படுகிறது. இச்சங்கமத்தில் மூழ்கி எழுந்தால் இறந்த மூதாதையர் முக்தி யடைவர் என்பது இந்து சமயத்தவரின் நம்பிக்கை. குமரி முனையிலிருந்து நோக்கினால் காலையில் சூரியன் உதிப்பதையும், மாலையில் அவன் அஸ்தமனம் அடைவதையும் நன்றாகக் காணலாம். பௌர்ணமியன்று சூரியன் மறைவதையும், சந்திரன் தோன்றுவதையும் ஒரேநேரத்தில் இங்குத்தவிர வேறெங்குமே காணமுடியாது. சித்திரை மாதம் பௌர்ணமி நாள், கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இதைக் காண மக்கள் கூட்டம் கூட்டமாக இங்கு வந்து கூடுகின்றனர்.

குமரித்துறை இந்து சமயத்தவரின் புண்ணியத் தலமாகத் தொன்றுதொட்டே விளங்கி வந்துள்ளது என வரலாற்று ஆசிரியர்களும், மேனாட்டு யாத்திரிகர்களும் தெரிவிக்கின்றனர். கி.மு. மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்த ஏராத்தோதஸ் என்ற அயல் நாட்டு யாத்திரிகர்தான் முதன்முதலில் குமரி முனையைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். கி. பி, முதல் நூற்றாண்டில் தோன்றிய பெரிப்பிளஸ் என்ற நூல், கன்னியாகுமரியைப் பற்றிய குறிப்பொன்றைத்தருகின்றது. "தங்கள் வாழ்நாளில் இறுதிப் பகுதியை இறைவனோடு இயைந்த வாழ்வாக மாற்ற விரும்பும் பலர் குமரித்துறை வந்து நீராடிப் பிரம்மச்சரிய விரதம் பூண்டு தங்கள் வாழ்வினைத் துறவு நிலைக்கு மாற்றி வந்தனர். ஒரு பெண் தெய்வம் இங்கே தங்கிக் கன்னி விரதம் மேற்கொண்டதை அடிப்படையாகக் கொண்டு பெண்களும் இவ்விரதத்தை மேற்கொள்கின்றனர்" என்று அந்நூல் குறிப்பிடுகின்றது.

பண்டைய தமிழ் இலக்கியங்களிலும் குமரி முனையைப்பற்றிய குறிப்புகள் வருகின்றன. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" எனத் தொல்காப்பியப் பாயிரமும், "குமரியம் பெருந்துறை" எனப் புறநானூறும் கூறுகின்றன. இந்து சமயத்தினர் கங்கை, காவிரி, கன்னியாகுமரி இம்மூன்று

புண்ணிய தீர்த்தங்களையும் ஒரே நிலையில் வைத்துப் போற்றிப் புகழ்வதைக்,

''கங்கை யாடிலென், காவிரி யாடிலென்''
கொங்குதண் குமரித் துறையாடிலென்''

என்ற அப்பர் தேவாரம் எடுத்துக்காட்டுகின்றது.

கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் மாடல மறையோன் குமரிக் கடலில் நீராடித்திரும்பியசெய்திகாணப் படுகின்றது.

''மாமறை முதல்வன் மாடலன் என்போன்
மாதவ முனிவன் மலைவலம் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து''

—(சிலப். 15; 13-15)

அன்னை பராசக்தி கன்னி பகவதியாகத் தவக்கோலத்திலே நின்று, மேலும் இந்நிலப் பரப்பைக் கடல் கொள்ளாமல் காத்துத் தன் அருளொளியைப் பரப்பி வருகிருள். தனித் தலைவனும்சிவபிரான்விசுவநாதராகக்காசியிலும் அவனது அருளாற்றலாம் பராசக்தி கன்னியா குமரியிலும் நின்று அருளுவதாக ஐதிகம். சக்தியே அகிலத்தின் படைப்பாற்றலாகவும் எல்லா ஜீவராசிகளின் உயிரோட்டமாகவும் அமைந்து விளங்குகிருள்.

''அருளது சக்தியாகும்
அரன் தனக்கு அருளையின்றித்
தெருள் சிவமில்லை
அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை''

என்பது சிவஞான சித்தியார்.

சிவனில்லையேல்சக்தியில்லை; சக்தியில்லையேல் சிவனில்லை. இதனை உருவகப்படுத்தவே காசி



சுவாமி விவேகானந்தர் நினைவா லயம், கன்னியாகுமரி.

யையும் கன்னியாகுமரியையும் சிறந்த புண்ணியத் தலங்களாகக் கருதுகின்றனர். காசியைச் சிவனது இருப்பிடமாகவும், கன்னியாகுமரியை அவரது சக்தியின் இருப்பிடமாகவும் கருதுவர். இதனைக் கருத்திற் கொண்டுதான் இந்து சமய நூல்கள் கன்னியாகுமரியிலிருந்து காசிவரையிலும் தீர்த்த யாத்திரை செய்யவேண்டுமென்ற நியதியை விதித்தன. இதனால் வடக்கும் தெற்கும் ஆத்மீகத் துறையில் பன்னெடுங் காலமாக இணைக்கப்பட்டுள்ளதை உணரலாம்.

1892-ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தர், குமரிமுனைக்கு வருகை தந்து, அம்மனின் அருளால் ஸ்ரீபாதப்பாறையிலே ஞானம் பெற்று, அமெரிக்க நாடு சென்று இந்து சமயக் கருத்துக்களை உலகறியப் பறைசாற்றினர். ''கன்னியாகுமரி பகவதியம்மன் கோவிலில், இந்தியாவின் கடைசித் துண்டுப் பாறையில் இருந்தபோது என் உள்ளத்தினுள் ஒரு திட்டம் தோன்றியது'' எனக் கூறினர் சுவாமி விவேகானந்தர். அந்தத் திட்டந்தான் துறவியான சுவாமி விவேகானந்தரை, உலக அறிஞர்களின் ஒளிவிளக்காய்த் திகழ வைத்தது. அலைந்து திரியும் துறவியாக வெள்ளிப் பனிமலையாம் இமயத்திலிருந்து முக்கடலும் கூடி முழங்கும் குமரிக்கரைவரை, தீர்த்த யாத்திரை செய்து பகவதியம்மனின் ஆசியைப் பெற அவள் தவம் செய்துநிற்கும் கோவிலை வந்தடைந்தார்.

அன்னையின் தரிசனத்தால் பக்திப்பரவசமடைந்துஅவள் திரு உருவத்தின் முன் வீழ்ந்து வணங்கிஆசிபெற்றார். 1892-ஆம்ஆண்டு டிசம்பர்மாதம் 25-ஆம் நாள் மாலையில், இந்தியத் தாயின் பாத கமலத்தை நீராட்டும் முக்கடலின் நடுவே கொந்தளிக்கும்அலைகளில்குதித்துநீந்திச் சென்று, கரையிலிருந்து 1600அடிதொலைவிலுள்ள 'ஸ்ரீபாதைப்பாறை'யைஅடைந்து அன்று இரவு முழுவதும் அங்குத் தியானத்திலே அமர்ந்திருந்தார், வடக்கே தெரிந்த தமது பொன்னாட்டை நோக்கி, அதன் ஆத்மீக வளத்தை நினைத்து அதனை மேலை நாட்டிற்கு எடுத்துக்கூறத் திட்டமிட்டார். புகழேணியில் உச்சியிலிருந்த தமது நாடு கீழே விழுந்து கிடப்பதைக் கண்டு வருந்தி, அதன் மூல காரணத்தையும் உணர்ந்தார். சோர்வுற்று, தாழ்வுற்று, இந்நிலையிலிருந்த இந்திய மக்களுக்குப் புத்துயிர் அளித்தார்.

மங்கிக் கிடந்த இந்தியக் கலாச்சார வரலாற்றுக்கு ஒளி கொடுத்து, அதை மேலை நாடுகளுக்குத் தெரிவிக்க, அமெரிக்க நாட்டுச் சிக்காக்கோ நகரில் நடைபெற்ற உலக சமய மாநாட்டிற்குச் சென்றார். அங்கு இந்து சமயத்தின் வேதாந்தக் கருத்துக்களை எல்லோருக்கும் புரியவைத்து, அதன் மேன்மையை உணரவைத்தார்.

உலகநாடுகள் போற்றிப் புகழ்ந்த சுவாமி விவேகானந்தர், இவ்வளவு சிறப்பும் மேன்மையும் பெறக் காரணமாக இருந்தது, குமரிக் கடலின் நடுவே உள்ள 'ஸ்ரீபாதப்பாறை', என்றழைக்கப்பட்ட புனித தலத்தில், அவர் பெற்ற ஞானேதயம்தான். புத்தர் போதி மரத்தின் அடியில் அருளொளி பெற்றதுபோல சுவாமி விவேகானந்தர்ஸ்ரீபாதப்பாறையில் அருளொளி பெற்றார். அத்தகைய தெய்வீகப் பரிமாற்றம் நிகழக் காரணமாக இருந்த பாறை, பின்னர் அவருடைய பெயராலேயே அழைக்கப்படுவதாயிற்று: வங்கத்துச் சிங்கம் தங்கத் தமிழ் நாட்டுப் பாறையிலே ஞானம் பெற்ற நிகழ்ச்சி இந்திய தேசிய ஒருமைப்பாட்டை நினைவூட்டி நிற்கின்றது.

முக்கடலின் அலைகளும் புனிதப்படுத்தும் இப்பாறை ஏறக்குறைய மூன்று ஏக்கர் பரப்பளவும், கடல் மட்டத்திலிருந்து 55 அடி உயரமும் கொண்டது. பாறையின் மேல் ஒரு கோவில் அமைந்திருந்ததற்குரிய அடையாளங்களை இன்றும் காணலாம். பல நூற்றுண்டுகளுக்கு முன்னால் கரையிலிருந்த இப்பாறையையும், அதன் மேலுள்ள கோவிலையும் கடல் சூழ்ந்து சொண்டது என்பர். மேலும் கடல் கொள்ளாதிருக்கவே தேவி பகவதி குமரியம்மனைகத் தவக் கோலத்திலே நின்றருளுகின்றார் என்பது ஐதிகம். இதைத்தான் கவியரசர் பாரதியார், ''நீலத் திரைகடலோரத்திலே நின்று நித்தம் தவஞ் செய்யும் குமரி'' என்று

கூறிச்சென்றுர். இப்பாறையில் காணப் படும் தேவி பாதம் எல்லோராலும் வணங்கப் படுகிறது. இங்கேதான் தேவியின் திருவுருவம் இருந்தது என்பர். மேலும் சிலர், பாதவழிபாடு சமண சமயத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதால் இப்பாதத்தைச் சமணர்கள் வழிபட்டு வந்தனர் என்றும், கி.மு. மூன்ரும் நூற்ருண்டில் சமணத் துறவிகள் இலங்கை செல்லும் வழியில் இதைப் பிரதிஷ்டை செய்தனர் என்றும், அவர்களே இப்பாறைக்கு 'ஸ்ரீபாதப்பாறை' என்று பெயரிட்டனர் என்றும் கூறுவர். (Jain Journal, Vol. IV, No. 2, P. 91) சுவாமி விவேகானந்தரின் தரிசனத் தால் இப்பாறை மேலும் தூய்மை அடைந்தது எனலாம்.

சுவாமி விவேகானந்தாரின் அறிவுரைகளே எடுத்துக் கூறவும், அவர் ஞானேதயம் பெற்ற பாறையில் ஒரு சிறந்த நினைவுச் சின்னம் எழுப் பவும், 1962-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விவேகானந்தர் பாறை நினைவுக்குழு அமைக்கப் பட்டது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வெவ்வேறு துறைகளிலுள்ள பெரியோர்கள் பலர் இக்குழுவிலே அங்கத்தினர்களாகச் சேர்ந் தனர். 1964-ஆம் ஆண்டு இப்பாறையில் சுவாமியவர்களின் நினைவுச் சின்னம் எழுப்பச் சென்னை அரசாங்கம் இக்குழுவுக்கு அனுமதி யளித்தது. தேவக்கோட்டையைச் சேர்ந்த கலைவல்லுநர் ஸ்தபதி திரு. எஸ். கே. ஆசாரி யின் தலைமையில் நினைவுச் சின்னம் உருவாகத் தொடங்கிற்று. இக்கருங்கல் மண்டபத்தின் நீளம் 85 அடி; அகலம் 40 அடி. அதன் முகப்பு அஜந்தா குகையையும், விமானம் பேலூர் இராமகிருஷ்ணர் கோவிலையும் ஞாபகமூட்டு கின்றன. 65 அடி உயரமான விமானத்தின் அடியில் சுவாமி விவேகானந்தரின் 8 அடி உயரங் கொண்ட வெண்கலச் சிலை ஒன்று, நின்ற கோலத்திலே அழகிய சபா மண்டபத்தினுள் எழுப்பப்பட்டுள்ளது. சபா மண்டபத்தின் முன்னுல் உள்ள தேவி பாதத்திற்குத் தகுந்த பாதுகாப்பு அளித்துத் தனியாக ஒரு கோவிலும் கட்டப்பட்டுள்ளதைக் காணலாம். சபா மண்ட பத்தின் பின் தாழ்வாரத்தில் தியான மண்டபம் உள்ளது. பாறையைச் சுற்றிக் கடலின்மேல் அழகான பாதை ஒன்று அமைத்துள்ளனர்.



சுவாமி விவேகானந்தர் கோயிலும், காந்தியடிகள் நினைவு மண்டபமும்

விவேகானந்தரின் அறிவுரைகளும், அவரது வாழ்விலே நடந்த சில முக்கிய நிகழ்ச்சிகளும் மண்டபத்தின் உட்சுவர்களில் பொறிக்கப் பட்டுள்ளன. தேசியச் சின்னமான இம்மா பெரும் மண்டபத்திற்குப் பல மாநில அரசாங் கங்கள் தகுந்த முறையில் நன்கொடைகள் அளித்துள்ளமை பாராட்டத்தக்கது. அசாம் மேற்கு வங்காளம், அரியானா, பஞ்சாப், மைசூர் மகாராட்டிரம், மத்தியப் பிரதேசம் முதலிய அரசாங்கங்கள் ஒவ்வொரு லட்ச ரூபாயும். உத்தரப்பிரதேசம் ஒன்றரை லட்ச ரூபாயும் மத்திய அரசு பத்து லட்ச ரூபாயும் நன்கொடை யாகத் தந்துள்ளன. மூன்று லட்ச ரூபாய்ச் செலவில் படகுத்துறை கட்டித்தரும் பணியைத் தமிழ்நாடு அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

எழுபத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர், சிக்காகோ நகரில் சுவாமி விவேகானந்தர் இந்து சமயக் கருத்துக்களை முழக்கமிட்டு, இந்தியத் தாய்க்கு உலக அரங்கிலே ஒப்பற்றதொரு இடத்தில் அரியாசனம் அமைத்துத் தந்த நிகழ்ச்சியின் நினைவாக, 1970-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இரண்டாம் நாள் சுவாமி யவர்கள் நினைவு மண்டபத் திறப்புவிழா நடை பெற்றது. தமிழகஅரசு முதல்வர் மாண்புமிகு கலைஞர் திரு. மு.கருணாநிதி அவர்கள்தலைமையில் இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு திரு. வி. வி. கிரி அவர்கள் மண்டபத்தைத் திறந்து சுவாமியவர்களின் முன்னால் விளக் கேற்றி வைத்தார். பேலூர் இராமகிருஷ்ண மடத்தின்தலைவர் தவத்திருவீரேஸ்வரானந்தர் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்க நாட்டின் நாலா திசைகளிலிருந்தும் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். இரண்டு மாதங்கள்வரை தொடர்ச்சியாகத் திறப்பு விழாக் கொண்டா டப்பட்டது. செப்டம்பர் மாதம் 16-ஆம் நாள் இந்திய நாட்டின் முதலமைச்சர் திருமதி இந்திராகாந்தியவர்கள் வருகை தந்தார்கள். அக்டோபர் மாதம் 31-ஆம் நாள்குடியரசுத் துணைத்தலைவர் உயர் திரு ஜி. எஸ். பதக் அவர்கள் விழாவிலே கலந்து சிறப்புரை மலரை வெளியிட, இந்த இரண்டு மாதவிழா முடிவுற்றது.

சுவாமி விவேகானந்தரின் இந்த நினைவுச் சின்னம் அவர் உருவாக்கிய கண்ணால் காண முடியாத சக்திக்கும்,அசைக்க முடியாத நம்பிக் கைக்கும் அடையாளமாக, நம்மிடையே சிறந்து விளங்குகிறது. தமிழகத்துக் கலைஞர் களின் திறன் அன்றுபோல் இன்றும் சிறப்புடன் திகழ்கின்றது என்பதை, இம்மண்டபத்தைக் கண்ணுற்றவர்கள் உணரலாம்.

1957-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் நாள் காந்தியண்ணல் குமரித் துறையிலே நீராடி, ''முக்கடலும் கூடும் இடத்தை இங் கின்றி வேறெங்கும் காணமுடியாது. புனித நீரான குமரித்துறையைச் சூழ்ந்துள்ள கடல் நீரும் குமரியன்னையைப் போலவே கன்னிப் பெண்ணாக இருக்கிறது. காரணம்? இங்குக் கப்பல் வருவது கிடையாது'' என நகைச்சுவை ததும்பக் கூறிச்சென்றார்.

கடலோரத்திலே காந்தி அண்ணலின் நினைவு மண்டபம் உள்ளது. 1948-ஆம் ஆண்டு பிப்பரவரி மாதம் 12-ஆம் நாள் இந்திய நாட்டின் ஒளிவிளக்காகத் திகழ்ந்த காந்தி யண்ணலின் அஸ்தியை, இங்குக் கரைத்ததன் நினைவுச் சின்னமாக, வட இந்தியக் கட்டடக் கலையிலே இம்மண்டபத்தை எழுப்பியுள்ளனர். அஸ்தியை வைத்திருந்த பீடத்தில் காந்தி ஜயந்தியன்று (அக்டோபர், 2), பகல் பன்னி ரண்டு மணிக்கு மட்டும் சூரிய ஒளி படுவது ஒரு சிறப்பாகும். காந்தி மண்டபத்தை அடுத்துத் தவக்கோலத்திலே சுவாமி விவேகானந்தரும், அடுத்துஆதிசங்கரரும் தனித்தனியே கோயில் கொண்டுள்ளனர்.

இந்து சமயத்தாரின் புண்ணியத் தலமாக மட்டுமல்லாமல் இந்தியத் தாயின் தவப்புதல் வர்களது ஞாபகச் சின்னங்களைக் கொண்ட ஒரு திவ்விய தலமாகவும் திகழ்கின்ற கன்னியா குமரியில், அன்றுபோல் இன்றும் வடக்கும் தெற்கும் ஒன்றுகூடி நிற்கும் பாங்கை நாம் காணலாம்,

# தூய்மையும் துப்புரவும் துலங்க வைக்கப்பட்டிருப்பதற்காகச் சுழல் கோப்பைப் பரிசு.

## 1969-'70-ஆம் ஆண்டில் வழங்கப்பெறும் கோயில்களின் பெயர்ப்பட்டியல்

---

1. சிவசுப்பிரமணியசுவாமி கோயில்,
(குமர கோட்டம்)
என்.எஸ்.சி. போஸ்ரோடு, சென்னை.1
(துணை ஆணையர், சென்னை)

2. சட்டைநாதசுவாமி கோயில்,
சீர்காழி, தஞ்சை மாவட்டம்.
(துணை ஆணையர் தஞ்சை)

3. மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்,
மதுரை.
(துணை ஆணையர், மதுரை)

4. ஸ்ரீ உத்தமர்கோயில் தேவஸ்தானம்,
பிட்சாண்டார் கோயில்,
லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம்.
(துணை ஆணையர், கோவை.)

5. எல்லையம்மன் கோயில்,
சுந்தரமூர்த்தி விநாயகர்கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
(உதவி ஆணையர், சென்னை.)

6. திருக்கரைஈசுவரர் கோயில்,
மானம்பதி, செங்கல்பட்டு மாவட்டம்,
(உதவி ஆணையர், காஞ்சிபுரம்.)

7. சீதாராம ஆஞ்சநேயர் கோயில்,
குடியேற்றம், வட ஆற்காடுமாவட்டம்,
(உதவி ஆணையர், வேலூர்.)

8. முத்துக்குமார சுவாமிகோயில்,
பரங்கிப்பேட்டை, சிதம்பரம் வட்டம்,
தென்னாற்காடு மாவட்டம்.
(உதவி ஆணையர், கடலூர்)

9. சந்திரசூடேசுவரர் கோயில்,
ஓசூர் வட்டம், தர்மபுரி மாவட்டம்,
(உதவி ஆணையர், சேலம்)

10. சலகண்டீசுவரர்கோயில்,
எல்கில், ஊட்டி, நீலகிரி மாவட்டம்.
(உதவி ஆணையர், கோவை.)

11. ஆபத்சகாயேசுவர சுவாமிகோயில்,
ஆலங்குடி, பாவநாசம் வட்டம்,
(உதவி ஆணையர் கும்பகோணம்)

12. கோதண்டராமசுவாமிகோயில்,
தில்லைவிளாகம், திருத்துறைப்பூண்டிவட்டம்,
தஞ்சை மாவட்டம்,
(உதவி ஆணையர், நாகை.)

13. பஞ்சவர்ணேசுவர சுவாமிகோயில்,
உறையூர், திருச்சிமாவட்டம்.
(உதவி ஆணையர், மதுரை.)

14. சவுந்தரராஜப்பெருமாள் கோயில்,
தாடிக்கொம்பு, திண்டுக்கல்வட்டம்,
மதுரை மாவட்டம்,
(உதவி ஆணையர், மதுரை.)

15. திண்ணப்பச்செட்டியார்ஊருணி கைலாச விநாயகர் கோயில்,
தேவகோட்டை, திருவாடானைவட்டம்.
(உதவி ஆணையர் இராமநாதபுரம்)

16. பூமிநாதசுவாமிகோயில்,
வீரவநல்லூர், அம்பாசமுத்திரம் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்,
(உதவி ஆணையர், திருநெல்வேலி)

17. அழகியசோழநங்கையம்மன் கோயில்,
தெய்யூர், அகஸ்தீசுவரம் வட்டம்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(உதவி ஆணையர், சுசீந்திரம்)

# "ஸ்ரீசைலேச தயாபாத்ரம்"

மகாவித்வான் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்

ஐப்பசியில் திருமூலத்தன்று அவதரித்தருளிய இவ் ஆசாரிய சார்வபௌமருடைய அமுதிலும் ஆற்ற இனிய பெருமையை இன்று நாம் புதிதாகப் பேசப் போகின்றுமோ? எத்தனை தடவை பேசினும் ''அப்பொழுதைக்கு அப்பொழுது என் ஆரா அமுதமே'' என்னும்படியாக இருக்கும் இவர் பெருமை! எம்பெருமானுர் அவ் அவதாரத்திலே எஞ்ச விட்டுச் சென்றிருந்த காரியங்களை நிறைவேற்றுவதற்கு என்றே, இங்ஙனே ஒரு திருக்கோலம் மீண்டும் பூண்டபடி. பெரும்பாலும் வியாக்கியான கிரந்தங்களை அருள்வதிலேயே இரண்டு அவதாரத்திலும் முழு நோக்கு. அதியுக்தி அதிசயோக்தி என்னும்படியான வசனவியக்திகளைக் கனவிலும் அறியாமை, இரண்டு அவதாரத்திற்கும் அசாதாரணம். மயங்க வைத்தல் வலிந்துகூறல் முதலிய குற்றங்களுக்குச் சிறிதும் இடம் தாராமே, தெள்ளமுதெனும் திவ்விய சூக்திகளை அருளுந்திறன், இவ் இரண்டு அவதாரத்திலேயே கண்டதாகும்.

கீழே பிள்ளைலோகாசாரியரைப் பரம காருணிகர் என்று புகழ்ந்தோம். மணவாள மாமுனிகள் திரு அவதரியாவிடில், அவருடைய பரமகாருணிகத்துவமும் "கல்நவிலுங் காட்டகத்தோர் வல்லிக் கடிமலரின் நன்னறுவாசம் மற்று ஆரானும் எய்தாமே மன்னும் வறுநிலத்து வாளாங்கு உகுத்ததுபோல் ஆகும்'' அத்தனை. அவ்வாசிரியர் அருளிய அஷ்டாதச ரகசியங்களுள் தலை சிறந்து விளங்கும் முமுட்சுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசநபூஷணம் என்னும் மூன்று ரகசியங்களுக்கு, இவருடைய வியாக்கியானங்கள் இல்லையேல், இம்மாஞாலம் இருள் தரும் ஞாலமேயாம்.

இவர்க்கு 'விசதவாக் சிகாமணி' என்றொரு பிருதம் வழங்கி வருகின்றது. இதனை முதன் முதலாக அளித்த மகாநுபாவர் யாரோ அறிகின்றிலோம். மருமம் அறிந்து அளித்த அந்த விருது, இவ்வாசாரிய சிகாமணி ஒருவருக்கேதான் ஏற்கும். 'நீறு பூத்த நெருப்பு' என்ன நின்ற இவ்வாசிரியரின் திருவாக்குப்போல், இவ்வுலகில் இதுகாறும் கண்டதில்லையென்றால், இனிமேலா காணப்போகின்றோம். இவருடைய திவ்யமங்கள விக்கிரகமும், திருவுள்ளமும் சத்துவகுணமொன்றே வடிவெடுத்தனவாயிருந்தன என்பது, இவரது திருவாக்குகளில் எழுத்துத் தோறும் புலப்படா நின்றது. சகல சாத்திரார்த்தங்களையும் வெகு அழகாகத் திருவுள்ளத்திலே அடக்கிக் கொண்டு, நாட்பூ அலர்ந்தாற்போலே ஸ்ரீ சூக்திகளை ஏற்றக் குறைவின்றி, இவர் அமைத்திருகின்ற அழகு என்னே என்னே! என்று உள்ளம் குழைகின்றது அத்தனை! விமர்சசக்தி, நிருபணநைபுண்யம் என்றிங்ஙனே சொல்லும்படியான திறமையெல்லாம், மிக வியக்கும்படியான முறையில், இவர் தம்முடைய வியாக்கியான ஸ்ரீ சூக்திகளிலேதான் உள்ளது,

பல சொல்லி என்? சாரமாக ஒன்று சொல்லித் தலைக்கட்டுவோம். ''அப்திர் லங்கித ஏவ வாநரபடை ,...'' என்று, முராரி என்கிற

ஒரு மகாகவி சொல்லுகிறார். ''வானர வீரர்கள் கடலைக் கடந்து அப்பால் சென்று விட்டார்கள் எனின், கடலின் ஆழத்தை அவர்கள் சிறிதும் அறியகில்லார்கள். கடலினுள்ளே பாதாளம் வரையில் அமிழ்ந்து கிடந்த மந்தர மலைக் கன்றோ அந்த ஆழம் தெரியும்''—என்பது இந்த சுலோகத்தின் கருத்து. பேரறிஞர்கள் என்று பேர்படைத்த மற்றவர்கள் எல்லோரும் வானர முதலிகளின் ஸ்தானத்திலேயாய், மணவாள மாமுனிகள் ஒருவரே மந்தர மலையின் ஸ்தானத்திலே என்னக் கூடியவராகவுள்ளார். ஆச்சாரியர் என்கிற சொல்லுக்கு மாமுனிகள் ஒருவரே இலக்காமவர் என்றும்; சூக்தி, ஸ்ரீசூக்தி, திவ்ய சூக்தி, திவ்ய ஸ்ரீசூக்தி என்று இங்ஙனே சொல்லும் சொற்களெல்லாம், மாமுனிகள் திருவாக்கையேதான் இலக்காகக் கொள்ளத்தக்கவை என்றும், நடுநிலையாளர்கள் சித்தாந்தம்!

''செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடவும், சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடவும், மந்த மதிப்புவி மானிடர் தங்களை வானில் உயர்த்திடவும், மாசறு ஞானியர் சேர் எதிராசர்தம் வாழ்வு முளைத்திடவும், சந்த மலர்ப்பொழில் சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடவும், இந்த நிலந்தனில் வந்து உதயஞ்செய்த பரமாசாரியர் அன்றோ இவர்! நமது ஆழ்வார்களும் ஆசாரியர்களுமெல்லாரும் ஒருங்கே திரண்டு அவதரித்த அவதாரமான இம்மாமுனிகளின் தனியனையும், வாழித் திருநாமங்களையும், இப்பரத கண்டம் முழுவதும் அநுசந்தித்து உய்தி பெறுகின்றது.

திருவாய்மொழிக்குச் சிறந்த வியாக்கியானமாக அமைந்த ஈடு முப்பத்தாறுயிரப்படியின் விசேஷார்த்தங்களை, இவ்வாசிரியருடைய திருவாக்கினால் கேட்கப் பெறவேணுமென்று, ஆவல் கொண்ட அரங்கநாதன் தனது சந்நிதியின் திருமுன்பே கருட மண்டபத்தில் எழுந்தருளியிருந்து சாதித்தருள வேணுமென்று இவர்க்குக் கட்டளையிட்டனன். அப்படியே ஓர் ஆண்டு முழுவதும் பகவத் விஷயப் பிரவசனம் நடந்துவர, நிறைவு தினத்தில் ஸ்ரீரங்கநாதன் ஒரு சிறு குமாரனாய்த் திருவோலக்கத்திலே வந்து நின்று,

''ஸ்ரீ சைலேச தயாபாத்ரம்
தீபக்தியாதி குணார்ணவம்,
யதீந்த்ரப்ரவணம் வந்தே
ரம்யஜாமாதரம் முநிம்''

என்கிற திவ்விய பத்யத்தைக் கைகூப்பி நின்று விஞ்ஞாபித்தனனாக இதிகாசம் பிரசித்தம். இந்தத் தனியனில் அமைந்திருக்கின்ற சொற்களின் அழகை ஆராய்ந்தால், இது தெய்வ வாக்கேயன்றி மானிட வாக்கு அன்று என்பது, அனைவரும் இசையற்பாலதாகும். அவ்வழகினை இங்குச் சிறிது விவரிப்போம்.

## 1. ஸ்ரீசைலேச தயாபாத்ரம்

''மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதம் ஆட்டிய அடுதிறல் அயோத்தி எம்மரசே! அரங்கத்தம்மா!'' என்கிறபடியே, ஸ்ரீரங்கநாதனே விபவரூபேண ஸ்ரீராமபிரானாகத் தோன்றி இருந்தனன். ஆதலால், அத்திருவவதாரத்தில் சைலேச தயாபாத்ரத்தை வணங்கி இருந்தானாயினும், ஸ்ரீசைலேச தயாபாத்ரத்தை வணங்கப் பெறவில்லை. சைலேச தயாபாத்ரமென்று சுக்கிரீவனைச் சொல்லி, ஸ்ரீபதத்தினால் தத்வியாவிருத்தி பண்ணுகிறது: ஸ்ரீ ராமாயணம், கிஷ்கிந்தா காண்டத்தில் பதினோராவது சர்க்கத்தினால் சுக்ரீவ மகாராஜர் சைலேச தயா பாத்ரபூதர் என்று அறிக. அது எங்ஙனேயென்னில்; இங்கே சைலமாவது ரிச்யமூகபர்வதம். அதற்கு ஈசர்-மதங்கமுனிவர். அவருடைய தயைக்குச் சுக்ரீவன் பாத்ரமாக இருந்தனன். துந்துபியோடு போர் புரிந்த வாலியானவன், அவனது உடலைத் தூக்கி வீசியெறிந்தவளவில், அவனது வாயிலிருந்த ரத்த பிந்துக்கள் காற்றினால் தள்ளுண்டு, மதங்கமாமுனியின் ஆசிரமத்தில் போய் விழ, அது கண்டு கோபித்த அம்முனிவர், இத் தீய செயல் செய்தவன் வாலியென்று ஞானக்கண்ணாலுணர்ந்து, அவ்வாலிக்குச் சாபமிட்டதும், அதுவே காரணமாகச் சுக்ரீவன் இம் முனிவருடைய அருளுக்கு இலக்கானதும் கொண்டு, சைலேச தயாபாத்ரத்வம் சுக்ரீவனுக்குப் பொருந்தியது. எம்பெருமான் அவனை அடிபணிந்திருந்தானென்பது ''சுக்ரீவம் சரணம் கத:'' என்கிறபிரமாணத்தினால் சித்தம். சரணம் புகுந்த இடத்தில் மனஸ்தாபமின்றி

இருக்க வேணுமே. சுக்ரீவன் விஷயபோகங்களிலே ஒருப்பட்டிருந்து குறிப்பிட்ட காலத்திலே வந்திலனாக, இளையபெருமாளை அனுப்பித் தீவிர தண்டம் நடத்த நினைத்தமையை வெளியிட்டபடியாலே, அந்த சைலேச தயாபாத்ர பூதரை வணங்கி வாழ்கின்றேன் என்றதாயிற்று. திருமலை ஆழ்வார் என்கிற திருவாய்மொழிப்பிள்ளையின் இன்னருளுக்கு இலக்கானவர் மாமுனிகள் என்கை.

## (2) தீபக்த்யாதி குணார்ணவம் :

ஸ்ரீராமனாக அவதரித்திருந்த அ காலத்திலே, சுக்ரீவன் காலிலே குனிந்தது போலவே, லவணார்ணவத்தின் காலிலும் குனிந்தமை யுத்தகாண்டப்பிரசித்தம். "சமுத்திரம்ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி" என்று விபீஷணாழ்வானுடைய வாக்கின்படி, லவணார்ணவத்தை அடிபணிந்திருந்து அங்கும்மனஸ்தாபம் மிகுந்தது சுப்ரசித்தம் "சாகரம் சோஷயிஷ்யாமி" என்று நிக்ரகத்திலேயன்றோ ஒருப்பட்டது! அப்படியான குறைதீர அந்த லவணார்ணவத்தை விட்டுத் தீபக்த்யாதி குணார்ணவத்தை அடிபணிகின்றேன் என்றதாயிற்று. ஞானபக்தி விரக்திகளுக்குக் கடல் மாமுனிகள் என்கை.

## (3) யதீந்த்ரப்ரவணம் :

யதீந்த்ரர் என்று எம்பெருமானார்க்குத் திருநாமம் "அப்பனுக்குச் சங்காழியளித்தருளும் பெருமாள்" என்று போற்றப்படுகின்ற எம்பெருமானாரானவர், எம்பார் ஆண்டான் முதலானார்க்குத் திருவிலச்சினையளித்தது போலவே, திருவேங்கடமுடையானுக்கும் திருவிலச்சினை அளித்ததாக இதிகாசமாகையினாலே "மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்ற அரங்கத்து அரவின் அணையான்" யதீந்திரரிடத்திலும் சிஷ்யவிருத்தி கொண்டிருந்தமை தேறிற்று. இராமானுச நூற்றந்தாதியிலே "தன்னை உற்றுட் செய்யுந் தன்மையினோர்" என்கிற பாசுரத்தைத் திருச்செவி சாத்தின பிறகு "யதீந்திரரிடத்திலே சிஷ்ய விருத்தி செய்வதிற்காட்டிலும் யதீந்திரப்ரவணரானார் பக்கலிலே சிஷ்ய விருத்தி செய்வதே சிறந்தது" என்று தோன்றினபடியாலே இப்போது யதீந்த்ரப்ரவணரை அடிபணிகின்றமை மிகவும் பொருந்தும்.

## (4) ரம்யஜாமாதரம் முநிம் :

இராமாவதாரத்தில் விசுவாமித்திரமுனிவர் பக்கலிலும், கிருஷ்ண அவதாரத்தில் சாந்தீபநிமுனிவர் பக்கலிலும் சிஷ்யவிருத்தி செய்திருந்து அவர்களிடத்திலே சம்சாரித்வ பூர்த்தியையே கண்டு திருவுள்ளம்நொந்திருந்தபடியாலே, அக்குறை தீர விரக்தாக்ரேசரான மணவாள மாமுனிகளை அடி பணிந்தேன் என்கை.

விசுவாமித்திர முனிவனுடைய சம்சாரித்வம் அவனது கதைகளினால் விசதம். சாந்தீபநி முனிவனது சம்சாரித்துவம் என்றைக்கோ மறிகடல்வாய் மாண்டொழிந்த மகனை மீட்டுத் தர வேணுமென்று விரும்பியதனால் விளங்கும்.

ஆக இப்படிப்பட்ட அர்த்த விசேஷங்களுக்கு ஸ்புடப்ரதீதி உண்டாகும்படி சப்த சந்நிவேசங்களை அமைத்துத் தனியனிட்டு, உலகங்களை உஜ்ஜீவிப்பித்தருளின அழகிய மணவாளனுக்கு ஆசிரியரான, அழகிய மணவாளமாமுனிகளை அனுதினமும் சிந்தை செய்து அகமகிழ்வோமாக.

# ஆலமர்வித்தின் அருங்குறள்

'திருமால் நெறிச்செல்வர்'

மகாவித்துவான் திரு. கு. மதுரை அவர்கள்

இராமபிரான், இலக்குமனுடன் விசுவாமித்திர முனிவரின் அருந் தவ வேள்வியைக் காக்கப் பாலைவனங்கடந்து வந்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர் முனிவரை நோக்கி, 'ஐயா, இதோ காணப்படும் பொழில் யாது' என்ருர். அதனைக் கேட்ட முனிவர், 'தங்கள் கணவரைக் காட்டிலும் கடவுள் வேறில்லை என்று எண்ணி ஒழுகும் கற்புடைய மங்கைமார் சிந்தை போலத் தூயது இச்சோலை, மற்றுங் கேளாய், எங்கள் நான்மறைக்கும் தேவர் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச் செங்கண்மால் இருந்து முன்னர் செய்தவம் செய்தது' என்று அச்சோலையின் சிறப்பையும் திருமாலின் உயர்வையும் எடுத்துக் கூறினர்.

விசுவாமித்திர முனிவர், பின்னும் இராமபிரானைப் பார்த்து, மாவலியின் சரிதையைச் சுருக்கி அவருக்கு உரைக்கத்தொடங்குகின்ருர். 'இராமா, இச்சோலைக்குச் சித்தாச்சிரமம் என்பது பெயர். இச்சோலையில் திருமால் முன்னெருகால் இருந்து பல்லூழிக்காலம் இருந்தவம் இயற்றினர். அக்காலத்தில் பெருந்திறல் வாய்ந்த மாவலி என்பவன், வானகத்தையும் வையகத்தையும் அவற்றிற்குரிய அரசர்களிடமிருந்து தனது ஆற்றலால் பறித்துக் கொண்டான். அக்கொடியவன் தான் பறித்துக் கொண்ட மூவுலகங்களையும், தன் அமைச்சரிடம் ஒப்புவித்து ஒரு வேள்வியைத் தொடங்கினன்; அவ்வேள்விக்கு வரும் அந்தணர்கள் வேண்டுவனவற்றை இல்லை என்று சொல்லாமல் வழங்கத் துணிந்தான். இதனை உணர்ந்த வானவர் சித்தாச்சிரமத்துக்கு வந்து திருமாலை வணங்கி, மாவலியின் கொடுஞ் செயல்களை எல்லாம் எடுத்துக் கூறித் தங்களைக் காத்தருளும்படி வேண்டினர். தம் திருவடியில் வீழ்ந்து வணங்கும் அடியார்களின் துன்பங்களையெல்லாம் போக்கி இன்பத்தை அளித்தருளும் இறைவன், தேவர்களின் வேண்டுகோளின்படி செய்ய இசைந்தான்.

பிறகு, காலம் நுனித்துணர் காசிபன் என்னும் பேரறிவாளனும், அவன் மனைவி அதிதியும், பல்லாண்டு செய்த தவத்தின் பயனுக நீல நிறத்து நெடுந்தகையாகிய திருமால், வாமனன், என்னும் ஒரு சிறு மகவாக அவர்களிடம் வந்து அவதரித்தார் :

''காலம் நுனித்துணர் காசிபன் என்னும்
வாலறி வற்கு அதிதிக்கொரு மகவாய்
நீலநிறத்து நெடுந்தகை வந்து ஓர்
ஆலமர் வித்தின் அருங்குறள் ஆனர்''.

கவிச் சக்கரவர்த்தியாய் விளங்கும் கம்பநாட்டாழ்வார், சிலவகை யெழுத்தில் பல வகைப் பொருளைச் செறிந்து இனிது விளக்கித்

திட்ப நுட்பத்துடன் யாத்துள்ள இப்பாடலைப் பாடிப் பாடிப் பரவசமாகலாம். பெரிய ஆல மரத்தைத் தன்னுள் அடக்கி விளங்கும் சிறிய வித்து, பெரிதிற்கெல்லாம் பெரிதாய் விளங்கும் பரம் பொருள் மேற்கொண்ட சிறிய வாமன வடிவத்துக்கு உவமையாக வந்துள்ளமை மனத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது.

தேவர்களாகிய அடியவர்களுக்கு அளித்த வாக்கை நிறைவேற்ற, வியத்தற்குரிய குணங்களையும் செயல்களையுமுடைய திருமால், முப்புரியாகிய பூணூலையும், முஞ்சிப் புல்லாகிய அரை நாணையும், வேதமந்திரத்தைக் கற்கும் ஒப்பில்லாத நாவினையும், அனல் பொருந்திய கையையும் உடையவனாக, ஞானிகளே அறியத் தக்க தனது ஞான சொரூபத்தை ஒத்து, எவர்க்கும் எளிதில் அறிதற்கரியதாயுள்ள ஒப்பற்ற சிறிய திருவுருவைக் கொண்டு மாவலியிடம் சென்றான்.

'முப்புரி நூலினன் முஞ்சியன் விஞ்சை
கற்பதோர் நாவன் அனற்படு கையன்
அற்புதன் அற்புத ரேஅறி யுந்தன்
சிற்பதம் ஒப்பதோர் மெய்க்கொடு
சென்றான்'.

அன்று, அவ்வாமன மூர்த்தி தன்னிடம் எழுந்தருளியுள்ளதை, எல்லாவுலகங்களையும் வென்று விளங்கிய மகாபலிச்சக்கரவர்த்தி அறிந்து, அம் மிகச்சிறிய வடிவத்தைப் பார்த்து மிக வியந்து, எதிர் கொண்டு அம்மறையவனை அழைத்து வந்து, அவ்வடிவத்தை நன்கு நோக்கி, "எல்லாக் குணங்களாலும் நிறைந்தவனே, நின்னிற் சிறந்த அந்தணர் இல்லை, உன்னை இங்கு வரப்பெற்ற என்னின் உயர்ந்தவர் யார் உளர்?" என்றான்.

ஆண்தகையாகிய மாவலி, வாமன மூர்த்தியின் பேரழகில் ஈடுபட்டுத் தன்னை மறந்து பேசின பேச்சைக் கேட்டு மிக மகிழ்ந்த வாமனன், சக்கரவர்த்தியை நோக்கி, "உன்னை விரும்பி உன்னிடம் வந்த இரவலரின் விருப்பத்தின் மேற்படப் பொருள்களை எடுத்தெடுத்து வழங்கும் நீண்ட கையாய், இப்பொழுது இத்தகைய வள்ளன்மையுடைய உன்னிடம் ஒன்றை வேண்டி வந்தவரே, மாண்புடையோராவர். அவ்வண்ணம் வராதவரே சிறப்பற்ற வராவர், என்று மாவலி மனம் மகிழும் வண்ணம் கூறினான், அப்புகழுரையைக் கேட்ட மாவலி சிந்தையுவந்து, பேரொளி வீசும் வாமனனின் முகத்தழகைப் பருக நோக்கி, "ஐய, நான் என்ன செய்ய வேண்டும்? என்றான். அப்பொழுது அந்தணன், என்பக்கல் உமக்கு அருள் உண்டேல், என் காலால் மூன்றடி அளவு நிலம் எனக்குத் தரல் வேண்டும்" என்று சொல்லி முடிப்பதற்கு முன்னே, 'தந்தனன்' என்றனன் மாவலி. அப்பொழுது அருகிலிருந்த சுக்கிரன் தடுத்தான்.

"கண்ட திறத்திது கைதவம் ஐய
கொண்டல் நிறக்குறள் என்பது கொள்
ளேல்
அண்டமும் முற்றும் அகண்டமும் மேனாள்
உண்டவ னாம்இது உணர்ந்துகொள்
என்றான்".

சுக்கிராசாரி, தன் தவப்பயனாக ஞானக் கண் பெற்றுள்ளவனாகையால், வாமனனின் மாயச் செயலை அறிந்து, "திருமாலே உன்னை வஞ்சிக்க இச்சிறு வடிவத்தைக் கொண்டு உன்னிடம் வந்துள்ளான். இவனுக்கு நீ தானம் செய்தால் உடனே எனக்குத் தீங்கு வரும்' என்று தடுத்தான்.

குருவாகிய சுக்கிரன், மாவலியின் அறச் செயலாகிய ஈகையை மறுத்தலாகிய மறச் செயல் புரிய, அவ்வள்ளல் தன் குருவை நோக்கி, "நீ வெள்ளி, ஆதலால் இவ்வாறு விளம்பினை. மேலோர் வரையாது வழங்குவரே யன்றி, கொடுக்கப்படாதவை என்று விலக்கப்பட்ட பொருள்கள் அவர்களுக்கு எவையும் இல்லை. தன் இன்னுயிரேனும் இரப்பவர்க்குக் கொடுப்பது நன்று; கொள்ளுதல் தீது" என்றான். தெய்வப்புலவர் திருவள்ளுவரும், 'நல்லாறு எனினும் கொளல்தீது, மேலுலகம்

இல்லெனினும் ஈதலே நன்று'' என்று கூறி யுள்ளதை ஈண்டுச் சிந்தித்தல் தகும்.

மாவலி தன் குருவாகிய சுக்கிரனுக்கு ஈதலின் சிறப்பையும், இரத்தலின் இழிவையும் பலபல வகையில் எடுத்துக் கூறிக் கடைசியாக மிக வெகுண்டு, குருவை நோக்கி, ''நற்குண மில்லாத சுக்கிரனே,கொடுப்பதை விலக்குகின்ற கொடியோய்; கொடையாளிகளுள் ஒருவர், யாசகர்களில் ஒருவருக்கு அவர் விரும்பிய தொரு பொருளைக் கையில் எடுத்துக் கொடுப் பதற்கு முன்பே, கொடாதே என்று தடை செய்வது உனக்கு அழகுடையதாகுமோ? அன்றியும் நீ இக்கொடுந் தொழிலின் பயனால், உனது சுற்றம் உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாதபடி ஆகிவிடுகின்றாய்'' என்றான்.

''எடுத்தொரு வருக்கொருவர் ஈவதனின் முன்னம்
தடுப்பது நினக்கழகி தோ? தகவில் வெள்ளி!
கொடுப்பது விலக்குகொடியோய் ! உனது சுற்றம்
உடுப்பதும் உண்பதும் இன்றிவிடுகின்றாய்''

இப்பாட்டில், 'தடுப்பது நினக்கழகிதோ'' என்ற சொற்றொடரின் உள்ள எதிர்மறை ஓகாரத்தால், அச்செயல் அழகிலாத செயல் என்பதை அறிகின்றோம், அழகிலாத செயல் பாவச் செயலாகும். புகழேந்திப் புலவரும் பஞ்சமா பாவங்களை, ''காதல், கவருடல், கள்ளுண்டல் பொய்மொழிதல்,ஈதல்மறுத்தல்'' எனக் கூறியுள்ளார், ஆகையால், 'ஈதலைமறுத் தல்' என்பது மிகப் பெரிய பாவம் என்பதை அறியலாம். திருவள்ளுவரும், ''கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம், உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்'' என்றார்.

மாவலி, இத்தகைய கடுமையான வார்த்தைகளைக் கூறி, மந்திரியும் குருவுமாயுள்ள சுக்கிரன் துர்க்குணமுள்ளவன் என்று கொண்டு, அவன் சொன்ன மொழிகளைச் சிறிதும் பொருட் படுத்தாமல், வாமனனை நோக்கி, 'நீ கேட்ட மூன்றடி நிலத்தையும் நீயே அளந்து கொள்க' என்று சொல்ல, திரிவிக்கிரமனாக நீளப் போகின்ற வாமனன், மாவலி தாரை வார்த்த நீரைத் தன் சிறிய கையை நீட்டிப் பெற்றான். மாவலி தாரை வார்த்துக் கொடுத்த நீரானது வாமனன் கையில் பட்டதும், பெற்றவர்களும் இகழ்தற்குரிய அவ்வளவு சிறிய வடிவமுள்ள வாமனமூர்த்தி, எதிர்நின்று பார்த்து வியந்த வரெல்லாம் அச்சம் கொள்ளும்படி, நற்குண நற்செயல்களால் உயர்ந்தவர்க்குச் செய்த தானத்தின் பயன்போல விண்ணில் பேருருவம் கொண்டு ஓங்கினான்.

''கயந்தரு நறும்புனல் கையில் தீண்டலும்
பயந்தவர்களும்இகழ்குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பில் ஓங்கினான்
உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே'.

மிகச் சிறிய வாமன வடிவம், கண் கொள்ளாப் பேருருவம் ஆனது பற்றி முதலில் வியப்பும், பின்னர் அச்சமும் கொண்டனர் அதனைக் கண்டோர். உயர்ந்தவர்க்கு உதவிய உதவி மிக வோங்குதலை, 'அறப்பயனும் தான் சிறிதாயினும் தக்கார் கைப்பட்டக்கால் வான் சிறிதாப் போர்த்துவிடும்' என்னும் நாலடி யாரால் நன்கறிகிறோம்.

நிலவுலகத்தில் ஊன்றிய வாமனமூர்த்தியின் ஒரு திருவடி மண்ணெலாம் நிரப்பி, இந்நில வுலகம் சிறியது என்ற காரணத்தால் அப்புறம் சென்று பரவவில்லை. மற்றொரு திருவடி வானகம் எல்லாம் தன்னுள் அடங்கச் செய்து. அம் மேலுலகைக் கடந்து, வேறிடம் பெறாமை யால் மீண்டது. ஒரு திருவடியால் மண்ணுலகை யும் மற்றொரு திருவடியால் விண்ணுலகையும் அளந்த பின்னர், வாமன மூர்த்தி சுக்கிரனை நோக்கி, ''நான் விரும்பிய வண்ணம், மூன்றடி மண் தந்தேன்'' என்றாய், மற்றோர் அடிக்கு இடம் காட்டுக என்று வினவ, அதற்கு அடியேனது முடியே உள்ளது எனறு மாவலி சொல்ல, வாமனன் அவனது முடிமேல் தனது அடியினை வைத்து அழுத்தி, அவனைப் பாதாளத்தில் செலுத்தினான். பின்னர் வாமன மூர்த்தி, மகாபலிச் சக்கரவர்த்தியைக் கருணை கூர்ந்து நோக்கி, ''இருசுடர் எறிக்கும் விண்ணும் ஏக்கறத் திருவிற்றாகி, உரைபெறு சுதல லோகம் ஒரு குடை நிழற்றி ஆள்வாய்'' என்று கட்டளையிட்டு, விரிதிரைப் பாற்கடல் பள்ளி மேவினான்.

# மகாபாரதம்

அருள்மொழியரசு

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

(முற்றொடர்ச்சி)

148686

சென்னை-600 008

## உலூபி :

''அன்புள்ளவளே! நான் ஓராண்டு பிரம்ம சர்ய விரதம் பூண்டிருக்கிறேன். நான் இதற்கு முன் பொய் சொன்னதேயில்லை. என் சத்திய விரதம் தவறக்கூடாது. ஆதலால் உன்னை நான் எப்படித் தொடுவேன்?'' என்றான் அர்ச்சுனன்.

''வேந்தரே! நீர் இந்திரப் பிரஸ்தத்தை விட்டு விரதத்துடன் புறப்பட்டது எனக்குத் தெரியும். நீர் என்னை மறுத்தால் நான் மாண்டு போவேன். ஒரு பெண்ணுக்கு உயிரைத் தருவதனால் உம் விரதங்கெடாது. சத்தியம் அகிம்சையோடு கூடியிருக்க வேண்டும். எனக்கு ஆத்ம தானம் செய்யும். தானஞ் செய்யாத மனிதன் உண்மையில் இறந்தவனாவான். ஆகவே என் உயிர் உம்மிடம் இருக்கின்றது'' என்று இரந்தாள். அர்ச்சுனன் பெண் கொலைக்கு அஞ்சி, அன்றிரவு முழுவதும் அவளுடன் இருந்தான். பேராற்றல் நிறைந்த இராவான் என்ற அழகிய புதல்வன் பிறந்தான். மறுநாள் காலை உலூபியின் உதவியால் கங்கோத்பத்தியை யடைந்தான். கற்புள்ள உலூபி ''என் உயிர்ப்பதியே! இனி உமக்கு நீரில் உள்ள முதலை முதலான பிராணிகளால் துன்பம் விளையாது'' என்ற வரத்தை வழங்கித் தன் இல்லம் போனாள். அர்ச்சுனன் நடந்தவற்றை அந்தணரிடம் கூறி இமயமலைச் சாரலில் உள்ள பல நதிகளில் நீராடினான். அங்கு ஆயிரம் ஆயிரம் தான தருமங்களைச் செய்தான். நந்தா அலகநந்தா முதலிய நதிகளில் நீராடினான். கலிங்க நாடு சென்று கடற்கரையை அடைந்தான். கோதாவரியிலும் ஆடினான்.

தென்னாட்டை அடைந்து இடையில் உள்ள பல தலங்களையும் தெரிசித்தான். மணலூரபுரத்தையடைந்தான்.

பாரத காலத்தில் இப்போதுள்ள மதுரை கடம்பவனமாக இருந்தது. மதுரைக்கு அருகில் சிலைமானுக்கு அருகில் உள்ள மணலூர் என்ற ஊர் அப்போது ராஜதானியாக இருந்தது. வையையாற்றில் நீராடிச் சொக்கலிங்கப் பெருமானையும் அங்கயற்கண்ணம்மையையும் தெரிசித்தான்.

## சித்திராங்கதை :

மணலூரபுரத்தையாளும் சித்திரவாகன் என்ற பாண்டியன் அர்ச்சுனனை, வரவேற்று உபசரித்தான். சித்திரவாகனுடைய புதல்வி சித்திராங்கியைக் கண்டு காதல் கொண்டான். மன்னவன்பால் தன் விருப்பத்தையுங் குறிப்பாகக் கூறினான்.

சித்திரவாகன், அர்ச்சுனனுடைய குலம், கோத்திரம் முதலிய யாவும் விசாரித்தான்,

JL
Q2m 21, N59TK N71.13.4

'அர்ச்சுனா! எங்கள் மூதாதை பிரபஞ்சன் என்னும் மன்னன் மகப்பேறு இன்றிச் சிவபெருமானை வேண்டித் தவஞ் செய்தான். அவன் தவத்திற்கு இரங்கிச் சிவபெருமான் தோன்றி, ''இக்குலத்தில் ஒவ்வொரு மகவே பிறக்குமாக'' என்ற வரத்தை வழங்கியருளினர். அதுபடியே ஒவ்வொரு புதல்வரே பிறந்தனர். எனக்கு மட்டும் இப்பெண் பிறந்தாள். இவள் புத்திரிகை. இவளை உனக்குத் தருவேன். இவள்பால் உனக்குப் பிறக்கும் புதல்வனை எனக்குக் கன்யாசுல்கமாகத் தருவாயாக. இந்த உடன்பாட்டின்படி இவளை நீ மணஞ் செய்துகொள்'' என்றான். அர்ச்சுனன் அதற்கு இசைந்தான்.

பதின்மூன்றாவது மாதத்தில் அவளைத் திருமணஞ் செய்து கொண்டான். அங்கே மூன்று மாதங்கள் தங்கியிருந்தான். தென் கடற்கரையில் உள்ள நதிகளிலும் ஆடினான். அங்கு ஐந்து தீர்த்தங்களில் முதலைகள் இருந்ததால் அவைகளை யாரும் அணுகுவதில்லை. அகஸ்திய தீர்த்தம், சௌபத்திரதீர்த்தம், பௌலோமதீர்த்தம், காரந்தம தீர்த்தம், பரத்வாஜ தீர்த்தம் என்ற அந்த ஐந்து தீர்த்தங்களில் குளிக்கச் சென்றான். அங்குள்ள முனிவர்கள், ''முதலைகள் இருக்கின்றன. இவற்றில் இறங்காதே'' என்று தடுத்தார்கள்.

அர்ச்சுனன் சுபத்ரன் என்ற முனிவரின் பேரால் சௌபத்திரம் என்று விளங்கும் உத்தம தீர்த்தத்தில் இறங்கினான். ஒரு பெரிய முதலை வந்து காலைக் கவ்வியது. அர்ச்சுனன் தனது ஆற்றலாலும், உலூபி தந்த வரத்தாலும் துள்ளுகின்ற முதலையைத் தூக்கிக் கொண்டு கரையில் வந்து குதித்தான். உடனே முதலை அழகிய பெண்ணாக ஆயிற்று. ''நீயார்,'' என்று கேட்டான்,

''அர்ச்சுனரே! நான் வர்க்கை என்ற அரம்பை. குபேரனுக்குப் பிரியமானவள். எனக்கு 'சௌரபேயி, ஸமீசி, புத்புதை, லதை என்ற நான்கு தோழிகள் உண்டு. என் தோழிமார்களுடன் வனத்தில் உல்லாசமாக உலாவிக் கொண்டிருந்தேன். அங்கு ஒரு முனிவரைக் கண்டோம். அவர் ஆதித்தனைப்போல் ஒளி செய்து கொண்டிருந்தார். அவரை நாங்கள் அணுகிப் பாடியும் சிரித்தும் மயக்க முயன்றோம். அவர் சீற்றமடைந்து ''நூறு ஆண்டுகள் முதலைகளாக வாழக்கடவது'' என்று எங்களைச் சபித்தார். நாங்கள் அவரைப் பலமுறை பணிந்து மன்னிக்குமாறு வேண்டினோம். அவர் ''பெண்களே! நான் சொன்னது ஒரு போதும் தவறாது. நூறு என்பது சொற்ப காலந்தானே. ஒரு புண்ணியவானால் சாபந் தீரும்'' என்று அருள் புரிந்தார்.

பின்னர், நமக்குச் சாபந்தீர அருளும் புண்ணியவான் யாவன்? என்று சித்தித்துத் துயரத்துடன் நாங்கள் நின்றோம், அங்கு நாரதர் வந்தார். அவரை வணங்கி எங்கள் சிந்தாகுலந் தீர வழியைக் கேட்டோம். அவர் "தென் கடற்கரையில் உள்ள ஐந்து தீர்த்தங்களை அடைந்து முதலைகளாக இருங்கள். அங்கே பரிசுத்தமான தனஞ்சயன் வருவான். அப்புனிதனால் சாபந் தீரும்'' என்றார். அதுபடியே நாங்கள் இதில் கிடந்து துன்புற்றோம். மற்ற நான்கு தீர்த்தங்களிலும் உள்ள நால்வருடைய சாபத்தைத் தீர்த்தருளும்'' என்று அவள் கூறினாள். அதுபடியே அர்ச்சுனன் அந்த நான்கு தீர்த்தங்களிலும் இறங்கி நான்கு முதலைகளையும் தூக்கிச் சாபத்தைப் போக்கினான். ஐவரும் சாபவிமோசனம் அடைந்தார்கள். அதனால் அத்தீர்த்தங்கள் நாரீ தீர்த்தம் என்று பேர் பெற்றன

பப்ரவாகனன் :

அர்ச்சுனன் மீண்டும் மணலூரை யடைந்தான். சித்திராங்கதைக்குப் பப்ருவாகனன் என்ற ஒரு புதல்வன் பிறந்தான். அர்ச்சுனன் அவனைத் தனது மாமனாருக்குத் தானமாகத் தந்தான்.

சித்திராங்கியைப் பார்த்து, ''அன்புள்ளவளே! குழந்தையை இனிது வளர்ப்பாய், நான் இந்திரப் பிரஸ்தம் சென்றபின் அங்கு இராஜசூயம் என்ற வேள்வியைத் தருமர் புரிவார். அப்போது உன் தந்தை நவமணிகளுடன் அங்கு

வருவார். அவருடன் நீயும் வந்து என்னுடன் சேர்ந்திருப்பாய், வருந்தற்க!'' என்று அன் புரை புகன்று புறப்பட்டான். மேற்றிசையில் உள்ள கேரளதேயத்தைக் கடந்து பார்த்த மாத் திரத்தில் முத்தியைத் தரவல்லதும், பாவத் தைத் தீர்ப்பதுமாகிய கோகர்ணத்தை யடைந் தான். மகாபலேசுவரரைத் தரிசித்து விட்டு மேற்குக் கடற்கரையோரமாகவே பிரபாச தீர்த் தத்தை அடைந்தான்.

கதன் என்னும் யாதவனுல் சுபத்திரையின் பேரழகைக் கேட்டிருந்த அர்ச்சுனன், ''அவளை அடையும் வழி யாது? என்று சிந்தித்தான். பல ராமனின் கருத்து, சுபத்திரையின் திருமணத்தில் மாறுபட்டிருப்பதினுல், மாறு வேடத்துடன் சென்று அவளை அடைவதுவே எளிது என்று முடிவு கட்டினுன். சந்நியாசி வடிவங் கொண் டான். உருத்திராட்ச மாலை, திரிதண்டம், காவி யுடையாகியவற்றுடன் தவக்கோலங் கொண்டு துவாரகைக்கு அருகில் உள்ள 'ரைவத மலையில், அப்போது மழை பெய்ததினுல் ஒரு ஆலமரப் பொந்தில் அமர்ந்து கண்ணபிரானைத் தியானித் துச் சிந்தித்தான்.

## சுபத்திரை மீது விருப்பம் :

கண்ணபிரான் சத்தியபாமையுடன் சிறந்த பஞ்சணையில் படுத்திருந்தார். அர்ச்சுனனுடைய கருத்தைத் தமது அறிவுக் கண்ணுல் அறிந்து சிரித்தார்.

சத்தியபாமை ''பெருமானே! இப்போது காரணம் இன்றி ஏன் சிரிக்கின்றீர்? நான் அறி யக்கூடியதாக இருந்தால் சொல்லும்'' என்று கேட்டாள். கண்ணபிரான் ''தேவி! என் அத்தை மகன் அர்ச்சுனன் வனவாசஞ் செய்து கொண் டிருக்கின்றுன். இப்போது அதன் முடிவில் என் அருமைச் சகோதரி சுபத்திரையை விரும்பி, ஒரு துறவியின் திருவேடம் புனைந்து ஆலமரப் பொந்தில் அமர்ந்து என்னைத் தியானிக்கின் றுன். அதனை நினைத்துச் சிரித்தேன். உன் அண் ணனைப் பார்'' என்று கூறிவிட்டு, அர்ச்சுன னிடம் வந்தார். நரநாராயணர்களாகிய அவர்கள், ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு நலம் வினுவினுர்கள். கண்ணபிரான் ''அர்ச்சுனு, இப்படியே சில காலம் துறவி வேடத்தில் இரு. உன் நினைவு பூர்த்தியடையும்'' என்று கூறிவிட் டுத் துவாரகை சென்றுர்.

அந்த ரைவதக மலையில் ஒரு விழா நடந் தது. அந்த மலையை நன்கு அலங்கரித்தார்கள். அங்கு யாதவர்களும் போஜர்களும் தத்தம் மனைவியருடன் உலாவினுர்கள். ஆடல்களும் பாடல்களும் ஆங்காங்கு நடைபெற்றன, பல ராமன் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்த சந்யாசி யைக் கண்டு அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்கினுன். யாதவர்களும் வணங்கிச் சந்யா சியின் ஆசியைப் பெற்றுர்கள், பலராமன் தன் தம்பி தாமோதரனை அழைத்து வணங்கச் செய் தான். சுபத்திரையைக் கூப்பிட்டுக் கும்பிடச் செய்தான். ''தம்பி! இவர் பெரிய ஞானி. இவரை மழைக்காலம் நான்கு மாதம் கழிகின்ற வரை, நமது தங்கை சுபத்திரையின் கன்யாந்த புரத்தின் நந்தவனத்தில் இருக்கச் செய்யலாம். உன் கருத்து என்ன?'' என்று கிருஷ்ணனைக் கேட்டார் பலராமர்,

கிருஷ்ணர் ''அண்ணு! நான் சிறியவன்! தங்கட்குத் தெரியாத ஆலோசனையுண்டோ? ஆனுல் இளம் வயதுள்ள இந்த சந்யாசிக்குத் தங்கை தொண்டு புரிவது நன்றன்று'' என்றுர்.

''தம்பி! துருவாசருக்குத் தொண்டுசெய்து தானே நம் அத்தை குந்திதேவி பெருமை பெற் றுர். தங்கைக்கும் இந்த மூவாசையும்அற்ற முனி வரால் நல்ல நாயகனும் நன் மகனும் கிடைப் பான்'' என்று கூறி, அவரை அழைத்துக் கொண்டுபோய்ச் சுபத்திரையின் மலர்ச்சோலை யில் கொடிப்பந்தரின் கீழே இருக்கச் செய்தார்.

காலையிலும், மாலையிலும் பலராமர் வந்து வணங்குவார். மற்ற அமைச்சர்கள் முதலிய யாவரும் வந்து தொழுவார்கள்,

அர்ச்சுனன், ''பலராமா! உலகமே பொய்; மக்களின் வாழ்வும் பொய்; காண்பதும் பொய்; பேசுவதும் பொய்: பரம்பொருள் ஒன்றுதான் மெய்'' என்று கூறுவான். சுபத்திரை அத்துற விக்குப் பயபக்தியுடன் திருத் தொண்டுகள் புரிந்து வந்தாள்.

(தொடரும்)



# தவத்திரு. வள்ளிமலைச் சுவாமிகள்


' செந்தமிழ்ச் செல்வர் '

திரு. கி. வா. ஜகந்நாதன் M. A.,
அவர்கள்.


இன்று தமிழ் நாட்டில் திருப்புகழ்ப் பாராயணமும் திருப்புகழ்ப் பஜனையும் மிகுதியாக இருக்கின்றன. தமிழர்கள் வாழும் இடங்களிலெல்லாம் திருப்புகழ் இன்னிசை கேட்கிறது. திருக்கோயில்களில் தேவாரம் பாடிய பிறகு திருப்புகழோதும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அறுபது ஆண்டுகளுக்கு முன் திருப்புகழுக்கு இவ்வளவு சிறப்பு இருக்கவில்லை. ஏன் ?

திருப்புகழைப் பாடிய அருணகிரிநாதர் பதினைந்தாவது நூற்றாண்டில் இருந்தவர். அவர் பாடியவை 16,000 திருப்புகழ் என்று தெரிகிறது. தேவாரப் பதிகங்கள் பல்லாயிரக் கணக்காக இருந்தாலும், அவை முற்றும் ஒரே இடத்தில் கிடைக்காமல் இருந்தன, யார் யாரோ அங்கங்கே சில பாசுரங்களைப் பாடினார்கள். அவற்றைக் கேட்ட இராசராச சோழன் தேவாரப் பதிகங்களைத் தொகுக்க எண்ணினான். நம்பியாண்டார் நம்பிகளின் துணையினாலும், திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரின் திருவருளாலும், அருட் பாடல்கள் கிடைத்தன. முழுவதும் கிடைக்காவிட்டாலும் கிடைத்தவற்றைத் திருமுறைகளாக வகுக்கச் செய்து பாதுகாத்தான்.

அவ்வாறே 16,000 திருப்புகழ்ப் பாடல்கள் அருணகிரிநாதர் பாடியிருந்தாலும் அவை யாவும் கிடைக்கவில்லை. மாவட்டப் பதிவாளராக இருந்த வடக்குப்பட்டு திரு. த. சுப்பிரமணிய பிள்ளை, B. A., என்னும் பக்தர், பல இடங்களிலும் தேடி, 1300 சொச்சம் பாடல்களைத் தொகுத்து, இரண்டு பாகங்களாக அச்சிட்டார்.

அவற்றைப் பாடிப் பரப்பும் தொண்டைப் புரிய ஒரு பெரியவர் தோன்றினர். அவரே வள்ளிமலைச் சுவாமிகள். இன்று திருப்புகழ் எங்கும் பரவி மக்களின் உள்ளத்தை ஈர்த்து, முருக பக்தியை உண்டாக்குவதற்கு அப்பெரியார் செய்த தொண்டே காரணம்.

திருப்புகழ்ப் பாடல்களைப் பாடிப் பரவிப் பரப்பிய அப்பெருந்தகையார், 25-11-1870 அன்று, சிதம்பர ஐயர் என்பவருக்கும் லட்சுமி அம்மாளுக்கும் மகவாகத் தோன்றியருளினர்; திருச்செங்கோட்டில் உள்ள அர்த்த நாரீசுவரருடைய திருவருளால் பிறந்தவராதலின் அவர் அர்த்தநாரி என்ற திருநாமம் பெற்றார். இளமையில் கல்வி புகட்டத் தந்தையார் முயன்றார். அவருக்கு வெறும் உலகியற் கல்வியில் விருப்பமும் நாட்டமும் ஏற்படவில்லை. தந்தையார் மைசூர் சென்றார். ஒன்பது ஆண்டிலேயே திருமணம் புரிந்துகொண்ட அர்த்தநாரி, தந்தையுடன் மைசூர் சென்று அங்கே அரண்மனை மடைப்பள்ளியில் சமையற்காரராக வேலை பார்த்தார். இருபத்தைந்து ஆண்டுகள் கைகளிற் கரண்டிபேந்தும் அரண்மனை உத்தியோகம் பார்த்தார்.

கையில் தம்புரா ஏந்தித் திருப்புகழ் பாடி, உலகம் போற்ற வாழ வேண்டிய அவர், மடைத் தொழில் புரிபவராகப் பல ஆண்டுகள் இருந்தார். அப்போது அவருக்கு வயிற்றுவலி உண்டாகி, எதனாலும் தீராமல் மிகவும் துன்புற்றார். யாரோ ஒருவர், 'நீ பழனிக்குச் சென்றால் இந்த நோய் தீரும்' என்று சொல்ல, அதையே உபதேசமாக ஏற்று அத்தலம் சென்றார். அங்கே நாள்தோறும் சண்முக நதி முதலிய தீர்த்தங்களிலிருந்து ஆண்டவனுக்கு அபிஷேகத் திருமஞ்சனம் கொண்டுவரும் தொண்டில் ஈடுபட்டார். மைசூரில் இருந்த போது உடற்பயிற்சி செய்து வலிவான தேகம் பெற்றிருந்தமையால், அவரால் அவ்வாறு செய்ய முடிந்தது. தண்டாயுதபாணிக்கு அபிஷேகம் செய்யும் பாலையும் பஞ்சாமிர்தத்தையும் உண்டு, அதற்குமேல் வேறு ஏதும் உண்ணாமல் இருந்து வந்தார். அவருக்கு வந்த வயிற்று வலி நீங்கியது. அப்பர் சுவாமிகளைச் சிவபெருமான் சூலைநோய் தந்து ஆட்கொண்டதைப் போல, அர்த்தநாரியைப் பழனியாண்டவன் வயிற்று வலி தந்து ஆட்கொண்டான் போலும்!

ஒரு நாள் பழனிக்கு உருத்திரகணிகை ஒருத்தி வந்து பாடினாள். இனிய குரலில் பல பாடல்களைப் பாடினாள். ''வங்கார மார்பிலணி'' என்ற திருப்புகழையும் பாடினாள். அந்தப் பாட்டின் இடையில், ''சிங்கார ரூபமயில் வாகன'' என்ற பகுதி வந்தது. அதை மிக உருக்கமாக அந்தப் பெண் பாடினாள். அதைக் கேட்டபோது அவருக்கு என்றும் இல்லாத உணர்ச்சி உண்டாயிற்று. மனம் உருகியது. கண்களில் புனல் பெருகியது. அவருக்குள்ளே ஒளி தோன்றியது. அதிலே கரைந்து நின்றார். இந்த அற்புத அநுபவத்தில் சிறிது ஆழ்ந்தார். பிறகு தெளிவுற்றார். அந்தப் பெண்மணியை நோக்கி, ''இது என்ன பாட்டு?'' என்று கேட்டார். அவள், ''திருப்புகழ்'' என்றாள். அதுமுதல் திருப்புகழைத் தாமும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் அவருக்கு ஏற்பட்டது. ஆவல் என்பதைவிடப் பெரும்பசி என்பது பொருத்தம். எப்படியோ திருப்புகழ் முதல் பாகத்தைப் பெற்றார். அதைப் படிக்க வேண்டுமே; அவருக்கோ படிக்கத் தெரியாது. திருப்புகழோ சந்தப்பாட்டு. யாரோ ஒருவரிடம் மெல்ல எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்றுக் கொண்டார். அவருடைய தீவிரமான பக்தி எளிதிலே படிக்கும் ஆற்றலைத் தந்தது. நன்றாகப் படிக்கக் கற்றார்; அவர் அந்தப் பாடல்களை இனிய இசையோடு பாடவும் வல்லவரானார். அப்போது இவருக்கு நாற்பது வயது.

திருப்புகழைப் பாடுவதில் வரவரச் சிறப்படைந்தார். ஒவ்வொரு பாட்டுக்கும் இசையும் தாளமும் தாமே அமைத்துக்கொண்டார். இறைவனே உள் நின்று, அந்தப் பாடலின் பொருளுக்கு ஏற்றபடி இசையமைப்பைத் தோற்றச் செய்தான் போலும்.

பழனியை விட்டுப் புறப்பட்டுப் பல ஊர்களுக்குச் சென்றார். தமக்குக் கைவந்த தொழி

லாகிய மடைத்தொழிலில் பொருளீட்டி, அதைக் கொண்டு அன்னதானம் செய்வதும், திருப்புகழ்ப் பாக்களை ஓதுவதும் ஆகிய செயல்களைச் செய்துகொண்டு சுற்றினர். பிறகு திருவருணை வந்தார். அங்கே ரமண பகவானைத் தரிசித்து அவருடன் சில காலம் இருந்தார்.

ஒரு நாள் ரமண முனிவர் அவரைப் பார்த்து ''கீழே போங்கள்'' என்று ஆணையிடுவது போலக் கூறினர். அதைக் கேட்டு அவர் குன்றிலிருந்து கீழே இறங்கி வந்தார். அங்கே சேஷாத்திரி சுவாமிகளைக் கண்டார். அந்த ஞானி எந்தக் கோலத்தில் இருந்தார் தெரியுமா? சேற்றிலே புரண்டுகொண்டிருந்த ஓர் எருமையுடன் அளவளாவி அணைத்து விளையாடிக் கொண்டிருந்தார். அவர் திருமேனியெல்லாம் சேறு படிந்து இருந்தது.

சேஷாத்திரி சுவாமிகள் பெருமையை உணர்ந்தவராதலின், இவர் சுவாமிகள் அருகில் செல்லவே, அவர் இவரைத் தழுவிக்கொண்டார். சேறு மணக்கும் திருமேனியுடன் அங்கேயே உபதேசம் செய்து, ''நீ வள்ளிமலைக்குப் போ'' என்று இவருக்கு அருள்பாலித்து உத்தர விட்டார்.

குருநாதரின் ஆணையை மேற்கொண்டு, திருப்புகழ்ச் சுவாமிகள் வள்ளிமலை சென்று ஓர் ஆசிரமத்தை நிறுவினர். அங்கே இயற்கையாக அமைந்த குகையை விரிவாக்கிப் பூஜை, நிஷ்டை முதலியவற்றைச் செய்து வந்தார். திருப்புகழ்ப் பாராயணத் தொண்டையும் விடாமல் செய்துவந்தார். அவருடைய குரலைக் கேட்டுப் பலர் உருகினர். நாளடைவில் அவருக்கு வள்ளிமலைச் சுவாமிகள் என்ற பெயர் தோன்றி நிலைத்து விட்டது. மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து அவரைத் தரிசித்துத் திருப்புகழ் கேட்டுச் சென்றனர்.

சில ஆண்டுகள் எங்கும் போகாமல் வள்ளிமலையில் தங்கியிருந்த சுவாமிகள், பிறகு அங்கிருந்து சென்னை முதலிய பல இடங்களுக்குச் சென்று திருப்புகழைப் பரப்பி வந்தார். தம் கையினுல் சுரைக்குடுக்கையாலான ஒற்றைத் தந்தி வாத்தியத்தை வைத்துக்கொண்டு, ஈர்க்குச்சிகளால் தட்டித் தாளம் போட்டுப் பாடுவார். அந்த வாத்தியத்தை ஏகதாரா என்று சொல்வார்கள். பாடலுக்குப் பொருள் விரித்துக் கூறும் ஆற்றலையும் பெற்றூர். பலர் அவருடன் சேர்ந்து திருப்புகழ்ப் பாராயணம் செய்யலானுர்கள். முருகனுடைய பன்னிரண்டு திருக்கரங்களின் பெயரால் சென்னையில் பன்னிரண்டு திருப்புகழ்ச் சபைகளை நிறுவினர். ஆவாகனம் முதல் தீபாராதனை ஈருகப் பூஜை செய்யும் வகையில், திருப்புகழ்ப் பாடல்களையும், அருணகிரியார் பாடிய பிற பாடல்களையும் தேர்ந்து தொகுத்துத் ''திருப்புகழ்ப் பாராயணத் தவநெறித் திருமுறை'' என்று ஒரு நூலை வெளியிட்டார். இன்றும் பல பக்தர்கள் அதனைப் பின்பற்றிப் பஜனை செய்து வருகிறுன்றுர்கள்.

*1918*-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி ஆறு பக்தர்களுடன் திருத்தணியில் திருப்புகழ் பாடிக்கொண்டே படிகளில் ஏறிச் சுவாமி தரிசனம் செய்தார். அதுவே பின்னர்ப் பெருகிவளர்ந்து, லட்சக் கணக்கான மக்கள் கூடும் பெரு விழாவாக இப்போது நடைபெறுகிறது. பல இடங்களிலிருந்தும் திருப்புகழ்ப் பஜனை செய்யும் குழுவினர் திரண்டு வந்து பாடுகிறுர்கள்.

வள்ளிமலைச் சுவாமிகளின் அருளுக்குப் பாத்திரர்களாகித் திருப்புகழ் பாடும் பணியில் ஈடுபட்ட பெருமக்கள் பலர், திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்களில் ஒருவர்.

கோபூஜையும் அன்னதானமும் சுவாமிகளுக்கு உகந்த செயல்கள். யாவருக்கும் எளியராகக் குழந்தை போல வாழ்ந்து வந்தார். 22-11-50 அன்று அவர் இறைவனேடு இரண்டறக் கலந்தார். அவருடைய சமாதி வள்ளிமலையில், அவர் வாழ்ந்து வந்த குகையில் இருக்கிறது. அதற்குப் பூஜை முதலியன நடந்து வருகின்றன. ஆண்டுதோறும் குருபூஜை சிறப்பாக நிகழ்கிறது.

இந்த ஆண்டு அவருடைய நூற்றுண்டு விழா நடைபெறுகிறது. திருப்புகழ் பாடி இன்புறும் பக்தர்களெல்லாம் வேதத்தை வகுத்துப் பரப்பிய வியாசரைப் போல வள்ளிமலைச் சுவாமிகளைப் போற்றக் கடமைப்பட்டவர்கள் ஆவர்.

# "திருவாய் மொழியின் தெளி பொருள்"

நாவீறர் திரு. நா. ஸ்ரீகாந்தராமாநுஜ சுவாமிகள், காரைக்கால்.

**தோற்றுவாய் :-**

உலகம் உள்ளிருள் நீங்கி வாழ்வாங்கு வாழ, வந்தவதரித்தருளியவர்கள் ஆழ்வார்கள் ஆவர். இவர்கள் பன்னிருவர். மேலும், இவர்கள் சமயகுரவர்கள் எனப்பெறுவர். அந்தமிழால் நற்கலைகள் ஆழ்ந்துரைத்த இச்சான்றோர் பெருமக்களை மற்றொரு "தசாவதாரம்" என்று உலகம் புகழ்ந்து போற்றி வருகின்றது.

உலகம் பரவும் இவ்வுயர் தமிழ்ப்பெருங் குரவர்களான ஆழ்வார்கள் பன்னிருவருள், வரிசையில் ஐந்தாமவராக வைத்து எண்ணப் பெறுபவர் சுவாமி நம்மாழ்வாராவர். ஆயினும், சிறப்பான் மற்றெல்லோரினும் இவர் முதன்மை பெற்றவராவர்.

**நம்மாழ்வார் :-**

நற்றமிழ் வல்ல ஞானதேசிகரான சுவாமி நம்மாழ்வாரை, "ஸ்ரீ வகுள பூஷண பாஸ்கரன்" என்றும், "ஆதிகுருவாய்ப் புவியில் அவதரித்த" முதற் பெருங்குரவர் என்றும், சான்றோர் புகழ்ந்து பரவுவாராயினர்.

அருள்நெறி பயின்ற மெய்யடியார் அனைவருள்ளும் "வாசுதேவனே எல்லாம்", என்றிருக்கும் பெரியார் காணுதற்கு அரியார் என்று ஸ்ரீ பகவத் கீதை பகருகின்றது.

உண்மை நன்ஞானக் கனியான சுவாமி நம்மாழ்வாரே, "வாசுதேவனே எல்லாம்" என்றிருந்த பெரியாராவர். வைணவர்க்குச் சிறந்த மறையைத் தமிழில் அருளிச் செய்தவரும், கவிச்சக்கரவர்த்தியாம் கம்பநாட்டாழ்வாரால் சிறப்பித்து அந்தாதி பாடப்பெற்றவரும், பரிமேலழகர் முதலாய பெருந்தமிழர்களால் "பெரியார்" என்று பகரப்பெற்றவரும், "தொண்டருட் பெரியார் தூய சடகோபர்" என்று அடியார்களால் ஏத்தி இறைஞ்சப்பெறும் இனிய அடர்ந்த அருளாளரும் இவரேயாவர்.

இவர், மணத்துடன் முளைக்கும் திருத்துழாயைப் போன்று, திருவவதரித்தது முதல் உயர்வற உயர்ந்த இறைவனால் மயர்வற மதி

நலம் அருளப்பெற்று, பக்தி ரூபாபந்ந ஞான முடையராய், இயற்கையை வென்ற இயல் பினராய், சாட்சாத் தருமமும், சர்வலோக சரண்யனுமான, ஸ்ரீகண்ணனெம் பெருமானையே, ''உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையெல்லாம் கண்ணன்'' என்று இருந்தும், இறையருள் இன்ப வெள்ளத்தையே தமக்கு, வைப்பும் வாழ்வுமாகப் பெற்று, அவன் ஒருவனுக்கே அற்றுத் தீர்ந்த அடியராய் வாழ்ந்து, தாம்பெற்ற திவ்விய அனுபவத்தைத், திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் திவ்வியப் பிரபந்தங்களின் வாயிலாய் வழங்கி உலகை வாழ்வித்தருளிய ஒப்பற்ற மாபெருங் குரவராவர்.

வேதம் தமிழ்செய்த விமலரான, இவ் அருளாளரின் திருவருளே அமையும் பெருப்பேருன பேரின்பத்திற்கு. கடைக்கண் நோக்கே சாலும் மனித குலம் உய்தி பெறுதற்கு. பேசரும் இறை நலஞ்சான்ற இப்பெருந்தகையின் ''திவ்வியப் பிரபந்த போதம்'' என்னும் உயிர் நீரூற்றுப் பெருவெள்ளம் பலகிளைகளாகப் பெருக்கெடுத்து ஓடி உலகுயிர்களை வாழ்வுறச் செய்யும் பெற்றியதாகும்.

## திருவாய்மொழி :-

சிறுமா மனிசரான இச்சீரியோர் அருள் கொண்டு அருளிச் செய்த ''திருவாய்மொழி'' ''சாமவேதசாரம்'' எனப் பெரியோர்களாற் போற்றப் பெறுகின்றது.

செவிக்கினிய செஞ்சொல்லாய், இன்ப மாரியாய்க் கற்கக் கற்கத் துன்பம் துடைத்து இன்பம் பயக்க வல்லதாய், தேனும் பாலும் கன்னலும் அமுதமுமான திருவாய்மொழியின் மொழிகடந்த பெரும் புகழ் நம் பேச்சுக்கு ஒரு சிறிதும் நிலமன்றே !

## திருவாய்மொழியின் சீர்மை :-

திருவாய்மொழியின் பெருஞ்சிறப்பை,

''வகுளாபரணன் அருள் கூர்ந்து
உரையாயிரமாம் மறையின்.
ஒரு சொற்பெறுமோ
உலகிற் கவியே''

என்றும்,

''பெருநூல் பிறபல கற்பதில் மாறன்
ஒருநூல் கற்பது ஊதியம் உயிர்க்கே''

என்றும்,

''ஆளாய் மதுரகவி அவதரித்த பூங்கமலத்
தாளான் மகிழ்மாறன் தந்த
தமிழ்மறைப் பாக்
கேளாதவரே யிருசெவியும்
கெட்டாரே''

என்றும்,

''மாறன் விளைத்த மறை
யோதார்க் கில்லையே
ஆறன் விளைத் திருமாலன்பு''

என்றும்,

''விருப்பாக நீதனியன்னுகை
எண்ணினும் மிக்க திண்தோள்
மருப்பாய் வகுளப்பிரான்
குருகூர்த் திருமாலையுற்ற
திருப்பாவை சந்த விருத்தம்
பல்லாண்டுறத் தீட்டிடினும்
பொருப்பா அரிதத் திருவாய்
மொழியைப் பொறிப்பதுவே''

என்றும் கூறப்பெற்ற செய்யுட் பகுதிகள் இனிது விளக்குவனவாகும்.

இனி, உலகிற்கு வேண்டும் ஒண்பொருள்கள் முற்றும், திருவாய்மொழியில் பொதிந்து கிடக்கின்றன. நீதிகள், சமய உண்மைகள், முதலாய எல்லாம் இதன் வாயிலாகவே உணரலாம். வடமொழி மறை முதலியவற்றிலும் தெளிவாகக் கருத்துக்களைப் புலப்படுத்த வல்லது இது. இதனுனே வேதவேதாங்கங்களில் ஈடும் எடுப்பும் அற்ற, நிறைமதியாளராய்

விளங்கி, பிரம்மசூத்திரத்திற்கு மிகப் பொருத்தமான பேருரையிட்டு, ''ஸ்ரீபாஷியக் காரர்'' என்று உயர்ந்தோர்களாற் போற்றப் பெற்ற எம்பெருமானர் தம் இறுதிக் காலத்தில் தம்மைச் சார்ந்தார்க்குச் தஞ்சமாக, ''அருளிச் செயல்களை ஓதியும் ஓதுவித்தும் போருங் கோள்'' என்று ஆணையிட்டுள்ளனர்.

அருள்மாரியாம், திருமங்கையாழ்வார் அருளிச்செய்த சிறிய திருமடல் என்னும், திவ்யப் பிரபந்தத்துள், 33-ஆவது கண்ணியிலுள்ள ''ஆராத வெண்ணெய் விழுங்கி அருகிருந்த மோரார் குடமுருட்டி'' என்ற அடிகளுக்கு உரையிட்டருளிய வியாக்கியான சக்கரவர்த்தியான சுவாமி, பெரியவாச்சான் பிள்ளை, ஆழ்வார்கள் அருளிச்செயல்களை வெண்ணெய் என்றும், வடமொழி, வேதத்தை மோர் என்றும், வேதம் பிராம்மணர் தனம் என்றும், அருகிருந்த மோரார் குடமுருட்டி என்ற விடத்திற்கு, ''பிராம்மணர் தனத்தைப்பாழே போக்கினன்'' என்றும், பகர்வதற்கரிய பெருமையுடைய சுவாமி பட்டர் எடுத்துணர்த்துவார் என்பது தோன்றத் தெளிய விளக்கியருளுகின்ருர். இதனுனும், அருளிச் செயல்களின் அளப்பரும் சிறப்பைக் கவினுற நாம் அறிந்து இன்புறலாம்,

**உரைகள் :-**

மக்கட்கு வேண்டும் அரும் பொருள்கள் நிரம்பி இருத்தலினுலேயே, நம் சந்தான குரவர்களான ஆசாரியப் பெருமக்கள் அனைவரும், திருவாய்மொழியினை ஓதியும், ஓதுவித்தும் போந்தனர். மேலும் மேலும் உரை காண விழைந்தனர். அவர்கள் தம் நெஞ்சில் தோன்றியபடி பொருள் கூறிவிடாமல், திருவாய்மொழியைப் பன்முறை ஓதி, ஓதித் திருவாய்மொழித் தேசிகரின் கருத்துக்களை நன்கு ஆழ்ந்து தெளிந்து ; அறிவு, சீலம் ஆகிய இரண்டாலும் நிறைந்து விளங்கும் புலமை மிக்க ஆன்ருேர் அடிகளைச் சார்ந்து, வழிபட்டு, அப்பெரியார்களின் செயலால் கண்ட உண்மைகளையும் ; சொல்லால் கேட்டு உணர்ந்த பேருண்மைகளையும் கொண்டு, அமிழ்தினைச் சுவைசெய்தென்ன நிகரற்ற பேருரைகளை அருளிச்செய்தனர்.

தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய நூல் கட்கும் உரையாசிரியர் பலர் உரை கண்டனர். திருவாய் மொழிக்கும் நம் ஆன்ருேர் பலர் உரை அருளிச் செய்தனர். எனினும், தொல் காப்பியம், திருக்குறள் உரையாசிரியர்கள் தம் தம் உரையே பொருத்தமானதென்றும், மற்றையோர்கள் உரை பொருத்த மற்றவைகள் என்றும், மறுத்தும் செல்வது கண்கூடு. திருவாய் மொழிக்கு விரிவுரையிட்டருளிய, பெரியோர்கள் முன்னைய உரையாசிரியர்களைச் சிறப்புறப் புகழ்ந்து போற்றி, அவர்கள் உரைகட்கு மகுடமிட்டதுபோல் கவினுற விளக்கிச் செல்லும் முறை காண்பார்க்கு வியத்தக நனி விளங்கவல்லது.

திருவாய்மொழி, பொருட்சுவை நயம், வைணவ சமயக் கருத்துக்கள், இன்னிசை முதலிய பலவும் ஒருங்கமைந்துவிளங்குகின்றது இதன் சிறப்பெல்லாம் இனிதே விளங்குமாறு இதற்கு ஐந்து உரைகள் அமைந்து விளங்குகின்றன. அவற்றுள் ''ஈடு'' என்னும் முப்பத்தாருயிரப்படிப் பேருரை அளக்கலாகாப் பெருஞ்சிறப்புடையது.

திருவாய் மொழியை, அதன் ஈடு முப்பத்தாருயிரப்படிப் பேருரையுடன் திருவரங்கப் பெருமாள் திருமுற்றத்தில், கேட்டார்ப் பிணிக்கக்கேளாரும் வேட்ப மொழிந்த பேசரும் பெரும் புகழினுலேயே, சுவாமி மணவாளமா முனிகள் ''முப்பத்தாருயிரப் பெருக்கர்'' என்றும் ''விசதவாக்குச் சிகாமணிகள்'' என்றும் ஏத்தப் பெறுவது எண்ணி மகிழ்வதற்குரியது.

சங்க இலக்கியமான பரிபாடலில் வாய் மொழி என்பது வேதம் என்னும் பொருளில் பேசப் பெறுகின்றது. ஆகவே, திருவாய் மொழி என்பதற்குச் சிறந்த வேதம் என்பதே முக்கியப் பொருளாகும்.

திருநாவீறுடைய பிராஞரான சுவாமி நம்மாழ்வாரே இறைவனுக எண்ணி வணங்கி,

இவரைப் பற்றிக் ''கண்ணி நுண் சிறுத்தாம்பு'' என்னும் திவ்வியப் பிரபந்தம் அருளிச் செய்த மதுரகவியாழ்வார்.

''மிக்க வேதியர்
வேதத்தினுட் பொருள்
நிற்கப் பாடியென்
நெஞ்சுள் நிறுத்தினுன்''

என மறை பொருளான வேதத்தின் சாரமான கருத்துக்களை இனிய திருவாய் மொழியாகப் பாடி, என் நெஞ்சுள் நிலைத்து நிற்கும்படி செய் தருளினன் என்றுர். என் நெஞ்சு என்ருராயினும், கற்பார் அனைவருடைய நெஞ்சிலும் நிற்கப் பாடினன் என்பதே கருத்தாகத் தக்கதாம். இப்பெரியாரும் ஆழ்வார் என்ற பெயரோடு, ஆழ்வார்களுள் ஒருவராகவும்; இவரது திவ்வியப் பிரபந்தம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற் சேர்க்கப் பெற்று, சேவிக்கப் பெறுகின்றது! ஆனபோது, நல்லார் நவில் குருகூர்ச் சடகோபரான சுவாமி நம்மாழ்வாரின் பெருமையையும், திருவாய்மொழியின் பெருமையையும், எங்ஙனம் நாம் அளவிட்டுரைத்தல் கூடும்?

மற்றும்,

''முத்தி நெறி காட்டவல்ல மூவாறு சாத்திரங்களை''ச் செய்தருளிய பிள்ளை உலகாசிரியரின் திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் செய்தருளிய ''ஆசார்ய ஹிருதயம்''என்ற ஒப்பற்ற நூல், சுவாமி நம்மாழ்வாரின் சீர்மையையும், திருவாய்மொழியின் முழுப்பெருமையினையும் எடுத்தியம்ப வல்லதொன்றுகும்.

இனி, இப்பேரருளாளர் திருவாய் மொழியை எவ்வாறு அருளிச்செய்தனர் எனப் பார்ப்போம். இறைவன் திருவருளால், ஆழ்வாருக்கு அவர்பால் சென்ற அன்பு அளவு கடந்து பெருகவே, உள்ளடங்காத அவ்வன்பின் பெருக்குப் பாசுரங்களின் வடிவமாக வெளிவரலாயிற்று.

இத்திருவாய் மொழியில் 100 பதிகங்கள் உள்ளன. இதற்குப் பேருரையிட்டருளிய உண்மை நன்ஞான உயர்நலப் பெரியோர்கள், இந்த நூறு பதிகங்களின் சுருக்கம், முதல் திருவாய் மொழி; முதல் திருவாய்மொழியின் சுருக்கம், முதல் மூன்று பாசுரங்கள்; அம் மூன்று பாசுரங்களின் சுருக்கம், முதற் பாசுரம்; அம்முதற் பாசுரத்தின் சுருக்கம், முதல்வரி என்று முடிவு கட்டியுள்ளனர்.

''உயர்வற உயர்நலம்
உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம்
அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள்
அதிபதி யவனவன்
துயரறு சுடரடி
தொழுதெழென் மனனே''

என்பது முதற் பாசுரம். இதில் அளப்பரும் இயல்பினனை இறைவனுடைய சிறப்பான நான்கு தன்மைகளை வெளியிட்டு, அத்தன்மையனை வணங்குக எனத்தம் மனத்திற்குச் சொல்லியருளுகின்றுர். முதல் அடியில் பரிதிமுன் மின்மினிபோலப் பிறருடைய உயர்வு எல்லாம் இல்லையென்று சொல்லும்படி உயர்ந்த திருக்குணங்களையுடையவன் என்று அருளிச் செய்கின்றுர். இதனுல் இறைவன் நற்குணங்களெல்லாம் உடையவன் என்பதும், இறைவன் நிர்க்குணன் என்பது தமக்கு உடன்பாடன்று என்பதனையும் வெளியிட்டருளுகின்றுர்.

மொழியைக் கடக்கும் பெரும் புகழாளரான கூரத்தாழ்வான் இம்முதலடியிலேயே மிகவும் ஈடுபட்டிருப்பராம்; ''எம்பெருமானுக்குக் குணமில்லை, விபூதியில்லை என்கிற குத்ருஷ்டிகளின் மிடற்றைப் பிடித்தாற்போலத் திருவாய்மொழி தொடங்கும்போதே, ''உயர்வற உயர்நலம் உடையவன்'' என்னும் அழகுதான் என்னே! என்று நீராய்க் கரைந்து உருகிப்போவராம்.

கூரத்தாழ்வான் என்னும் சீரியோர் பகவத் விஷயத்திலே அளவற்ற ஈடுபாடுடையவராய் இருந்தார்; எனவே, அவரிடத்திலே ஒருரு

திருவாய்மொழிப் பொருள் கேட்க, சுவாமி எம்பெருமானர் விரும்பினர். ஆழ்வான் தாம் அடிமைச் செல்வத்தின் (சேஷத்வம்) எல்லே யிலே ஊன்றி நிற்பவர் ஆதலால், உலகப் பேராசிரியரான சுவாமி எம்பெருமானுர்க்குத், தான் ஆசிரியர், என்ற நிலையிலிருந்து பொரு ளுரைக்க இசையா தொழியவே, முதலியாண் டான் முதலாய இவர் திருவாய்மொழியின் பொருளே எடுத்து இயம்புவதெனவும், அப் படியே அவர்கள் கேட்டுவந்து சுவாமி எம்பெரு மானுர் சந்நிதியில் விண்ணப்பம் செய்யவேண்டு மெனவும் ஒரு நியதியைச் செய்து கொண்டு, முதலிகள் அனைவரும் ஆழ்வான் கோஷ்டியிலே இருந்து; உயர்வறஉயர்நலம் உடையவன் என்று திருவாய்மொழி தொடங்கின வள விலே, மதியெல்லாம் உள் கலங்கி மயங்கித் தரையிலே சாய்ந்தார் ஆழ்வான்! ஏனைய சமயத்தினர், ''பரப்பிரம்மத்திற்குக் குணம் என்பதே கிடையாது, அது நிர்க்குணம்'' என்று கூறுகின்றுர்களே. அவர்கள் மிடற்றைப் பிடித் தாற்போல ஆழ்வார் முதலடியிலேயேஉயர்வற உயர் நலம் உடையவன் என்று அருளிச்செய் யும் திறம் இருந்தவாறு என்னே! என்றுஅதனை நினைந்து இவர் மோகித்து வீழ்ந்தார். இவ்வாறு ஆழ்வான் மோகித்தவாறேமுதலிகளெல்லாரும் கடுக எழுந்து எம்பெருமானுரிடம் ஓடிக் ''காண வாரீர்! காணவாரீர்'' என்றழைக்க, எம்பெருமானுரும் விரைந்து வந்து, ''அன்று எத்திறம் உரலினேடு இணைந்து இருந்துஏங்கிய எளிவே'' என்று ''ஆறு மாதம் மயங்கிக்கிடந்த ஆழ்வாரைச் சேவிக்கப் பெருத குறை இன்று ஆழ்வானைக் காணத் தீர்ந்ததே'' ஆழ்வார் நிலையை இன்று ஆழ்வானிடம் காணப்பெற் ருேமே! என்று, உள்ளெலாம் உருகிக் குரல் தழுதழுத்துப் பேசித் தண்டனிட்டு நெடும் போது காத்திருந்தும், ஆழ்வான் உணரக் காணுது, ஆழ்வான் அருகணைந்து, அவரைத் தொட்டு உலுப்பி, ''ஆழ்வான்! ஆழ்வான்!'' என்று கூப்பிட்டருள, ஆழ்வானும் உயர்வற உயர்நலம் உடையவன் என்பதே என்று சொல்லிக் கொண்டே துணுக்குற்று எழுந்தா ராம். உருகும் இயல்பிலே ஆழ்வான், ஆழ் வாரையொத்திருந்தமையால் இவரை, எம் பெருமானுர் ஏகவசனமாக ஆழ்வான் என்று சொல்லித் தட்டியுணர்த்தினர் என்பது பற்றி அன்று முதலாகக் கூரத்தாழ்வாருக்குஆழ்வான் என்ற திருநாமம் வழங்கலாயிற்று என்றும், அதற்கு முன் அவர் ஸ்ரீ வத்ஸாங்கர் திருமறு மார்பர் என்றே அழைக்கப்பெற்று வந்தார் என்பதும் உலகம் இனிதுணரத்தக்கதாம்.

''முற்குணத்தவ ரேமுதலன்னவர்
நற்குணக்கட லாடுதல் நன்றரோ''

எனக்கம்பநாட்டாழ்வார் இறைவன் திருக் குணங்களைக் கடலாகக் கூறியுள்ளது, ஈண்டு நினைவு கூரற்பாலதாம். திருவள்ளுவரோஎனில் சில சிறப்பான குணங்களைத் தொகுத்து, ''எண் குணத்தான்'' எனக் கூறுவாராயினர்.

இனி இரண்டாவது வரியில் ஐயம்திரிபற, இறைவன் தன் இயல்பை உணரும்படி ஞானத் தையும், அந்த ஞானத்தின் பயனுகிய பக்தி யையும் தனக்கு அருளிய கருணை வள்ளல் என்கிறுர். இதனுல், இறைவன்தன்னை விரும்பு வாரிடத்துத் தான் அவரினும் பேரன்புடைய னுய், அவர் வேண்டிற்றெல்லாம் அளிக்கும் இன்னருளினன் என்பதையும் வெளியிட்டரு ளுகின்றுர்.

மூன்ருவது அடியில் சிறந்த ஞானிகளான விண்ணுளார்களுக்குத்(நித்ய சூரிகள்) தலைவன் என்கிறுர். இதனுல், இறைவன் தன்னை அடைந்தார்க்கு வீடுபேறளிக்கும் வித்தகன் என்பதை வெளியிடுகின்றுர்; ''துயரறு சுடரடி'' என்ற நான்காம் அடியின் பகுதியால், அவன் தன்னடியார்கள் விரும்பிய திருக்கோலத்தோடு காட்சியளிக்கும் இயல்பினன் என்பதனையும் வெளியிட்டார். இறைவனின் குணப்பெருமை யினையும், அமரர்கள் அதிபதியாம் தன்மையினை யும் உரைத்தருளி, பின், தமக்குஞான பக்திகளை அருளின தன்மையைக் கூறவேண்டுவது முறை யாயிருக்க, தமக்கு அருள் புரிந்ததில் உண்டான அன்பின் பெருக்கால், இரண்டையும் கூறும் வரை இருக்கமாட்டாது, குணப் பெருமை கூறியவுடன், தமக்கு அருள் புரிந்ததைக் கூறுகின்றுராவர்.

துயரறு சுடரடி என்பதற்குத் தன்னை யடைந்தாருடைய பிறவிப் பிணியைப்

போக்கும் திருவடிகள் என்று, எம்பெருமானுர்க்கு முன்னிருந்த ஆசாரியர்கள் பொருள் பொருள் கூறுவாரயினர், ஆனல், எம்பெருமானுரான சுவாமி இராமாநுசரோ, தன்னை யடைந்த அடியார்களின் துன்பத்தைப் போக்கி அதனுல் தான் துயர் நீங்கும் திருவடிகள் என்று உயர்ந்த பொருள் அருளிச் செய்வாராயினர்.

அறப்பெரியஞன இறைவனுக்கு இயல்வில் துயர் ஒன்றும் இல்லையாயினும், தன் திருவடிகளே தஞ்சம் என அடையும் ஞானி ஒருவன் கிடைத்தால். அதனைப் பெரும்பேருகக் கருதும் இறைவனின் இயல்பை நோக்கி, இராமாநுசர் இங்ஙனம் நயம்படப் பொருள் கூறினர் என்பது அறிந்து இன்புறற்பாலதாம். அத்திருவடிகளைத் தொழுது எழுவாயாக என ஆழ்வார் தம் திருவுள்ளத்திற்குக் கூறிஞராயினும், மக்கள் அனைவரும் அத்திருவடிகளைத் தொழுதல் வேண்டும் என்பது கருத்தாதல் பெறப்படும்.

இங்ஙனம் இம்முதற்பாசுரத்தில் இறைவனுக்குக் கூறப்பெற்ற திருக்குணங்களின் பெருமை, வீடு பேறளித்தற்குரிய இயல்பு, அடியார்க் கருளும் தன்மை, அவ் அடியார் பொருட்டு வேண்டும் திருக்கோலம் கொண்டு அருளும் தன்மை, அவன் திருவடிகளைத் தொழ வேண்டும் என்பது, ஆகிய இவைகளே பின் வரும் திருவாய் மொழி முழுதும் பரக்கக் கூறப் பெறுதலைக் காணலாம்.

இத் திருவாய்மொழியில், சுவாமி நம்மாழ்வார் அருளிச் செய்தருளும் கருத்துக்களைத் தாமே இறைவனை நேரிற் பாடியவை, கடவுட் காதலால் தாம் ஒரு நாயகி நிலையில் இருந்து பாடியவை, தோழி அல்லது தாயின் நிலையில் இருந்து பாடியவை என மூன்று வகையாகப் பிரித்து உரையாசிரியர்கள் பொருள் கூறும் திறம்பெரிதும் இன்பம் பயப்பதாகும்.

ஆக, ஒரு பெரும் திருநாளைக் கொண்டாடுவார் போன்று, இறைவன் படிகளையெல்லாம் இத்திருவாய் மொழியில் ஆழ்வார் இனிதே அனுபவித்தருளுகின்ருர்.

---

# மதிப்புரை

## (3) சிவலிங்க வழிபாடு:—

இந் நூல் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பணியாற்றிவரும் திரு சி. சத்திய மூர்த்தி, M.A., B.O.L. அவர்கள் தமது முதுகலைத் தேர்வுக்காக எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையாகும். இந்நூலின்கண் சிவலிங்க வழிபாட்டின் தோற்றமும், வரலாறும், அதுபற்றிக் கூறப்படும் பலவகைக் கருத்துக்களும், சிவலிங்க தத்துவ நுட்பங்களும் விளக்கப்பெற்றிருக்கின்றன. இலிங்கத்தைப் பற்றி அயலவர் இழிதகவாகக் கூறியிருக்கும் கருத்துக்களை அறவே மறுத்து, அதனது பலதிறச் சிறப்புக்களை விவரித்து ஆசிரியர் விளக்கியிருக்கும் திறன் போற்றத்தக்கது. ஒரு சிறந்த பயன் மிக்க நல்ல ஆராய்ச்சி நூல். அளவில் சிறியதாயினும், பொருளால் சிறப்பு அமைந்தது. ஆசிரியரின் சமயப்பற்றும், தமிழ்ப்புலமையும், ஆராய்ச்சித் திறனும், அரிய உழைப்பும் பெரிதும் போற்றத்தக்கன. கிடைக்கும் இடம்: ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், கோர்ட்ரோடு, நாகர்கோவில்-1. விலை, ரூ. 2—00.

—ஆசிரியர்

# திருமாமகள்

திரு. என். எஸ். தாத்தாசாரியர்., தஞ்சை.

## முன்னுரை:

கம்பர் வாலி வதைப்படலத்தில், பெரிய பிராட்டியார் என்கிற திருமாமகளின்சிறப்பினை மிக அழகாகவும், தெளிவாகவும் விளக்கியுள்ளார். வாலி இராமனின் கணையால் அடிபட்டுக் கிடந்தான். இராமனை நோக்கிப் பலபுகன்றான். அவ்வாறு பேசிவரும் வகையில்,

அரக்கர் ஓர் அழிவு செய்து
கழிவரேல், அதற்கு வேறோர்
குரக்கினத் தவரைக் கொல்ல
மனுநெறி கூறிற் றுண்டோ?
இரக்கம் எங்கு உகுத்தாய்? என்பால்
எப்பிழை கண்டாய் அப்பா?
பரக்கழி இது நீ கண்டால்,
புகழையார் பரிக்கற் பாலார்!

என்று ஒரு கேள்வி கேட்டான், இதற்கு இராமன் விடை தந்தான் எனினும், வாலியே தான் உணர்ந்த ஒரு விடையை அளித்தான்,

கோவியல் தருமம் உங்கள்
குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத ஒண்ணு
உருவத்தாய் உடைமை யன்றோ?
ஆவியைச், சனகன் பெற்ற
அன்னத்தை, அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்,
திகைத்தனை போலும் சிந்தை!

என்றான். இச் செய்யுளின் மூன்றும் நான்காம் அடிகளில்வரும் மூன்று அடைமொழிகள் சீதையைப்பற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. கண் கொண்டு அவை நோக்கத் தக்கது, பிராட்டி உன்னுடன் கூட இருந்தால் நீ இந்த இரக்க மற்ற செயலைச் செய்திருக்கமாட்டாய். அவள் அருகே இல்லாததன்றோ, உன் இரக்கத்திற்குத் திரையிட்டது, என்று கூறினான். இதனால் பிராட்டியின் அருளே எம்பெருமானுடைய சீற்றத்தையும், ஆண்மையையும் ஆற்றவல்லது என்று நாம் அறிகின்றோம். மற்றும் என்றும் தீதே புரிந்து தீயவராய் வாழும் மக்களுக்குப் பிராட்டியார் திருவருளே முதற்படியில் தஞ்சமாகிறது என்ற கருத்தும் வெளியாயிற்று.

## இராமானுசர் :

ஒரு பங்குனி உத்திர நன்னாளில், திருவரங்கம் கோயிலில் நாச்சியார் சந்நிதியில் வடமேற்குச் சுற்றில், அரங்கனும், அரங்கநாயகியும் திருவோலக்கம் கொண்டு எழுந்தருளியிருக்கும் காலையில், ஆன்மாவைப் பறக்கவிட்டு, ஆன்ற பொருளுக்கும், புதுமைக்கும் அடிமை பூண்டு ஆனந்தக்கடலில் சிக்குண்டு தம்மையும் உணராது தவிக்கும் மக்களுக்காக இராமானுசர் அத்திவ்விய தம்பதிகளின் திருவடிவாரத்தில் சரண் புகுந்து ''எனதுதொடர்புகொண்டாலே போதும் என்று திருவுள்ளம் பற்றி, என்னடி

யார் யாவருக்கும் அருள்பாலித்துப் பெருநலம் நல்க வேண்டும்'' என்றுவேண்டிக்கொண்டார். எம்பெருமானும் ''அங்ஙனமே ஆகுக'' என்று பதில் திருவாக்கு அளித்தார். அப்பொழுது தான் தமது மூன்று கத்தியங்களையும் இராமாநுசர் அருளிச் செய்தார் என்று கூறுவதுண்டு. அம்மூன்று கத்தியங்களிலும் ''சரணாகதிகத்தியம்'' என்ற கத்தியத்திலே, முதன்முதலில் இராமாநுசர் சரண் புகுந்தது திருமாமகள் திருவடியில்தான். அவள் அருள் பெற்றபிறகே உடையவருக்குத் திருவரங்கன் அருள்பெற எளிதாயிற்று என்ற உண்மையையும் கருதும் இடத்துப் பிராட்டியைப் புருஷகாரம் (சிபாரிசு) ஆகப் பற்றி நின்றவர்க்கே எம்பெருமான் அருள் எளிதில் கிட்டும் என்ற உண்மை தெளிவுற வெளியாகியது.

## இராமாயணம் :

ஸ்ரீமத் இராமாயணத்தில் சீதையுடன் ஸ்ரீராமன் இருந்த காலத்து நடந்த நிகழ்ச்சிகளையும், அவள் பிரிந்திருந்த காலத்து நடந்த நிகழ்ச்சிகளையும், ஒன்று சேர்த்துப் படித்து உற்று நோக்கினால், உண்மை வெளிப்படும், காகாசுரனும் சயந்தன், சீதையுடன் சித்திர கூடமலையில் செய்த பிழையிலும் பெரியபிழை உண்டோ? எழுதவும் கூறவும் கேட்கவும் கூசும் நிகழ்ச்சி அன்றோ அது! பெருந்தீம்பனை அவனையும் பெருமாள் காத்தருளினர். அவனும் உயிர் பிழைத்தான் என்றால், அதற்குக் காரணம் என்ன? பெரியபிராட்டியான திருமாமகள் அருகில் இருக்கக் காகாசுரன் வேறு வகையின்றியும் இராமனின் திருவடியில் தஞ்சம் புகுந்த பெருமையால் அன்றோ? இதனை வேதாந்ததேசிகர் தமது ''அடைக்கலப்பத்து'' என்ற அரும் தமிழ்ப் பிரபந்தத்தில்,

''பத்தி முதலாம் அவற்றுள்
பதி எனக்குக் கூடாமல்,
எத்திசையும் உழன்றோடி
இளைத்து விழும் காகம்போல்
முத்தி தரும் நகர்ஏழில்
முக்கியமாம் கச்சிதனில்
அத்திகிரி அருளாளர்க்கு
அடைக்கலம் நான் புகுந்தேனே''

என்று மிகவும் அருமையாகப் பணித்தருளியுள்ளமை காணலாம்.

ஆனால், இராவணன் செய்த பிழையோ அவ்வளவு கொடியதன்று. அதனைக் கம்பர் எடுத்துக் கூறும்பொழுது மிகவும் பொருத்தமாகக் கூறினர். மன்னனாகிய அரக்கன் பிறர் மனைவியை அடைவதும், அடைந்த மனைவியைப் பலவந்தப்படுத்தாமல் அவள் இசைவை எதிர் பார்த்து நின்றதும் ஒருபடியில் காகாசுரன் செயலிலும் கொடியதன்று. ஆயினும் அவ்வரக்கன் முடி இழந்து தன்படி இழந்து, போர்க்களத்தில் இராமபாணத்தினால் மண்விழுந்து மாண்டான் என்றால் அதற்குக்காரணம் என்ன? இதற்கு நம் முன்னோர்கள் அழகான விடை இறுத்தனர். பிராட்டி அருகே இல்லாமையன்றோ இராவணன் வதைக்குக் காரணமாயிற்று என்று. மற்றும் சீதை அருகே இருக்கும் பொழுதும், அருள் பெற்ற பொழுதும் சூர்ப்பனகை மாண்டிலள்; சிவபெருமானின் வில்லை இராமன் எளிதில் வளைத்தார் முறித்தார், அனுமன் கடலையும் தாண்டினான். இலங்கையை எரித்த தீ அனுமானை ஏதும் தீங்கு செய்ய இயலாமல் விட்டு விட்டது. விராதன் உய்ந்து போனான். கைகேயியும், பரதனும் கொடுமையிலிருந்து தப்பினார்கள், பரசுராமன் உயிர் பிழைத்தார். பாதுகா ராஜ்யம் ஏற்பட்டது, கண்ணீரும், கம்பலையுமாய் நின்ற அயோத்தி மக்கள் நலம் கண்டனர். மிகக் கொடிய கரன், தூஷணன் முதலிய பதினாலாயிரம் அரக்கர்கள் காற்றில் பஞ்சென மடிந்தனர். ஜடாயுவுக்கு மோட்சம் கிட்டியது. மாரீசன் நற்கதிஅடைந்தான். விபீஷணன் சரணாகதி பலித்தது, கொடிய அரக்கர்கள் பிழைத்தனர். இறந்த குரங்குகள் உயிர்பெற்றன. இலங்கை எழில் பெற்றது. இன்னோரன்ன பல நன்மைகள் ஏற்பட்டன.

அவள் அருகே இல்லாத காலத்தும், அவள் இன்னருள் பார்வை ஏற்படாத இடத்தும்,

கொடுமை பல நிகழ்ந்தன என்பதையும் அறிய லாம். தாடகை கொலையுண்டாள். சுபாகு எரிந்தொழிந்தான், இராமன் பம்பைக்கரையில் புலம்பி நின்ருர். குரங்கான சுக்கிரிவனையும் சரண் புகுந்தார். கடல் அரசன் காணுக்கண் கொண் டான். இலங்கை எரிந்தது. இந்திர சித்தும் மாண்டான். இன்னேரன்ன பல இடையூறுகள் நிகழ்ந்தன. இவ்வுண்மையைச் சீதைதீக்குளித்த பின்னர் பிரமனும், சிவபெருமானும் இராம னுக்கு உறுப்பாகக் காட்டியருளினர்கள் என வால்மீகி கூறினர்.

## பட்டர்:

கூரத்தாழ்வார் திருக்குமாரரும், எம்பாரு டைய அருமைச் சீடரும், திருவரங்கநாச்சியா ருக்குப் பிள்ளையாய் வளர்ந்தவரும், அரங்கரின் ஆத்தான புரோகிதரும், அரங்கனுடன் உரை யாடும் பேறு பெற்றவரும், பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் குருவும், திருவாய்மொழிக்கு இன்னுரை கூறிப் புலவர்களையும் திகைக்க வைத்தவரும், அளவற்ற மேதாவிலாசம்பெற்ற வரும், நஞ்சீயரை வழிப்படுத்தியவரும், மேலாம் அரும் பெரும் ஆசாரிய வள்ளலும் ஆகிய பட்டர் பெருமான், திருவரங்கனை இருநூற்று முப்பது வடமொழிச் செய்யுளால் துதித்து விட்டுப் பின் ஸ்ரீரங்கநாச்சியாரைத் துதிக்க இழிந்து பத்தெட்டுச் செய்யுள்களால் பணிந்து மீண்டும் திருஅரங்கனிடம் சென்று, அப்பெரு மானைத் திருப்பள்ளி உணர்த்தி ''ஒரு விண்ணப் பம் கேளாய்'' என்று ஒரு செய்யுள் இடுகிருர். அவ் வடமொழிச் செய்யுளின் பொருள் பின் வருமாறு:—

''திருவுக்கும் திருவாகிய அரங்கநகர் அப் பனே! தங்களுக்குஇனியவளாகிய நாச்சியாரைத் தங்களுக்கும் மேற்பட உயர்த்திப் பேசப் போகிறேன். அதனுல் சீற்றம் கொள்ளாமல், பொறுமையுடன் அடியேன் உரையைக் கேட் டருள வேண்டும். அங்ஙனம் தேவரீர் கேட்ட ருளுகின்றீர் என்பதைப் பொது மக்கள் யாவரும் அறியவும் வேண்டும். நாச்சியாரைப் பற்றி நான் கூறும் துதிமொழிகளை, அடியேன் விண்ணப்பிக்கும் பொழுது தேவரீருடைய அகன்ற செந்தாமரைக் கண்கள் களிப்பு மேலி டாமல் கண்பனிப்பக் கருவிழி சுழல, மிளிர்ந்து ஓங்கவேண்டும். அவ்வளவும் போதாது பக்தர் கள் மறுமுறை புத்தம் புதிய கவசம்கொணர்ந்து சார்த்திஞல், அக்கவசம் மகிழ்ச்சியின் பெருக் கால் உடல் பருக்க, பிளவுண்ணவேணும். இவ்வண்ணம் நூற்றுக்கணக்கான கவசங்கள் சார்த்தினுலும் தேவரீர் ஆனந்தத்தின் மிகுதி யைக் காட்டிக் கொண்டே திருச்செவி சாய்த்து அருள வேண்டும்'' என்பதாகும்.

எம்பெருமானுக்கு ஏற்பட்ட பெருமை எல்லாம் அவர் திருமாமகளின் திருக்கண்வட் டத்திலே இருப்பதால்தான். ஆனுல் அவளுக்கு வந்த ஏற்றமோ இயற்கையில் அமைந்தது என்ற கருத்தினை, மிகவும் ஏற்றமுடன் விளக் கிக்காட்டினர். காண்போம் அதனை: பூவிற்கு ஏற்றம் எதனுலே என்ற கேள்வி உலகில் பிறப் பதுண்டு. அதற்குப்பதில் பூவில் கலந்த நறு மணத்தால் என்று விடைபகர்வார்கள். ஆனுல் மலரின் நறுமணத்திற்கு எதனுல் சிறப்பு ஏற் பட்டுள்ளது என்ருல், நறுமணத்தாலே என்று தான் அதனையே விடையாகக் கூறவேணும். மேலும் இத்தகைய கேள்வியும் பிறக்காது. அதனுல் மலரில் உள்ள மணத்தின் ஏற்றம் இயற்கையிலமைந்ததே என்று கூறலாம். இவ் வண்ணம் எம்பெருமானுக்கு எதனுல் ஏற்றம் என்ருல், பிராட்டியினுல், அவள் அருள்பார்வை யினுல் என்று பதில் வந்தேதீரும். பிராட்டிக்கு எதனுல் ஏற்றம் என்ருல், இக்கேள்வியே பிறப்பதில்லை. அங்ஙனம் கேள்வி பிறந்தாலும் அவளாலேதான் அவளுக்குச் சிறப்பு, என்று விடை இறுக்க வேண்டி வரும் என்கிருர். முழு முதல்வனை ''எம்பெருமானுக்குத் தனித்த தொரு பெருமை கிடையாது. எல்லாம் திருமா மகளாலேதான் என்ருல் எம்பெருமான் பெருமைக்கு இழுக்கன்றோ'' இது எனச் சிலர் கேட்கலாம். அதற்குப்பதில் இருவகையில் பணிப்பதாவது:—

பொன்னைவிட மாணிக்கம் சிறந்தது, விலை யுயர்ந்தது என்பது ஒருதலை. இருப்பினும் அம் மாணிக்கத்தைப் பொன் அணியில் இட்டா லன்றோ, அதன் ஏற்றமும் அழகும் ஓங்கும்.

அப்பொழுதுதான் அம் மணியின் ஒளி ஓங்குகிறது. ஒளியினுல் அம்மணிக்கு ஏற்றமும் ஏற்படுகிறது. இவ்விரண்டு உதாரணங்களால், எல்லா உலகத்திற்கும் பெற்றதாயினும் சிறந்த அன்னையாகிய திருமாமகளும், எம்பெருமானும் கூடி இருப்பது, நானிலத்தின் நலத்திற்கே என்ற உண்மை உணரப்படுகிறது. அவர்களுக்குள் உண்மைப்பிரிவு கிடையாது, ''அகல கில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா'' என்று நம்மாழ்வார் அருளிச்செய்த படிக்கு அத்தம்பதிகளின் சேர்க்கை, மலரும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும் பிரியாமல் அமைந்தது என்றும்; மணத்தைக்கொண்டு மலரைச் சூடுவதுபோலவும், ஒளியைக் கொண்டு மாணிக்கத்தை விரும்புவது போலவும், திருமாமகளைக் கொண்டே எம்பெருமான் திருவடிகளை நாம் சென்னிக்கு அணியாகப் பூண்டு உய்கிறோம். ஒளியாகிய திருமாமகளைக் கொண்டே மாணிக்கமான காயாம்பூவண்ணனை விரும்பி ஏத்துகிறோம் என்று ஏற்படுகிறது.

---

# கும்பாபிஷேக விழாக்கள்

(1) தொண்டை நாட்டில் திருஞான சம்பந்தர் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகத் திகழ்வதும், காஞ்சிபுரத்திற்குத் தெற்கே 8 கல் தொலைவில் உத்திர மேரூர்ச் சாலையில் அமைந்துள்ளதுமாகிய, **திருமாகறல் ஈசுவரர் கோயில்,** திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானம் அவர்களும், தருமையாதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களும், ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் முதலானோர் வழங்கிய அருள் கொடையாலும், திருத்தணிகை பழனி திருச்செந்தூர் முதலிய கோயில்களின் நிதி உதவியாலும், பற்பல அன்பர்களின் பெருமுயற்சியாலும், 1,80,000 ரூபாய் செலவில், இராசகோபுரம் உட்பட 18 திருப்பணிகள் அழகுறச் செய்து முடிக்கப்பெற்று, 31-1-71 ஞாயிற்றுக்கிழமை அன்று, காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களின் அருள் ஆசியுடன், **மகா கும்பாபிஷேக விழா** மிகவும் சிறப்புற நடைபெற இருக்கிறது. கும்பாபிஷேக விழா நிகழ்ச்சிகள் 22-1-71 முதலாகவே தொடங்கி முறைப்படி மிக விமரிசையாக நடைபெற உள்ளன. தேவார பாராயணம், சமயச் சொற்பொழிவுகள், இன்னிசை விருந்து, நாதசுவரக் கச்சேரிகள் முதலியன பலவும், சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அன்பர்கள் அனைவரும் தரிசித்து மகிழ்க!

(2) அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்து முருகனின் அருள் பெற்ற பெரு முனிவரும், உப அருணகிரிநாதர் என்று போற்றப்பெறுபவரும், அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானுவாய்த் திகழ்ந்தவரும் ஆகிய **பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்** தவம் இயற்றியதும், முருகனின் தரிசனமும், உபதேசமும் பெற்றதுமாகிய இராமநாதபுரம் வட்டம் **பிரப்பன் வலசையில்,** மாட்சிமைமிக்க **திரு. எஸ். இராமநாத சேதுபதி** அவர்கள் தலைமையில், அடியோர் பெருமக்களால் கட்டி முடிக்கப்பெற்ற ஸ்ரீ மாயூரப் பெருமான்-பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தெய்வத்தானத்தின் மகா கும்பாபிஷேகம், 31-1-71 ஞாயிறன்று, **மதுரை ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ** சோமசுந்தர ஸ்ரீஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் திருமுன்னிலையில் மிகவும் சிறப்பாக நடைபெறும். உயர்திரு. காசிநாததுரை முதலிய பெருமக்கள் கலந்து கொள்ள இருக்கின்றார்கள், அன்பர்கள் அனைவரும் விழாவுக்குச் சென்று தரிசித்துப் பயன் பெறுக!

—ஆசிரியர்.

# "வள்ளி தெய்வயானை*"

( ந. ரா. முருகவேள், M. A., M. O. L. )

**முன்னுரை :**

தமிழகத்தில் கொண்டாடப்படும் திரு விழாக்கள் பலவற்றுள், ''கந்தர் சஷ்டி'' எனப் படும் முருகனின் விழா, மிகவும் சிறப்புடைய ஒன்ருகும். முருகன் என்னும் சொல்லுக்கு அழகு மிக்கவன், இளமையுடையவன் முதலிய பல பொருள்கள் இருப்பினும், "முருகயர்ந்து வந்த முதுவாய்வேல" என்பதனை மேற்கோளா கக் காட்டி, முருகனின் அருள் பெற்ற முனிவ ராகிய அருட்டிரு பாம்பன் அடிகளார், ''திரு விழாவிற்குரிய தேவன்'' என உரை செய்து முருகன் என்னும் சொல்லுக்கு மேலும் ஒரு புதிய பொருள் விளக்கம் புரிந்துள்ளார். முருக னுக்குரிய அத்தகைய திருவிழாக்களுள், 'கந்தர் சஷ்டி' விழா மிகவும் முதன்மை வாய்ந்தது என் பதில் ஐயமில்லை.

கந்தர் சஷ்டி விழா நாட்களில், கந்த புரா ணம் பற்றிய விளக்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறுவது மிகவும் பொருத்தமாகும். சூரபதுமனைச் சேவலும் மயிலுமாகக் கொண்ட ருளிய பிறகு, முருகப் பெருமான் தெய்வயானை அம்மையையும், வள்ளியம்மையையும் மணம் புணர்ந்து அருளிய வரலாறு, கந்தபுராணத்தில் தனிப்பெரும் சிறப்புடையதொரு பகுதியாகும். கடவுட் பண்பு நலங்களையெல்லாம், நாம் நம் கற்றறிவும் சிற்றறிவும் கொண்டு கருதி அளந் தறிய முற்படுதல், நமக்கு எளிதில் இயல்வ தொன்று அன்று ஆயினும், கடவுட் கோட்பாடு களின் தத்துவ நுட்பக்கருத்துக்களைத் தக்காங்கு ஓரளவேனும் உணர்ந்து கொள்ள முயலுதல், நமது கடமையும் இயல்புமாகும். ஆதலின் அது பற்றிய சில கருத்துக்களை, இங்கு ஒரு சிறிது ஆராய்தல் மிகவும் நலம் பயக்கும்.[1]

**ஐயமும் விடையும் :**

தெய்வயானையம்மை திருமணம், வள்ளி யம்மைதிருமணம் பற்றி ஆராயுங்கால், நம்மிற் பலருக்குக் கடவுளும் திருமணம் செய்து கொள் ளுவாரா! கடவுளுக்கும் மனைவி தேவையா? என் பன போன்ற, பல ஐயப்பாடுகள் ஏற்படுவ துண்டு. இத்தகைய ஐயப்பாடுகள் தோன்று

---

1 "Let us, then if you please, in the first place, announce to the gods that we are not enquiring about them; We do not presume that we are able to do so; but we are truly enquiring about the meaning of men in imagining their forms and worshipping them."

—Socrates, in Plato's Cratylus.

* சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர், கந்தர் சஷ்டி விழாவில் ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது. (3-11-70)

தொட்டே நிகழ்ந்து கொண்டு வந்துள்ளன எனத் தெரிகின்றது.

மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தில், திருச்சாழல் என்னும் பகுதியில், "மலையரசனின் மகளாகிய பார்வதியைச் சிவபெருமான் உலகறியும்படி திருமணம் செய்துகொண்டான்" என்பது எற்றுக்கு? என்று ஒருத்தி வினவ; அதற்கு மற்றொருத்தி "அங்ஙனம் சிவபெருமான் செய்து காட்டாமல் போயிருப்பின், அவன் கலைகளில் நவின்றருளிச் செய்த பொருள்களையெல்லாம் அறிந்துகொள்ள இயலாமல், உலகனைத்தும் கலங்கித் தடுமாறிப் போயிருக்கும். வையத்து வாழ்வாங்கு வாழும் முறைகளைக் கலை நூல்களில் வகுத்துக் கூறியருளிய இறைவனே, அங்ஙனம் தான் கூறியவற்றைத் தானே நடத்திக் காட்டியும், அவற்றை நமக்கு விளக்கித் தெளிவு செய்தருளினன். சொல்லொன்றும் செயலொன்றுமாய்த் திரியும் நம்மைப்போல அன்றித் தான் சொல்லியவற்றைத் தானே கடைப்பிடித்து நம் பொருட்டு நடந்து காட்டியருளினன் இறைவன்" என விடை கூறுவதாக,

"மலையரையன் பொற்பாவை
வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான்
என்னுமது என்னேடீ?
உலகறியத் தீவேளாது
ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம்
கலங்கிடுங்காண் சாழலோ!

என்னும் இனிய திருப்பாடல் அமைந்திருத்தல் சிந்தித்துணரற்பாலது.

## குறிகளும் அடையாளமும் :

இறைவன் தனது வடிவிலும் இயல்பிலுமே மனிதனைப் படைத்தருளினன் எனச் சிலர் கூறுவதுண்டு. அஃது எங்ஙனமாயினும், மனிதன் கடவுளைத் தனது வடிவமும் இயல்பும் அமையத் தனக்கு ஏற்பப் படைத்துக் கொண்டான் எனக் கூறுவதும், ஒரு வகையில் பெரிதும் பொருந்தும். இதனையே சுருக்கமாகவும், வேறொரு வகையிலும் கூறமுற்படின், மனித வாழ்க்கைக்குரிய மாட்சிமை மிக்க உண்மைகள், நீதிகள், ஒழுகலாறுகள், உயரியகுறிக்கோள்கள், தத்துவ நுட்பங்கள் ஆகிய பலவும், கடவுளின் திருவுருவங்களிலும், வரலாறுகளிலும் வழிபாட்டு முறைகளிலும் பிறவற்றிலும் உருவக முறையில் அமைத்து, நமக்கு நம் முன்னோர்களாலும், நூல்களாலும் செவ்விதின் அறிவுறுத்தப்பட்டுள்ளன எனக் கூறுதல் அமையும். இதனையே,

குறிகளும்அடை யாளமும், கோயிலும்,
நெறி களும்அவர் நின்றதொர் நேர்மையும்,
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்!மனம் என்கொல் புகாததே?

என வரும் திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகைப் பாடல், நமக்குச் செவ்விதின் உணர்த்தியருள்கின்றது.

## புராணங்கள் :

"புராணங்கள் என்பவை, உயரிய தத்துவ நுட்பங்களைக் கதைகள் அல்லது புனைகதைகளின் வாயிலாக, அழகும் சுவையும் அமையச் செய்து நமக்கு அறிவுறுத்துகின்றன. அவ்வாற்றால் கடினமும் சிக்கலும்மிக்க உயரிய தத்துவ நுட்ப உண்மைகளைப் பெரும்பாலான பொது மக்களின் எளிய உணர்விற்கும் எட்டித் தெளிவுறப்பதிந்து புலனாகும்படி, புராணங்கள் விளக்குகின்றன. கல்வி அறிவற்ற பாமரமக்களுக்குத் தத்துவக் கலையின் கருத்து நுட்பங்களில் ஆவலும் ஆர்வமும் ஏற்படச்செய்யும் கடினமான வேலையினை, இந்தியநாடு மிக எளிதாகச் செய்து முடித்து வெற்றி கண்டுள்ளது,"

---

2 "The Puranas contain the truth dressed up in myth and stories, to suit the weak understanding of the majority. The hard task of interesting the multitude in the metaphysics is achieved in India."

—Dr. S. Radhakrishnan.

### வலமும் இடமும் :

இவ்வடிப்படையில், இக்கால நிலையில், நாம் வள்ளி தெய்வயானை திருமணங்கள் பற்றிய முருகனின் வரலாற்றினை, இன்று ஒரு சிறிது ஆராய்தல் பயனுடைத்து ஆகும். முருகனின் இருபுறத்துமுள்ள தேவியர் இருவருள் தெய்வயானையம்மை யார்? வள்ளியம்மை யார்? என்பது நம்மில் பலருக்குத் தெரிவதில்லை. முருகனின் இடப்பக்கம் இருப்பவர் தெய்வயானையம்மை, வலப்பக்கம் இருப்பவர் வள்ளியம்மை. பண்டைக் காலத்தில் நம்முன்னோர்கள் சிற்சில செய்திகளைக் குறிப்பினாலேயே உணரவும் உணர்த்தவும் வல்லவராக விளங்கியிருந்தனர். ஒரு குடும்பத்தில் ஆடவரும் பெண்டிருமாகப் பலர் ஓரிடத்தில் ஒருங்கு திரண்டிருப்பின், யார் யாருக்கு என்ன உறவு உரிமையுடையவர் என்பது, நாம் வினவி அறிந்து கொள்ள வேண்டாமலேயே, நயத்தக்க நாகரிக நிலையில், குறிப்பிற்பெறப்பட அவர்கள் வகை செய்திருந்தனர். பண்டைய மரபின்படி ஓர் ஆடவனுக்கு இடப்புறத்தில் ஒருத்தி இருந்தால், அவள் அவனுடைய மனைவி என்று நாம் குறிப்பாகத் தெரிந்து கொள்ளலாம். சகோதரிகளோ பிறரோ ஆயின் அவர்கள் வலப்பக்கம் இருப்பர். இம்மரபினால் ஒருவருக்கொருவர் உள்ள உரிமையினைப் பிறர் எளிதில் கருதி உணர்ந்து கொள்ள வாய்ப்புண்டு. மனைவி இடப்பக்கத்திற்குரியவளாகக் கொள்ளப் பெற்றமை, அப்பக்கத்திலேயே ஆடவனின் இருதயம் அமைந்திருப்பது பற்றியே யாகும். ''என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே'' என்பது சங்கப் பாடல். உமையம்மையார் சிவபெருமானின் இடப்பக்கத்தில் வீற்றிருந்தருளுதல் காணலாம். தெய்வயானையம்மை முறைப்படி மணந்து கொள்ளப்பெற்ற முதல் மனைவியாதலின், அவள் இடப்பாகத்திற்குரியவள் ஆயினள். வள்ளியம்மை களவு மணத்திற்குரியவளாகப் பரிபாடல் முதலிய நூல்கள் பலவும் கூறுதலின் அவள் வலப்பக்கத்திற்கு உரியவள் ஆயினர். ''அம்பிகையை இறைவன் உலகறியத் திவேட்டமை, கலை நவின்ற பொருள்கள் எல்லாம் கலங்காமையின் பொருட்டே'' என்று, மணிவாசகர் அருளிச் செய்திருத்தலால், இன்னோரன்ன உலகியற் செய்திகளும், இறைவனின் திருவுருவ அமைப்புக்களில் நுட்பமாக அமைத்து விளக்கப்படுகின்றன என்று, நாம் உணர்தல் வேண்டும். வேறு வழிகளில் இவற்றிற்கு விபரீதக் கருத்துக்கள் கொண்டு நாம் மயங்குதல் கூடாது.



> உலைப்படும் மெழுக தென்ன
> உருகியே ஒருத்தி காதல்
> வலைப்படு கின்றான் போல
> வருந்தியே இரங்கா நின்றான்;
> கலைப்படு மதியப் புத்தேள்
> கலங்கலம் புனலில் தோன்றி
> அலைப்படு தன்மைத் தன்றோ?
> அறுமுகன் ஆடல் எல்லாம்!
>
> —கந்தபுராணம்

### ஆண்மையும் அருளும் :

ஒரு மனிதன் ஆண்மையும் அருளும் உடையனாதல் வேண்டும். ஆண்மையிருந்து அருள் இல்லாதவன் முரடனாவான். அருளிருந்து ஆண்மையில்லாதவன் கோழையாகிவிடுவான். ஆதலின் ஆண்மையும் அருளுமாகிய இரண்டும், நமக்கு மிகவும் இன்றியமையாதவை. முருகன் ஆண்மையுடையவனாய்ச் சூரபதுமனை வெற்றி கொண்டு, தெய்வயானையை மணந்தருளினான் அருள் உடையவனாய் மிகவும் தாழ்ந்து எளிவந்து வள்ளியம்மையை மணந்தருளினான்,

### காதலும் கடமையும் :

மனித வாழ்க்கையில் நிகழும் உணர்ச்சிகள் பல. அவற்றுள் காதல் உணர்ச்சியும், கடமை உணர்ச்சியும், மனித வாழ்க்கையை வளப்படுத்திச் சிறப்புறுவிக்கின்றன. நம்மில் ஒரு சிலருக்குக் காதல் உணர்ச்சி மட்டுமே மிகுதியாக இருப்பதுண்டு: கடமை உணர்ச்சி அவ்வளவாக இருப்பதில்லை. வேறு சிலருக்குக் கடமை உணர்ச்சியே மிகுந்து ஓங்கியிருக்கும்; காதல் உணர்ச்சி கரந்து குறைந்திருக்கும். இவ்விரு திறமும் ஒருவகையிற் செவ்விய அல்ல. இவ்விரண்டும் இருவகை எல்லைகள். ஆதலின் இவைகள் ஒன்றற்கொன்று சமமாக ஏற்றபடி இருத்தல் வேண்டும். எனினும், இவ்விரண்டனுள்ளும் காதல் உணர்ச்சியினைவிட, ஒருவகையிற்

கடமை உணர்ச்சிக்கே முதலிடம் தருதல் வேண்டும். முருகனின் கடமை உணர்ச்சிக்குத் தெய்வயானையும், காதல் உணர்ச்சிக்கு வள்ளியம்மையும் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றனர் எனலாம்.

## தெய்வயானையின் சிறப்பு :

கடமையுணர்வு மிக்கவர்கள் மிகவும் அடக்கமாக இருப்பர். ஏனையோரை முன்னிட்டு வைத்து, அவருக்குத் தாம் பின்னிருப்பர். தெய்வயானையார் அத்தகையவர். முருகனின் துதிப்பாடல்களுள் வள்ளியம்மையே பெரிதும் போற்றிப்புகழப்பெறுவர். சிறுபான்மையாகவே தெய்வயானையார் துதிநூல்களில் குறிக்கப் பெறுதல் மரபு. இல்லறமாகிய கற்பக மரத்துக்கு ஆணிவேர் போன்றவர் மனைவியர். ஆணிவேர் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மறைந்திருந்தே, மரம் செழித்தோங்கி வளரச் செய்யும். அதுபோலவே ஆணிவேர் போன்ற மனைவியர், தாம் அடக்கமாகவே மறைந்திருந்து செயற்பட்டு, இல்லறமெனும் நன்மரம் தழைத்தோங்க உழைத்து வருவர். அத்தகையதொரு நிலையினைத் தெய்வயானையம்மையார் பால் காணலாம்.

சிறியவர்களுக்கு விட்டுக்கொடுத்து, அவர்களுக்கு அன்புடன் உதவி, அவர்களைப் பல்லாற்றானும் சிறப்பித்து வாழச் செய்வது. பெரியவர்களின் இயல்பு. ஆதலின் தமக்குப் பின்வந்த வள்ளியம்மையார்க்கே எல்லாச் சிறப்புக்களும், புகழ்ச்சிகளும் அமையும்படி இசைந்து, அவருக்கே ஒருவகையில் முதன்மை அளித்து ஏற்றம் நல்கி நிற்பது, தெய்வயானையம்மையாரின் சிறப்பியல்பு எனலாம்.

## வள்ளியம்மையின் மாட்சி :

ஒப்புயர்வற்ற சிறந்த பெருமகன் ஒருவன், உயர்ந்தவர்கள் பலரும் போற்றத் தலைமை நிலை பெற்று விளங்குதல் வேண்டும். அதனோடு தாழ்ந்தவர்களுக்கும் இரங்கி எளிவந்து, அவருடன் கலந்து பழகித் தண்ணளி புரிபவனாகத் திகழ்தல் வேண்டும். முருகன் தெய்வயானை அம்மையை மணந்ததனால், உயர்ந்தவர்கள் உவந்தேத்தும் சிறப்புடையவனாதல் தெளிவு. வள்ளியம்மையை விரும்பி மணந்ததனால், அப்பெருமான் ஏழை எளியவர்களுக்கும் தாழ்ந்து எளிவந்து கலந்து பழகித் தண்ணளிபுரியும் தன்மையனாதல் வெளிப்படும்.

இறைவனுக்குப் பரத்துவம் சௌலப்பியம் என்னும் இருவகைக் குணங்களும் இன்றியமையாதனவாக நூல்கள் கூறும். பரத்துவத்திலும் சௌலப்பியமே இறைவனுக்குப் பெரிதும் சிறப்பு அளிப்பதாகும். முருகன் தெய்வயானையை மணந்தது பரத்துவம் (மேன்மை). வள்ளியை மணந்தருளியது சௌலப்பியம் (எளிமை).

''இறைவன் தன் அடியவர்கள்பால் செய்யும் அருளின் சிறப்பு, உலகில் ஓர் ஆண்மகன் ஒரு பெண்மகளிடம் கொள்ளும் காதலன்பைப் போன்றதாகும். இறைவன் தன் அடியவர்களை நேசிக்கும்திறன் மிகச் சிறந்த ஓர் அரசப் பெருமகன், மிகவும் எளிய ஓர் ஏழைக்குடி மகளைக் காதலிப்பது போன்ற இயல்பினது. அரசன் அக்குடிமகளைத் தன் நிலைக்கு உயர்த்துதல் ஒல்லாது, ஏனெனில், அங்ஙனம் செயின் அவள் தனக்கே உரிய நிலையையும் பண்பையும் இழந்து குன்றிப் போவாள். தனது அரச இயல்புகள் எல்லாம் பொலியச் செல்லின், அவ் எளிய ஏழைக்குடிமகள் மிகவும் அச்சங்கொண்டு நடுங்கி அயர்ந்து மறைந்து கொள்வாள். அதனால் அவன் தன்னை மிகவும் எளியவனாக்கிக் கொண்டு, தான் விரும்புகின்ற ஏழைப்பெண், தன்னுடன் சமநிலையில் கலந்து பழகிக் காதலிக்கும் வாய்ப்பைப் பெறுவதற்கே ஏக்கற்று முயல்வான்''[3] என அறிஞர் ஒருவர் கூறியிருப்பது, இங்கு நாம் அறிந்து இன்புறற்பாலது.

முருகன் தன் அன்பர்களிடம் அவர்களினும் மிக்க அன்புடையவனாக விளங்குகிறான்; தன் அடியவர்களின் குற்றங்களையும் குணமாகக் கொண்டு மகிழ்கின்றான்; தன் நிலையில் அரியனும் பெரியனுமேயாயினும், முருகன் தனது அடியவர்களுக்கு மிகவும் தாழ்ந்து எளிவந்து

தண்ணளி புரிந்து, அவர்களை ஆட்கொள்ளு கிறான்; தன்னை அடைவதற்கு அடியவர்கள் கொள்ளும் ஆர்வத்தினும், தான் அடியவர் களைச் சேர்வதற்கு மிகவும் விதுவிதுத்துத் துடிக்கும் பேரருட் பெற்றியுடையவனாய்த் திகழ்கின்றான்—என்றாற் போலும் அரிய பல உண்மைகளை வள்ளியம்மை திருமணவரலாறு உணர்த்திக்கொண்டுள்ளது.

## ஆட்பாலவர்க்கு அருளும்வண்ணம் :

இறைவன் தன் அடியவர்களை இருவகை களில் ஆட்கொள்ளுகின்றான். அடியார்கள் சிலர் இறைவனின் திருவடிகளில் தாமே அடைக்கலம் புகுந்து, அவற்றைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுகின்றனர். வேறு சிலரை இறைவன் தானே சென்று, பல வகைகளில் முயன்று அவர்களைப்பற்றிப் பிடித்து ஆட்கொண்டு அருளு கின்றான். இவ்விரு திறநிலைகளையும் நாம் இயற் கையுலகிற்கூடக் காணலாம். குரங்குக்குட்டி தன் தாயினைத்தானே சென்று விடாப்பிடியா கப் பற்றிக்கொண்டு வளர்கின்றது. பூனையின் குட்டியோ, தன் தாயினால் வாயிற்கவ்விஎடுத் துச்சென்று, தக்க இடங்களில் வைத்து ஏற்ற பெற்றி காக்கப்படுகின்றது. இவ்விரண்டை யும் முறையே 'மர்க்கட நியாயம்' 'மார்ச்சால நியாயம்' எனச் சமய தத்துவ நூல்கள் கூறும்.

சூரசம்மாரத்திற்குப் பின்னர், திருப்பரங் குன்றத்தில் எழுந்தருளியிருந்த முருகனை, மேரு மலையிலிருந்த் தெய்வயானை, தானேதேடிக் கொண்டு வந்து சார்ந்து மணந்து கொண்ட னள். இது மர்க்கடநியாயம். முருகப்பெருமான் தானே வள்ளியம்மையைத் தேடிச் சென்று அவள்பால் பல திருவிளையாடல்கள் புரிந்து, அவளைக் களவு முறையில் எடுத்துச்சென்று மணம் புரிந்து கொண்டான். இது மார்ச்சால நியாயம். "ஆட்பாலவர்க்கு அருளும் வண்ண மும் ஆதிமாண்பும்கேட்பான் புகில்அளவில்லை" எனத் திருஞானசம்பந்தர் பாடியதற்கேற்ப இறைவன் தன் அடியவர்களை ஆட்கொண்டரு ளும் வண்ணம் பல திறப்படும். அவற்றுள் தலை சிறந்த இருபெருந்திறத்தினைத் தெய்வ யானை, வள்ளியம்மை திருமணங்கள் குறிக்கின் றன எனலாம்.

## திருமுருகாற்றுப்படை:

தெய்வயானை முருகனின் கிரியா சக்தி, வள்ளியம்மை இச்சா சக்தி. "மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்" என்னும் திருமுருகாற் றுப்படை வரிக்கு, "மறக்கற்பில்லாத அறக் கற்பினையும், ஒளி பொருந்திய நுதலினையுமு டைய இந்திரன் மகள் தெய்வயானையார்கணவர்; இப்பெயரை முற்கூறினர் படைத்தற்கும் காத்தற்கும் உரிமை தோன்ற" என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதி இருக்கும் உரை விளக்கம் இங்கு அறிதற்பாலது.

இவ்வாறே, "குறவர் மடமகள் கொடி போல் நுசுப்பின் மடவரல் வள்ளியொடுநகை அமர்ந்தன்று" எனவரும் வரிகளுக்கு, அவ் உரையாசிரியர் "காம நுகர்ச்சி இல்லாத முருகன், இங்ஙனம் வள்ளியம்மையோடு நகை அமர்ந்தான், உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கு என்று உணர்க" என்று எழுதியிருப்பது நாம் பெரிதும் சிந்தித்து உணர்தற்குரியது.

## முத்திக்கனி தரும்முருகன் :

கடவுள் ஒருவகையிற் கருத்துப்பொருள், அவருக்கு வடிவமும் வண்ணமும் இல்லை. எனி னும் நம் முன்னோர்கள் அவரைக் கருதி யுணர்ந்து, கண்டு அனுபவித்து, அவருக்கு வண்ணமும் வடிவமும் பிறவும்அமைத்து ளக்கி

(3) "Kierkegaard describes the encounter in terms of a love affair. He compares the revelation of the divine love to a human courtship whereby a king would woo a peasant girl. He cannot raise her to his own rank, for this would cause her to cease to be herself. He cannot come to her in all his own splendour, for this would cause her to hide from him. So he chooses to come to her in the form of great humility, seeking equality only with the one he loves."

—Pauline, M. Webb,
We Believe in God, p.116

யுள்ளனர். அம்முறையில் தெய்வயானையை அமுதவல்லி என்றும், வள்ளியைச் சுந்தரவல்லி என்றும் நூல்கள் கூறுகின்றன. இருவரையும் நாம் ஏற்ற பெற்றி உணர்ந்து தியானித்துப் போற்றுவதற்காகத் தெய்வயானை பொன்னிறம் வாய்ந்தவள் என்றும், வள்ளியம்மை பசுமை நிறம் உடையவள் என்றும், பெரியோர்கள் குறிப்பிட்டருளியுள்ளனர். தெய்வயானையின் கையிலிருப்பது செந்தாமரை மலர். வள்ளியம்மை கையில் விளங்குவது செங்கழுநீர் மலர். இங்ஙனம் தெய்வயானையும், வள்ளியம்மையும் முருகனின் இருபுறத்தும் விளங்குதல் ''கங்கையும், யமுனையும் கலை கடலுடன் சேர்ந்தாற் போலவும்'' ''கற்றையங்கதிர் வெண்திங்கள் இருந்துழிக்கனலிப்புத்தேள் உற்றிடும்தன்மை'' போலவும், இருப்பதாகக் கச்சியப்பசிவாச்சாரியார் கந்தபுராணத்தில் கவினுறப் பாடுகின்றார். மேலும் அவர்,

கல்லகம் குடைந்த செவ்வேற்
கந்தன் ஓர் தருவ தாகி,
வல்லியர் கிரியை ஞான
வல்லியின் கிளையாய்ச் சூழப்,
பல்லுயிர்க் கருளைப் பூத்துப்,
பவநெறி காய்த்திட்டு, அன்பர்
எல்லவர் தமக்கும் முத்தி
இருங்கனி உதவும் என்றும்!

—கந்தபுராணம்

என்னும் பாடலால், ''தெய்வயானையாகிய ஞான சக்தியும், வள்ளியம்மையாகிய கிரியா சக்தியும் கிளைகளாகச் சூழ்ந்திருக்க, அருளாகிய மலர்களைப் பூத்து, இறப்பும்பிறப்பும் போகக் காய்த்து, அன்பர்கள் எல்லோருக்கும் முக்தியாகிய இனிய நறுங் கனியினைஅளிக்கின்ற கற்பக மரம் ஆக முருகப் பெருமான் விளங்குகின்றான்''எனச்சிறப்பித்துப்பாடியருள்கின்றார்.

### முடிவுரை :

அத்தகைய முருகப்பெருமானை, வள்ளி தெய்வயானையருடன், இக்கந்தர் சஷ்டிவிழாப் புனித நாளில், நாம் அனைவரும் அன்புடன் பணிந்து போற்றி வணங்கி, நலம் பலவும் பெற்று உய்வோமாக !

—ஆசிரியர்

## மதிப்புரை

### (4) ஸ்ரீ ஹநுமத் ஸஹஸ்ரநாம அஞ்சலி:—

இது திருப்பாதிரிப்புலியூர் கெடில (கெருட) நதிக்கரையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வீர ஆஞ்சனேய சுவாமி கோயில் அர்ச்சகர் திரு. எஸ்.இராஜகோபாலாச்சாரியார் அவர்களால் வெளியிடப்பெற்றது. விஷ்ணுஸஹஸ்ரநாமத்திற்குச் சங்கரர், மத்வர், பட்டர், ஆகியோர்களின் சிறந்த பாஷியங்கள் உள்ளன. லலிதா சஹஸ்ரநாமத்திற்குப் பாஸ்கராசாரியரின் சௌபாக்கிய பாஸ்கரம் என்னும் சிறந்த உரையும் பிறவும் உள்ளன. அங்ஙனம் ஸ்ரீ ஹநுமத் ஸஹஸ்ரநாமத்திற்கு ஓர் உரையில்லாத குறையினை இந்நூல் போக்குகின்றது. பொய்கைப்பாக்கம் கந்தாடை வாதூலஎஸ்.இராஜகோபாலசர்மா அவர்களும், குஞ்சிமேடு வடமொழிப்புலவர் ஸ்ரீ சௌனகராஜ நரசிம்ம சர்மா அவர்களும் இந்நூலுக்குத் தமிழில் எளிய இனிய உரை எழுதியுள்ளனர். கிடைக்குமிடம்: ஸ்ரீ ஆஞ்சனேயசுவாமி தேவஸ்தானம், திருப்பாதிரிப்புலியூர், கடலூர்-2. விலை. ரூ.1-50.

—ஆசிரியர்.

# ஸ்ரீவைஷ்ணவத் திவ்விய தேசங்கள்

(முற்றொடர்ச்சி)

ந. ரா. முருகவேள், M. A., M. O. L

## 2. திருக்கோட்டியூர் :

திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை காரைக்குடி மானமதுரை இருப்புப்பாதையில், திருமயம் என வழங்கும் தலத்திலிருந்து இருபத்தொரு கல். மூலவர் உலகமெல்லலணையான். உற்சவர் சௌமிய நாராயணன். திருமாமகள் நாச்சியார். அஷ்டாங்கவிமானம். தேவபுஷ்கரிணி. பெருமாள் நின்றும், இருந்தும் நடந்தும் கிடந்தும் கூத்தாடியும் அருளிய தலம். இந்திரனுக்கும், கதம்ப முனிவருக்கும் பிரத்தியட்சம். ''ஏதம் ஒன்றும் இலாத வண்மையினர்கள் வாழ் திருக்கோட்டியூர் நாதனை நரசிங்கனை நவின்று ஏத்துவார்கள் உழக்கிய பாததூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே''. என்பது பெரியாழ்வார் பாசுரம். பேயாழ்வார் பூதத்தாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம். கிழக்கே திருமுக மண்டலம். சயனத்திருக்கோலம். கருப்பக்கிரகம், நான்கு தளங்களாக உள்ளது. தரை மட்டம் சயனக்கோலம், மேல்மாடி நின்ற திருக்கோலம். அதன்மேல் வீற்றிருந்த திருக்கோலம். தரைமட்டத்தின் கீழ் நடன கிருஷ்ணர்கோலம். பிராகாரத்தில் வடபுறம் இரணியனை ஒடிப்பிடிப்பதுபோலவும், மார்பைப் பிளப்பது போலவும், நரசிங்கப்பெருமானின் திருவுருவங்கள் இரண்டு உள்ளன. இரணியாசுரன் மூவுலகத்தையும் ஆட்சி செய்த காலத்தில் தேவர்கள் அவ்வசுரனை ஒழித்தற்குரிய உபாயத்தை ஆராய்வதற்கு ஏற்றதாயும் அசுரர்களின் தொல்லையில்லாததாயும் உள்ள இடம் ஒன்றினைத் தேடித்திரிகையில், கதம்ப முனிவரின் சாபத்தால் தீயவர் ஒருவரும் வருதல் கூடாது என்று நியமிக்கப்பட்டிருந்த இந்தத் தலமே தேவர்கள் தமக்குள் கூட்டமாகக் கூடி ஆராய்வதற்கு ஏற்றதாக இருந்த காரணம் பற்றிக் கோட்டியூர் (கோஷ்டீபுரம்) என்று பெயர் பெற்றது. எம்பெருமானார் என்னும் இராமானுசர் திருக்கோட்டியூர் நம்பிகளிடத்தில் திருமந்திரத்தை உபதேசம் செய்யப் பெற்று, விமானத்தின்மீது ஏறியிருந்து எல்லோரும் கேட்டு உய்வுபெறுமாறு உரத்துக் கூறி வெளியிட்டருளிய புனிதத் தலம். எம்பெருமானாரின் திருவுருவம் கோபுரத்தின் மேலே இந்நிகழ்ச்சிக்கு அடையாளமாக வைக்கப்பெற்றிருக்கிறது.

## 3. திருமெய்யம் :

இது திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கே 46 கல் தொலைவில் உள்ளது. சத்திய கிரி அல்லது திருமெய்யமலை என வழங்கும். திருமெய்யம் என்பது மருவித் திருமயம் என வழங்கி வருகிறது. சத்தியதேவதை திருமாலை நோக்கித் தவம்புரிந்ததலம். ஆதலின் சுவாமிக்குச் சத்தியகிரிநாதர், சத்தியமூர்த்தி (மெய்

யப்பன்) எனப்பெயர்கள் வழங்கும். உய்ய வந்த நாச்சியார், சத்தியகிரி விமானம். சத்திய தீர்த்தம், கதம்ப புஷ்கரிணி. பலாவிருட்சம். கிழக்கே திருமுக மண்டலம். ''சிலையாளா, மரம் எய்த திறலாளா, திருமெய்யமலையாளா, நீயாள வளையாள மாட்டோமே'' என்பது கலியன் பாசுரம்.

## 4. திருப்புல்லாணி :

இராமநாதபுரம் நிலையத்திற்குத் தெற்கே ஆறு கல் தூரம். தர்ப்பசயனம் எனவும் வழங்கும். கல்யாண ஜகந்நாதன், தெய்வச் சிலையார், கல்யாண நாச்சியார், கல்யாண விமானம், ஏமதீர்த்தம், சங்கரதீர்த்தம், அசுவத்தவிருட்சம், கிழக்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். புல்லாரணிய மகரிஷிக்கும், அசுவத்த நாராயணனுக்கும். கடலரசனுக்கும் பிரத்தியட்சம். கோயிலின் பிராகாரத்தில் சக்கரவர்த்தித் திருமகன் ஆகிய இராமபிரான் தர்ப்பைப் புல்லில் சயனத்திருக் கோலமாகக் காட்சி தருகின்றார். சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனை வெல்லுவதன் பொருட்டு இராமபிரான் வானர சேனையுடன் புறப்பட்டுச் சென்று தென்கரையை அடைந்து கடலைக்கடக்க உபாயம் சொல்ல வேண்டுமென்று கடலரசனாகிய வருணனைப் பிரார்த்தித்துத் தர்ப்ப சயனத்தில் படுத்து ஏழு நாளாகவும் பிராயோபவேசமாகக் கிடந்த தலம். ஆதலின் இதற்குத் தர்ப்ப சயனம் எனவும், புல்லணை எனவும் பெயர்கள் ஏற்பட்டன. புல்லணை என்பதன் திரிபே புல்லாணி என வழங்கி வருகிறது.

## 5. திருத்தண்கால் :

சிவகாசி நிலையத்திலிருந்து இரண்டு கல் தொலைவில் உள்ளது. தண்காலப்பன். அன்ன நாயகி, அனந்தநாயகி, அமிர்தநாயகி, சாம்பவதி என நாச்சிமார்கள் நால்வர். தேவசந்திர (ஹம்ச) விமானம், பாபவிநாசதீர்த்தம். கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக் கோலம். சல்லியபாண்டிய மன்னனுக்கும், ஸ்ரீ வல்லபனுக்கும், புலிக்கும் பிரத்தியட்சம். பெரிய திருவடி, சர்ப்பமும் அமிர்தகலசமும் ஏந்திய கைகளோடு விளங்குகின்றார்.

## 6. திருமோகூர் :

மதுரைக்குக் கிழக்கே ஏழு கல். இது மோகனபுரம் எனவும் வழங்கும். சுவாமியின் பெயர் காளமேகப் பெருமாள். ''தாள தாமரைத் தடமணிவயல் திருமோகூர் நாளும் மேவி நன்கு அமர்ந்து நின்று அசுரரைத் தகர்க்கும், தோளும் நான்குடைச் சுரிகுழல் கமலக்கண் கனிவாய்க் காளமேகத்தையன்றி மற்றொன்று இலம் கதியே'' என்பது நம்மாழ்வார் பாசுரம். கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். திருமோகூர் வல்லிநாச்சியார், மேகவல்லி நாச்சியார். கேதகி விமானம். க்ஷீராப்தி புஷ்கரிணி. பிரமன் இந்திரன் ஆகியோருக்குப் பிரத்தியட்சம். திருப்பாற்கடலில் தோன்றி அமிர்தத்தை அசுரர்கள் கவர்ந்து கொள்ளாதபடி, பெருமாள் மோகினி வடிவம் கொண்டு அசுரர்களை மயக்கி, மோகம் கொள்ளச்செய்து, தேவர்களுக்கு அமிர்தத்தை வழங்கி அருளிய தலம். மோகம் செய்வித்த ஊராதல் பற்றி மோகூர் எனப்பெயர் பெற்றது. இத்தல வரலாற்றை ''நாம் அடைந்த நல்லரண் நமக்கென்று நல்லமரர், தீமை செய்யும் வல்லசுரரை அஞ்சிச்சென்று அடைந்தால், காமரூபம்கொண்டு எழுந்து அளிப்பான் திருமோகூர், நாமமே நவின்று எண்ணுமின் ஏத்துமின் நமர்காள்'' என்று நம்மாழ்வார் தமது பாசுரத்திற் குறிப்பிட்டிருத்தல் காணலாம். ஸ்ரீ ஆளவந்தார் திருவடியைப் பற்றி ஈடுபட்டிருந்த பக்தர்களாகிய திருமோகூரப்பன், திருமோகூர் நின்றார் என்பவர்கள் இத்தலத்தில் தோன்றியவர்களேயாவர்.

## 7. திருக்கூடல் :

இது தென்மதுரைக்குப் பெயர். இது மதுரை நிலையத்திலிருந்து அரைக்கல் தொலைவிலுள்ளது. மதுரைக் கூடலழகர் கோயில் என வழங்கும். புலவர்கள் கூடித் தமிழ் ஆராய்ந்த இடமாதலின் மதுரைக்குக் கூடல் என்பது ஒரு பெயராயிற்று. இங்குள்ள கூட

லழகருக்குக் கிழக்கே திருமுக மண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். வகுளவல்லி, மரகத வல்லி, வரகுணவல்லி, மதுரைவல்லி நாச்சியார் எனத் தாயார் பெயர்கள் வழங்கும். அஷ்டாங்க விமானம். ஏம புஷ்கரிணி, சக்கரதீர்த்தம். பிருகு மகரிஷிக்கும், சௌனகர் முதலிய முனிவர்களுக்கும் பெரியாழ்வாருக்கும் பிரத்தியட்சம். விஷ்ணு சித்தர் என்னும் பெரியாழ்வார் மதுரைமாநகரைத் தலைநகராகக்கொண்டு அரசாட்சி புரிந்துவந்த வல்லபதேவ பாண்டியனது வேண்டுகோளின்படி, பரதத்துவ நிர்ணயம்செய்ய, அதற்கு மன்னவன் மிகவும் மனமுவந்து அவரை யானையின்மேல் ஏற்றி மதுரை மாநகரை வலம் செய்வித்தான். அப்போது தன் புத்திரன் பவனி வருதலைக்கண்டு மகிழ்ச்சியடைகின்ற தாய் தந்தையர்களைப் போன்று பெருமாள் தனது பக்தராகிய பெரியாழ்வார் திருவுலாக் கொள்ளுதலைக் கண்டு மகிழ்வதற்குப் பிராட்டியுடனே வானத்தில் தேவர்கள் புடை சூழ எழுந்தருளினன். அக்கருட வாகனனது எல்லையற்ற பேரழகினைக் கண்டு, அதில் ஈடுபட்டு ஆழ்ந்து பரவசராய் அன்பு மேலிட்டு, இத்திருவழகுடைய திருமேனிக்கு எவ்வாற்றாலும் ஒரு குறையும் நேராதிருத்தல் வேண்டும் என்று வாழ்த்துரை கூற முற்பட்டு யானை மணிகளையே தாளமாகக் கொண்டு பெரியாழ்வார் திருப்பல்லாண்டு என்னும் திவ்வியப் பிரபந்தத்தைப் பாடி அருளினார். இங்ஙனம் ஆழ்வார் பாடும்படி அவருக்குச் சேவை சாதித்தருளிய இறைவன், இக்கோயிலின் அஷ்டாங்க விமானத்தின்மீது எழுந்தருளியுள்ளார். அவரை 'வையந்தாவிய பெருமாள்' என்று பக்தர்கள் போற்றுவர்.

## ஸ்ரீ வில்லிபுத்தூர் :

விருதுநகர் தென்காசிக் கிளை இருப்புப் பாதையில், ஸ்ரீவில்லிபுத்தூர் நிலையத்திலிருந்து ஒரு கல் தூரம். வில்லி என்பவன் அமைத்த புதியவூர் ஆதலின், வில்லிபுத்தூர் எனப்பெயர் பெற்றது. வடபத்திரசயனர், ஆலிலைப்பள்ளிப் பெருமாள், அரங்கமன்னார். கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். ஆண்டாள், கோதைநாச்சியார். திருமுக்குளத் தீர்த்தம், சௌமிய விமானம். பெரியாழ்வாருக்கும், மண்டூகமுனிவருக்கும் பிரத்தியட்சம். பெரியாழ்வார், ஆண்டாள் ஆகிய இருவரும் அவதரித்த திருத்தலம்.

## 9. திருக்குருகூர் :

இது ஆழ்வார் திருநகரி என வழங்கும். திருநெல்வேலி திருச்செந்தூர்க் கிளைப் பாதையில், ஓர் இருப்புப்பாதை நிலையம். நிலையத்தினின்று ஒரு கல் தொலைவில் கோயில் உள்ளது. தவம் செய்வதற்கு ஏற்ற சிறந்த ஓர் இடத்தைத் தேடிக்கொண்டிருந்த பிரமதேவனுக்கு அசரீரி இவ்விடத்தைக் காட்டி (கா-பிரமனே, குரு-செய்) என்று கட்டளையிட்ட இடமானபடியால் இவ்வூருக்குக் குருகூர் எனப் பெயர் அமைந்தது. ஆதிநாதப்பெருமான், பொலிந்து நின்ற பெருமான், ஆதிப்பிரான். ஆதிநாதவல்லித் தாயார். கோவிந்த விமானம். தாமிரபரணி நதி, பிரம்ம தீர்த்தம். கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். நம்மாழ்வார் திருவவதாரம் செய்தருளிய தலம். பிரமன், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் ஆகியோருக்குப் பிரத்தியட்சம். இங்குள்ள திருப்புளிய விருட்சத்தின் அடியில் விளங்கும் நம்மாழ்வார் சந்நிதி மிகவும் புகழ் ஓங்கித் திகழ்கின்றது. "குன்றம்போல் மணிமாடம் நீடு திருக்குருகூர் அதனுள் நின்ற ஆதிப்பிரான் நிற்க மற்றைதெய்வம் நாடுதிரே" என்றும், "இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும், சாக்கியரும் வலிந்து வாது செய்வீர்களும் மற்றும் நும் தெய்வமுமாகி நின்றான், மலிந்து செந்நெல் கவரி வீசும் திருக்குருகூர் அதனுள் பொலிந்து நின்ற பிரான் கண்டீர். ஒன்றும் பொய்யில்லை போற்றுமினே" என்பன நம்மாழ்வார் பாசுரங்கள்.

(தொடரும்)

— ஆசிரியர்.

# திருமுறைகள் செய்த கலைப் புரட்சி

(வித்துவான் திரு. நடேச நாராயணன்)

[சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில், திருக்கழுக்குன்றத்தில் நிகழ்ந்த மணிவாசகர் விழாவில்; மதுரை ஆதீனத் தலைவர் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருமுன்னிலையிலும், யாழ்ப்பாணம் தவத்திரு சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருமுன்னிலையிலும், 'திருக்கோயில்' ஆசிரியர் புலவர் திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L. அவர்கள் தலைமையிலும், நடைபெற்ற கவியரங்கத்திற் கலந்து கொண்டு, பாடிய கவிதை. (18. 6. 69). —ஆசிரியர்.]

**மதுரை ஆதீனத் தலைவர் :**

1. சிறந்திடு ''சிந்தனையாளர் கேள்விக்குத்
தெளிவிளக்கம்'' செப்பும் நன்னூல்,
''இறந்தவர்கள் வாழும்நிலை பேசுமுறை''
என்னும்எழில் நூல், இணைந்து தோன்றும்
தரமுடைய ''விக்ரகஆராதனையை
விளக்கிடும்நூல்'', தகுதி மிக்க
அறமுரைக்கும் ''சமயந்தான் மனச்சாந்தி
நல்கும்'' எனும் அருள்நூல் தந்தோர் ;

2. திறமுடனே ''மரணபயம் தீரும்வழி''
செப்பிடும்நூல், சிந்தை வாழும்
உறவுடைய ''கடவுளுக்கும் உயிர்களுக்கும்
உள்ளஉறவு உணர்த்தும் சீர்நூல்,''
மறவாமல் யாத்தளித்த மதுரைநகர்ச்
சம்பந்தர் மடத்தை ஆளும்
துறவோராம் தவச்சோம சுந்தரர்தம்
திருத்தாள்கள் துதித்து வாழ்வாம் !

**கவியரங்கத் தலைவர் :**

3. சித்தாந்தத் தமிழ்த்துறையில் சிறப்பறிவும்,
முச்சங்கம் சேர்த்துத் தந்த
வித்தான தமிழ்நூலிற் பேரறிவும்,
இலக்கணத்தில் வியக்கும் வீறும்,
முத்தான தமிழ்க்கவிதை யாத்தளிக்கும்
பெருந்திறனும், முதல்வன் தன்பால்
பத்தியுடன் தமிழ்ச்சைவத் தொண்டுணர்வும்,
நல்லொழுக்கப் பண்பும் வாய்ந்தோர் !

4. சத்தான ''தேனூறு செஞ்சொல்லின்
திருக்கோவை'' சார்ந்த நூலும்,

வித்தகத்துத் ''தமிழ்ஞான சம்பந்தர்''
எனும்நூ லும், விளங்கு கின்ற
சொத்தான ''இலக்கணத்திற் கற்பனைகள்''
''தருக்கநூல்'' சூழ்ந்த ளித்த
உத்தமர்நன் முருகவேள் 'திருக்கோயில்'
ஆசிரியர்க்கு உரைத்தேன் நன்றி !

## 5. அவையடக்கம் :

அருளுடைய கவியரங்கத்
தனித்தலைவர் ஏறே !
அவைசார்ந்த சான்றோரே !
பெரியோரே ! நன்றும
பொருளுடைய செல்வர்களே !
அன்புறு தாய்மாரே !
பொலிவுடைய இளைஞர்காள் !
நனிவணக்கம். ஈண்டுத்
திருமுறைகள் செய்திட்ட
கலைப்புரட்சி பற்றிச்
செப்பிடுவேன் கவியாலே,
செவிசாய்ப்பீர் சற்றே !
தெருளுடையீர் ! தெருள் அடையாச்
சிறியேனின் பாட்டில்
சிறுமையுறு குறைநீக்கி
நிறைகொள்க நன்றே !

## 6. சமயநெறிப் புரட்சி :

தீயினைக் கதிரைத் தெய்வமாய்க் கொண்ட
தெளிவிலார் தம்மைத் தேற்றி,
ஆயஅப் பொருள்கள் செயற்பட ஆற்றல்
அளிப்பவன் ஒருவன் உண்டு :
தாய்எனத் தாங்கும் தன்மையன் அவனே
சால்பொளிர் தெய்வம் என்றே,
நேயமாய்ப் புரட்சி நிகழ்த்திய துணர்த்தும்
நிகரிலாத் திருமு றை நூலே ;

## 7. கலையின் முதன்மை :

பெண்மையது தாய்மையினல்
நிறைவெய்தும் ; பாட்டோ
பிணிக்கின்ற இசையாலே
நிறைவெய்தும் ; பேசும்
உண்மையது நன்மையினல்
நிறைவெய்தும் ; மக்கள்
உழைப்பதுவும் ஊதியத்தால்
நிறைவெய்தும் ; அந்த
விண்ணதுவோ இருசுடரால்
நிறைவெய்தும் : நல்ல
வீரமதோ வெற்றியினல்
நிறைவெய்தும் , இந்த
மண்ணதுவோ விளைச்சலினல்
நிறைவெய்து மாப்போல்,
வாழ்க்கையதோ கலையாலே
நிறைவெய்தும் கண்டீர் !

JL
82 m211, N59T
N71.13.4

## 8. கடவுளே கலைஞன்

'கலையாகிக் கலைஞானம்'
தானே யாவான் ;
காதினிக்கும் ஏழிசையாய்ப்
பயனும் ஆவான் ;
நிலையாகக் கூத்தாடும்
கூத்தன் ஆவான் ;
நிறைபெருஞ்சீர்ச் சைவத்தின்
தலைவன் என்றே
தலையான திருமுறைகள்
செப்பு மாகில் ;
தமிழ்க்கலைநற் றிறம்அவற்றுள்
சாலா தென்று;
கலைஞானம் உடையவர்கள்
செப்பு வாரோ ?
கருத்தாழக் கலைப்புரட்சி
காண்போம் வாரீர் !

## 9. கலைகளால் நன்மையே :

இசையொடு நாடகமாம்
கலைகள் எல்லாம்
இதயத்தில் ஆசைகளை
எழுப்பித் தீய
திசையுய்க்கும் என்றுபிற
சமயத் தார்கள்

செப்பியதைப் புறக்கணித்துக்,
கலைகள் தம்மால்
நிசமாக இறையடிகள்
எய்தல் கூடும்
நெறிகாட்டிப் புரட்சிசெய்த
நூல்கள், இங்கே
அசையாத திருமுறைகள்
என்று சொன்னால்,
அதைமறுப்போர் உளர்கொல்லோ!
சொல்வீர் ஆய்ந்தே!

10. இம்மைவரை புலன்கட்கே
இன்பவெறி யூட்டல்
எழிற்கலையால் எய்துபலன்
எனக்கொண்டார் சில்லோர்;
செம்மனத்தெம் அடியவரோ
அந்நிலையை மாற்றிச்,
செழுங்கலையால் புலன்களினை
இம்மைவரை யன்றி,
தம்முயிர்தான் பண்பட்டு
மறுமையி லும் இன்ப
நலம்பயக்கப், பெம்மானின்
பொன்னடியை நண்ணச்
செம்மையுடன் புரட்சிசெய்த
செயலினையே, நந்தம்
திருமுறைகள் தெளிவாகக்
காட்டிடுமால் நன்றே.

## 11. தமிழ்ப்புரட்சி:

நான்குமுதல் ஏழாம்நூற் றாண்டுவரை
களப்பிரர்கள் நாடாண் டக்கால்
ஈன்றாளை இல்லாத இளங்குழவி
எனத்தமிழ்தான் இளைத்த தெண்ணிச்
சான்றாண்மைச் சம்பந்தர் தம்பெயரில்
தமிழ்சேர்த்துத் தயங்கா தோதி
வான்றோயும் தமிழ்ப்புரட்சி செய்திட்ட
வகைஎண்ணி மகிழ்வீர் ஐயா!

## 12. கலைப்புரட்சி:

மண்ணாலே பொருள்செய்யும்
கலைஞானத் தாலே
மாண்புமிகு செயல்செய்த
திருநீல கண்டர்,
வண்ணானை அழுக்கெடுக்கும்
கலைஞானத் தாலே
ஊழ்வெல்லாம் பணிசெய்த
திருக்குறிப்புத் தொண்டர்;
பெண்ணானார் விரும்புகிற
மலர்புனையும் கலையால்
பெருந்தொண்டு செய்திட்ட
திருமுருகர் போன்றோர்,
பண்ணாப பரமனடி
பெற்றுய்ந்தார் என்றால்,
பாருலகில் இச்செயல்கள்
பெரும்புரட்சி அன்றோ!

## 13. ஆடற்கலை:

இற்செறிந்த கடமையொடு
சேய்வளர்த்துக் காக்கும்
இல்லாட்கும் இறையுணர்வே
இருத்தல்நன் றென்றே
பொற்சுண்ணம் தெள்ளேணம்
தேனேக்கம் மற்றும்
பூவல்லி அம்மானை
திருச்சாழல் என்ற
கற்புடைய மகளிர்களின்
ஆடலும் பக்தி
கலந்திடவே கவிநல்கிப்
புரட்சியினைச் செய்த
நற்றவராம் மாணிக்க
வாசகரின் நூலும்
நாம்போற்றும் திருமுறையே
என்றுணர்வீர் நன்றே.

## 14. இசைக்கலை:

ஊதுகுழல் இசைக்கலையால் உலகத்தில்
உயிர்களினை உருக வைக்கும்

சேதியினைக் கேட்டதுண்டு ; சிவனடியார்
ஆனையர் சிறப்பு மிக்க
ஊதுகுழல் இசையாலே உடையானின்,
திருவடியில் உறைந்தார் என்றால்
ஓதும்இசைக் கலையிலே அவர்செய்த
புரட்சியென உரைத்தல் தீதோ ?

## 15. கவிதைக்கலை

மொழிமாலை மாற்றோடு
மடக்கெல் லாமும்
முந்தையிலா யமகம்முதல்
ஏக பாதம்
எழுகூற்றும் இருக்கைநா
லடிமேல் வைப்பு
ஈரடி ஈரடிவைப்பு
முடுகும் ராகம்
அழிவில்லா வகையினிலே
புதுவ தாக்கி
அருமைமிகும் கவிதையெனும்
கலையில் நல்ல
வழிகாட்டிச் சம்பந்தர்
புரட்சி செய்த
மாண்புக்குத் திருமுறைகள்
சான்றே யன்றோ !

## 16. மருத்துவக் கலை

மழவன்மகள் முயலகனல்
குலைந்த போதும்,
வழுதியர்கோன் தீப்பிணியில்
துடித்த போதும்,



சென்னைத் திருமயிலை வெள்ளீசுவரர் கோயிலில் நடைபெற்ற கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர் பெருமான் திருநாள் விழாவில், நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A..B.L.,I.A.S., அவர்கள் தலைமையில், 'வாகீச கலாநிதி' திரு. கி. வா. ஜகந் நாதன், M.A., அவர்கள் உரை நிகழ்த்திச் சிறப்பித்தல் (23—10—70).

அழகன்அப்பூ தியார்
புதல்வன் விடத்திஞலே
ஆவியினை இழந்தபோதும்;
அவற்றி னின்றே
பிழைக்கவைத்த திறம்,
நீற்றல் பாட்டால் என்ருல்;
பேசுகின்ற மருந்துவமாம்
கலையில், என்றும்
வழக்கமிலாப் புரட்சியினைச்
செய்த பெற்றி,
வண்டமிழாம் திருமுறையில்
அன்ருே அம்மா !

17. நற்கலைகள் பலமலிந்த
திருமுறையாம் நூல்கள்
நயம்பயக்கும் புரட்சிபல
விளைத்தசெயல் தன்னைப்
பெற்றியுடன் இதுகாறும்
நாம்கண்டோம் ! நன்றே
பெருமைமிகு திருமுறையை
நாளும்நாம் ஓதி,
வெற்றியுடன் வாழ்க்கையினை
நடத்திடுவோம் என்றே
விளம்பிடலோ(டு) என்கவியை
நிறைவாக்கி, என்னைப்
பற்றுடன்இப் பாவரங்கில்
பங்குறச்செய் தோர்க்கும்,
பரிவுடனே கேட்டோர்க்கும்,
வணக்கமுடன் நன்றி !

(வெண்பா)

மணிவா சகப்பெருமான்
மாண்விழா தன்னை,
அணியார் திருமுறையோ
டாற்றும்—பணியாளர்,
சென்னைச் சிவனடியார்
தெய்வத் திருக்கூட்டம்
மன்னித் திகழ்க
வளர்ந்து!



சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில், சலவைக் கல்லில் செதுக்கப் பெற்ற "சிவ அஷ்டோத்தர சத நாமாவளி"யின் திறப்பு விழாவில், நமது அற நிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A , B.L., I.A.S. அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல் (30 - 11 - 70)

# சிவஞானபோதப் பொருள்நிலை

' சித்தாந்தக் கலைச்செல்வர் '
திரு. க. வச்சிரவேல் முதலியார், B A., L. T.,
திருவாவடுதுறை ஆதீனப் புலவர்

## காப்புச் செய்யுள்

இறைவன் ஆவான் இயற்கை முற்றுணர்வினன்; உணர்த்த உணர்வன உயிர்கள். பல நூல்களையும் ஒருவன் தானே முயன்று கற்பதனால் குழப்ப உணர்வே மிகும். அக்குழப்பம் நீங்கித் தெளிவுணர்வு பெறுவதற்குக் கல்லால் நிழலில் எழுந்தருளியிருந்து மெய்யுணர்வு நல்கும் சிவபெருமான் திருவருள் வேண்டும். விநாயகமூர்த்தியை வழிபடுவார்க்கு இடையூறு நீங்கி அத்திருவருள் எளிதிற் கைகூடும்.

## அவையடக்கம்

முதற்பொருளாகிய சிவத்தைத் தலைப்பட்டு உணரும் உணர்வே மெய்யுணர்வு ஆகும். அவ்வுணர்வு முதல்வனுக்கு மீளாஅடிமையாகிய தம் (உயிரின்) இயல்பை முன்னர்த் தெளிய உணர்ந்தார்க்கே வரக்கூடியது. தம் இயல்பை உணருமுகத்தால் யான் எனது என்னும் செருக்கு அற்று, முதல்வனைச் சார்ந்து உணர்வோர், அவனோடு ஒன்றிநிற்றலின், சிவமே ஆவர். அத்தகையோர் எம்மாற் செய்யப்படும் இந்நூலின் செம்மையே உணர்வர். ஆதலின், அவர் எம்மை இகழ்தல் செய்யார்.

இனி, தம்மியல்பையே உணராதவர் தலைவன் இயல்பை உணரமாட்டார்தாமே. அன்னோர், உண்மையின் ஒவ்வொரு கூற்றை ஒரு புடை அறிந்து வைத்துத் தம்முள் முரண்பட்டுக் கலாம் விளைப்பர். அவர் தம் விரிவில்லாத அறிவினால் எம்மையோ எம்நூலையோ இகழ்ந்து கூறின், அவ்விகழ்ச்சியைப் பொருட்படுத்தோம். உண்மையநுபவம் பெற்றோர் வாய்மொழிகளே நிறைமொழிகளாய்ப் பிராமாணியம் ஆகும் என்றபடி.

## முதற்சூத்திரம்

உலகம் நம் அறிவால் சுட்டியறியப்படுவது. அறிவினால் அறிந்த யாவும் அசத்தே (தோன்றி நின்றுமறைவதே)ஆகும். ஆதலால், இவ்வுலகம் முற்றும் ஒரு காலத்தில் தோன்றி, இப்போது இருப்பதாய்ப் புலனாகி, பின் ஒரு காலத்தில் காரணநிலையில் மறைந்துபோகக் கூடியது. இங்ஙனம் மாற்றமடையும் உலகை நியமித்து ஒழுங்குபட நடத்துதற்கு இயற்கை முற்றுணர்வுடைய முதல்வன் ஒருவன் இருத்தல்வேண்டும். அவன் சுட்டி அறியப்படாதவனாய், எவ்வகையான மாறுதலும் உறாத செம்பொருளாய், எல்லா உலகையும் ஒருங்கே தோற்றி, நிறுத்தி, ஒருங்கே ஒடுக்க வல்லவனாய் இருத்தல் வேண்டும். உயிர்களுக்கு அறியாமையை விளைத்து நிற்கும் மூல மலத்தின் வலி குறைதற் பொருட்டு உலகப் படைப்பையும், அவற்றின் இளைப்பாறுதல் போன்ற கன்மமல பரிபாகத்

தின்பொருட்டு அதன் ஒடுக்கத்தையும், கால வட்டத்துட்படுத்தி, அவன் செய்கின்றான். முதல்வன் தன் செயல்களைக் கரணங்களை அவாவாது தன் சத்தி சங்கற்பத்தால் செய்தலின், அவன் எத்தகைய மாறுதலும் அடைவதில்லை. முதல்வன் எல்லார் செயலையும் தன்முதன்மைக் கண் அடங்கக்கொள்ளும் ஒருவனேயாய், எல்லாவற்றிற்கும் முடிநிலைச்சார்பாக உள்ள வினை முதலாய் உள்ளவன் எனக் கருதுதல் வேண்டும்.

## இரண்டாஞ்சூத்திரம் :

முதல்வன் இவ்வுலகைத் தொழிற்படுத்தும் போது, இரும்புத்துண்டைத் தன் ஈர்ப்பு ஆற்றற் சூழலில் அகப்படக்கொண்டு இயக்கும் காந்தக் கல்லைப்போல, உயிர்களைத் தன் அருள் வெளிக்குள் அகப்படுத்தித் தொழிற்படுத்து கின்றான். இந்நிலையில், அவன் உயிர்களிற் கலந்து ஒன்றாய், பொருட்டன்மையால் தான் உயிர்களுக்கு வேறான பொருளேயாய், அவற்றை உள்நின்று செலுத்தும் தன்மையால் அவற்றோடு உடனாய் நிற்கின்றான். இங்ஙனம் முதல்வனால் ஒன்றி உடனாகிச் செலுத்தப்பெறும் உயிர்கள், தமக்குத் தோன்றாத் துணையாயுள்ள முதல்வன் செயலை அறியாமல் தாமே எல்லாஞ் செய்வதாக உணர்ந்து முயலுதலினால், அம் முயற்சியே அவற்றின் எதிர்காலத்தைக் கட்டுப் படுத்தும் வினையாக அவற்றைப் பற்றும். இங்ஙனம் அறியாமை காரணமாக வரும் இருவினை (இருள் சேர் இருவினை)க்கு ஏற்றபடி இறந்தும் பிறந்தும் வரும்படி, அவற்றை முதல்வன் தான் செய்யும் ஐந்தொழிலில் அகப்படுத்தி நடத்துவன். இஃது உயிர்களின் பிறப்பு நிலையில் உள்ளது. இங்ஙனம் தனக்கு வேறான உயிர்களைப் பற்றி நின்று நடத்துதல்பற்றி, முதல்வன், தானும் தன் சத்தியும் எனத் தன்னுள் இரு வேறுவகைப்பட நின்று உலகை நடத்துவன் என்பது கருதியுணர்தற்கு உரியது,

குறிப்பு: ஞாயிறு தன்னைச் சுற்றிவரும் கோள்களைத் தன் ஈர்ப்பு ஆற்றற் சூழலிலும் பேரொளியிலும் அடங்கக்கொண்டு, அவற்றைத் தொழிற்படுத்துதல் போல, இறைவன் உலகுயிர்களைத் தன் அருளாற்றலின் அகப்படுத்தி ஐந்தொழிற்படுத்துவன் எனக்கொள்க.

ஞாயிறுபோல முதல்வன் உளன்; ஞாயிற்றின் ஒளியை அல்லது ஈர்ப்பு ஆற்றலைப்போல அவன்றன்அருளாற்றல் அல்லது சத்தி உள்ளது. இதனால்தான் முதற்பொருளை அம்மையப்பராகக் கருதுகின்றனர் மெய்யுணர்ந்தோர்.

முதல்வனுக்கு உலகு உயிர்களோடு உள்ள சம்பந்தம் அத்துவிதம் (இருமையின் ஒருமை) எனப்படும். முதல்வனுக்கும் அவன்றன் சத்தியாகிய அருளாற்றலுக்கும் உள்ள சம்பந்தம் தாதான்மியம் (ஒருமையின் இருமை) எனப் படும்.

முன் இரண்டு சூத்திரங்கள், இவ்வாறு இறைவன் உண்மையினையும் இயல்பினையும் காணப்படும் உலகைக் காட்டி உய்த்துணர வைக்கின்றன. இஃது அண்டத்தின் வைத்து உணர்த்துவது. இனி, அடுத்துவரும் சூத்திரங்கள் உயிரின் இயல்பை நம் உடம்பின் நிகழ்ந்துவரும் உணர்வு நிகழ்ச்சிகளை நோக்கி உணரவைத்து (பிண்டத்தில் வைத்து) விளக்குகின்றன.

## மூன்றாஞ் சூத்திரம் :

உடம்புதோறும் காணப்படும் ஒழுங்கு பட்ட அறிவு செயல்களுக்கு மூலமாய் யான் என்னும் உணர்வு வடிவில் விளங்குவதே உயிர் அல்லது ஆன்மா எனப்படும், அதனை யாதோ என ஆராய்ந்த பலர் பலவகைப்படக் கூறியுள்ளனர்.

(1) அஃது இன்னது என அறிய வாராமையின், அதனைச் சூனியம் என்றனர் புத்தர்; (2) உடம்பையே யான் என வழங்கி வருதலின், உடம்பே ஆன்மா என்றனர் உலக வாதிகளுள் ஒரு சாரார்; (3) அவருள் மற்றொரு சாரார் ஐம்பொறிகளே அறியக் காண்டலின், அப் பொறிகளே ஆன்மா என்றனர். (4) உயிர்ப்பு இல்லையாயின் உயிரில்லை எனக் கோடலின், உயிர்ப்பாகிய பிராணவாயுவே ஆன்மா என்றனர் ஒரு சாரார், (6) நாம் கண்ட வற்றையும் கேட்டவற்றையும் மனத்துக்கொண்டு, சிந்தித்து நிச்சயித்து, இன்பத்துன்ப வேதனைப்படுதலின்,

இவை அகத்தே நிகழ்வன ஆதலின், இவ்வாறு சிந்தித்தல், துணிதல், வேதனைப்படல் என்னும் தொழிற்பாடுள்ள உள்ளத்தின் கூறுபாடுகளாகிய அந்தக்கரணங்களே (மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அகக்கருவிகள்) ஆன்மா என்றனர் வேறொரு சாரார்; (6) கனவின்கண் நுண்ணுடல் கொண்டு நனவிற்போலக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்து வருதலின், அதற்குக் காரணமாகவுள்ள நுண்உடம்பே ஆன்மா என்றனர் மற்றொரு சாரார்; (7) ''பிரஞ் ஞானம் பிரம்ம'' என உபநிடதம் கூறலின், சச்சிதானந்த மயமாயுள்ள பிரம்மமே ஆன்மா என்றனர் சங்கரர் முதலாயினர்; உடலின் கூறுகள் உளத்தின் கூறுகள் அனைத்தும் ஒருங்குகூடி ஒழுங்குபட இயங்கும்போதே நமக்கு உணர்வு உண்டாகின்றது: அல்லாதபோது உணர்வு இல்லை; ஆதலின் அகப்புறக் கருவிகள் அனைத்தின் கூட்டமே ஆன்மா; இவற்றுக்கு வேறாக ஆன்மா என ஒன்றில்லை என்றனர் புத்தரில் ஒரு சாரார்;

இந்த எண்மர் மதங்களில், எழுவர் மதம் மூன்றாஞ் சூத்திரத்தால் மறுக்கப்பட்டு, ஆன்மாவின் உண்மை தெளிவிக்கப்படுகின்றது. அந்தக் கரணங்களே ஆன்மா என்பார் மதம் நான்காஞ் சூத்திரத்தால் மறுக்கப்படுகிறது.

## மூன்றாஞ் சூத்திரத்தின் பொருள் வருமாறு :

(1) ஆன்மா சூனியம் அன்று; பலவகையால் எது ஆன்மா என ஆராய்ந்து, முடிவில் சூனியமே ஆன்மா எனத் துணியும்போது, அவ்வாறு துணியும் அறிவு உள்ளது அல்லவா. அவ்வறிவே ஆன்மா என உணரத்தக்கது.

(2) பரு உடல் ஆன்மா அன்று, என் ஊர், என் வீடு, என் மனைவி, என் ஊர், வீடு, மனைவி முதலிய உடைமைகளை நமக்கு வேறாக உணர்கிறோம் அல்லவா? அதுபோல, என் கை, என் உடம்பு என இந்த உடம்பு நமக்கு வேறாக உணரப்படுகின்றது, ஆதலால், யான் என்னும் உணர்வுவடிவில் விளங்கும் ஆன்மா இவ்வுடம்புக்கு வேறாக உள்ளது.

(3) ஐம்பொறிகள் ஆன்மா அல்ல! கண் காணும்; ஆனால் கேளாது; செவி கேட்கும்; ஆனால் காணாது. இங்ஙனம் ஐம்பொறிகளுள் ஒன்று அறிந்ததை மற்றொன்று அறிவதில்லை. ஆயின், ஒரு பழத்தைக் கண்டு, வாங்கி, மோந்து சுவைத்து நுகரும்போது, கண்ட யானே வாங்கினேன்; பின் அதனை மோந்தேன்; பின் சுவைத்து உண்டேன்—எனச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புலன் உணர்வும் ஒரே அறிவின்கண் இணைந்து தொடர்புபட நிகழ்தலின் இவ்வாறு அறிவதாகிய ஆன்மா ஐம்பொறிகளுக்கும் வேறாதல் வேண்டும்.

(4) கனவுடலாகிய நுண்உடம்பு ஆன்மா அன்று; கனவின்கண் கண்டவற்றை நனவின்கண் தெளிய உணரமாட்டாது மயங்கி அரைகுறையாகவும் வேறுபடவும் உணர்கின்றோம். கனவுடம்பே ஆன்மா ஆயின், நனவின்கண் இம்மருட்கை உளதாகாது. நனவில் பருவுடம்பிற்பட்டும், கனவில் நுண்ணுடம்பிற்பட்டும் உணர்தல்பற்றி உடம்பு வேறுபாடு - கரண வேறுபாடு இருத்தலால்தான் ஈரிடத்தும் அறிவு வேறுபட நிகழ்கின்றது. ஆதலின், இனி கனவில் நுண்ணுடம்பைப் பற்றுவதாகவும், நனவில் அதை விட்டுப் பருவுடம்பைப் பற்றுவதாகவும் உள்ள அறிவு (ஆன்மா) அவை இரண்டிற்கும் வேறேயாம்,

(5) பிராணவாயு ஆன்மா அன்று நனவு, கனவு, உறக்கம் மூன்றிலும் பிராணவாயு ஒரு படித்தாக இயங்குதலைக் காண்கிறோம். நனவில் பருவுடம்பு தொழிற்படுகிறது; இன்பத்துன்ப நுகர்ச்சிக்குக் காரணமாக அது நிகழ்கின்றது; ஆனால் உறக்கத்தில் பருவுடம்பின்கண் தொழிற்பாடும் இன்பத் துன்ப நுகர்ச்சியும் நிகழவில்லை. பிராணவாயுவே ஆன்மாவாயின், நனவு, கனவு, உறக்கம் மூன்றிலும் இன்ப துன்ப நுகர்ச்சியும் தொழிற்பாடும் பருவுடம்பில் ஒரே மாதிரி நிகழவேண்டும். அவ்வாறு நிகழாமையின், பருவுடம்பு, கனவுடம்பு, மனம் புத்தி அகங்காரம் என்னும் அகக்கருவிகள்—என்பவற்றுடன் கூடியும் பிரிந்தும் அவத்தைப்படும் ஆன்மா பிராண வாயுவுக்கு வேறேயாம்.

(6) பிரமம் ஆன்மா அன்று; முதற்பொருளாகிய பரப்பிரமம் இயற்கை முற்றுணர்வுடை

யது. எக்காலத்தும் எல்லாப் பொருள்களையும் ஒரு படித்தாக அறிந்து நிற்பது. ஆயின், உடம்புதோறும் யான் என நிகழும் உணர்வு உணரும் செயற்கைச் சிற்றறிவாக உள்ளது, இஃது உடம்பில் உள்ள கருவிகளால் அறிவு விளங்கப்பெறுவது; நனவு நிலையிலும், நூல் ஆசிரியன், உடன்பயில்வோர், உலக அனுபவம் என்னும் உதவிகளால் படிமுறையில் ஐயமும் மருட்கையும் நீங்கி அறிவு வளரப்பெறுவது. ஆதலால், ப்ரபஞ்சத்திற்கு வேருக அதன் உதவியைப் பெறுவது ஆன்மா என்பதே உண்மை நூல்களின் துணிபு.

148686.

(7) உடம்பு முதலாகவுள்ள கருவிகளின் கூட்டமே ஆன்மா என்றலும் பொருந்துவதன்று; அக்கருவிகளெல்லாம் கலைமுதலாக நிலம்வரை முப்பத்தொரு பெயர்பெறும்; அவற்றைத் தொகுத்துக் காணும்போதும் பருவுடம்பு நுண்ணுடம்பு, பரவுடம்பு எனப் பெயர் பெறுவதில்லை. ஆதலின், "இது" எனச் சுட்டப்படும் பொருள்கள் அனைத்திற்கும் வேருய், அவ்வாறு பிறபொருள்களைச் சுட்டி உணர்ந்து அவற்றில் அழுந்தியும், 'இது நான் அன்று' என அவற்றின் நீங்கியும் அவத்தைப்பட்டுவரும் உணர்வே ஆன்மா. அது கண்ணுக்குக் கண்ணாடிபோல நின்று உதவும் மாயா காரியமாகிய பொருள்களுள் ஒன்றும் அன்று; முதல்வன் மாயையைக் கடந்து நிற்பவன் ஆதலின், முதல்வன் ஆதலும் இன்று; மாயா காரியத்திற்கும் முதல்வனுக்கும் வேருய், அவ்விரண்டாலும் பயன்கொள்ளும் மூன்ருவது பொருளாம்,

குறிப்பு - ஊன்றி நோக்கின், நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாஞ்சை, வேதாந்தம், என்னும் ஆறு தரிசனங்களிலும் உலகாயதம், பௌத்தம், சமணம் என்னும் புறச் சமயங்களிலும் கூறப்படும் பதார்த்த நியமனம் எல்லாம் இதுகாறும் சுருக்கமாக விளக்கப்பட்ட மூன்று சூத்திரப் பொருள் நிலையில் அடங்கிமறுப்புண்டு போதல் விளங்கும்.

(தொடரும்)





வடாற்காடு மாவட்டம்: செய்யாறு வட்டம் சுருட்டல் கிராமத்தில், ஸ்ரீசங்கரேசுவரர் கோயிலின் மகா கும்பாபிஷேக விழாவில், ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் புதுப் பெரியவர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கும் காட்சிகள் (18.11.70)



சென்னைக்கு அருகேயுள்ள திருவேற்காடு ஸ்ரீ தேவிகருமாரி அம்மன் சந்நிதிக்குத் தமிழக அரசின் அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, B. A., அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B A., B.L,, I.A.S., திரு. D. இராசரத்தினம், M.L.A, முதலிய பெருமக்கள் வருகை தருதலும், நமது அறநிலைய அமைச்சர் அவர்கள், ஸ்ரீதேவி கருமாரி அம்மன் இல்ல மாணவர்களுக்குச் சீருடை வழங்குதலும் (27-10-70).





சுவாமி விவேகானந்தர் நினைவாலயத் திறப்புவிழாவில், நமது குடியரசுத் தலைவர் மாண்புமிகு திரு. வி. வி. கிரி அவர்களும், தமிழக முதல்வர் மாண்புமிகு திரு. கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்து மகிழ்தல் (29-8-70)





அண்மையில் வெள்ளத்தால் இடர்ப்பட்டவர்களுக்குப் பல திருக்கோயில்கள் வழங்கிய உதவி நிதியைத் தஞ்சைத் துணை ஆணையர் திரு. ஜி ஆதிமூலம், B.A., B.L. அவர்கள் நமது தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் மாயூரத்தில் தங்கியிருந்தபொழுது நேரில் கொடுத்தல் (15-12-1970)

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras - 34.
Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras - 3.